www.Padasalai.Net www.TrbTnpsc.com




Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

## சுராவின்

# பொருளியல்*

## மேல்நிலை - முதலாம் ஆண்டு

### சிறப்பம்சங்கள் :

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- அனைத்துப் பாடப்பகுதிகளிலும் மிகுதியான அளவில் கூடுதல் வினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.
- கொள்குறி (Objective) வகையிலான 1 மதிப்பெண் வினாக்கள் கீழ்கண்ட தலைப்புகளில் தரப்பட்டுள்ளன.
  1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்
  2. பொருத்துதல்
  3. கோடிட்ட இடத்தை நிரப்புதல்
  4. பொருந்தாததை கண்டறிதல்
  5. கூற்று மற்றும் காரணம்
  6. சரியான கூற்றைக் கண்டறிதல்
- அரசு மாதிரி வினாத்தாள் *[Govt. MQP-2018]*, முதல் பருவ இடைத்தேர்வு *[First Mid-2018]*, காலாண்டுத் தேர்வு *[QY-2018 & 2019]*, அரையாண்டுத் தேர்வு *[HY-2018 & '19]*, அரசு பொதுத் தேர்வு மார்ச் 2019, 2020 & மே 2022 *[March-'19, 2020 & May-'22]*, அரசு துணைத்தேர்வு செப்டம்பர் *[Sep-2020 & 2021]*, திருப்புதல் பொதுத்தேர்வு 2022 *[CRT-'22]*, உடனடித் தேர்வு ஆகஸ்ட் 2022 *[Aug-'22]* மற்றும் பொதுத்தேர்வுக்கான முக்கிய வினாக்கள் *[BEQ]* ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- உடனடித் தேர்வு ஆகஸ்ட் 2022 வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**சுரா பப்ளிகேஷன்ஸ்**
*சென்னை*

**For Orders Contact**
80562 94222 / 81242 01000 / 81243 01000
96001 75757 / 78718 02000 / 9840926027

orders@surabooks.com Ph:8124201000/8124301000

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net
www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

**2023-24** புதிய பதிப்பு
© வெளியீட்டாளர்கள்

ISBN : 978-93-5330-556-7
**குறியீட்டு எண் : SG 214**

எழுதி வழங்கியவர்
**A. முகம்மது** M.A., M.Phil., B.Ed.,
PG Assistant

**Our Guides for XI & XII Standard**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

# பதிப்பாசிரியர் உரை

11ம் வகுப்பிற்கான சுராவின் **பொருளியல்** வழிகாட்டியை வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். பொருளியல் பாடங்களுக்கான வினா விடைகள் /பயிற்சிகள் மிகவும் எளிமையாக, சுலபமாக புரிந்துகொள்ளும் விதத்தில் தரப்பட்டுள்ளன.

சுராவின் பொருளியல் வழிகாட்டி மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாடநூலை நன்கு மதிப்பாய்வு செய்து மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் வெகுவாக உட்கிரகித்து அறிந்துகொண்டு தேர்வை சுலபமாக எழுதி அதிக மதிப்பெண்களைப் பெற்று வெற்றியாளர்களாகும் விதத்தில், நமது வெற்றிக்கான இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு பாடம் நடத்துவதிலும், மாணவர்களுக்குக் கற்றுக்கொள்வதிலும் இந்த வழிகாட்டி துணையாக இருக்கும்.

நமது சுராவின் பொருளியல் வழிகாட்டியில் இது போன்ற பல சிறப்பம்சங்கள் அடங்கியிருந்தாலும், பொருளியல் பாடத்தை மாணவர்கள் புரிந்துகொள்ள உதவிடும் ஆசிரியர்களின் பணியும் மகத்தானது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
- பதிப்பகத்தார்

***வாழ்த்துக்கள் !!!***

**தலைமை அலுவலகம்**
**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phones :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**e-mail :** orders@surabooks.com
**website :** www.surabooks.com

**For Orders Contact**
80562 94222
81242 01000
81243 01000
96001 75757
78718 02000
9840926027

24/11/2022



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

# பொருளடக்கம்


| பாட எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | நுண்ணினப் பொருளியல் : ஓர் அறிமுகம் | 1 - 20 |
| 2. | நுகர்வுப் பகுப்பாய்வு | 21 - 42 |
| 3. | உற்பத்தி பகுப்பாய்வு | 43 - 64 |
| 4. | செலவு மற்றும் வருவாய் பற்றிய ஆய்வு | 65 - 83 |
| 5. | அங்காடி அமைப்பும் விலை நிர்ணயமும் | 84 - 99 |
| 6. | பகிர்வு பற்றிய ஆய்வு | 100 - 118 |
| 7. | இந்தியப் பொருளாதாரம் | 119 - 138 |
| 8. | இந்தியப் பொருளாதாரம் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் | 139 - 154 |
| 9. | இந்தியாவின் மேம்பாடு அனுபவங்கள் | 155 - 167 |
| 10. | ஊரக பொருளாதாரம் | 168 - 181 |
| 11. | தமிழ்நாட்டுப் பொருளாதாரம் | 182 - 195 |
| 12. | பொருளியலுக்கான கணித முறைகள் | 196 - 212 |
| | உடனடித் தேர்வு ஆகஸ்ட் 2022 வினாத்தாள் விடைகளுடன் | 213 - 220 |




www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

அத்தியாயம் 1

# நுண்ணினப் பொருளியல் : ஓர் அறிமுகம்

## பொருளடக்கம்

1.1 அறிமுகம்
1.2 பொருளியல் : பொருள்
1.3 பொருளியல் : அதன் தன்மைகள்
1.3.1 செல்வ இலக்கணம் : ஆடம் ஸ்மித்
1.3.2 நல இலக்கணம் : ஆல்ஃபிரட் மார்ஷல்
1.3.3 பற்றாக்குறை இலக்கணம் : இலயனல் இராபின்ஸ்
1.3.4 வளர்ச்சி இலக்கணம் : சாமுவேல்சன்
1.4 பொருளியலின் எல்லை
1.4.1 பொருளியல் : பாடப்பொருள்
1.4.2 பொருளியல் என்பது ஒரு கலை மற்றும் அறிவியல்
1.4.3 பொருளியல் : இயல்புரை அறிவியல் மற்றும் நெறியுரை அறிவியல்
1.5 பொருளியலின் அடிப்படைக் கருத்துக்கள்
1.5.1 பண்டங்கள் மற்றும் பணிகள்
1.5.2 பயன்பாடு
1.5.3 விலை
1.5.4 அங்காடி
1.5.5 செலவு
1.5.6 வருவாய்
1.5.7 சமநிலை
1.5.8 வருமானம்
1.6 பொருளியல் முறைகள், கூறுகள், கோட்பாடுகள் மற்றும் விதிகள்
1.6.1 பொருளியல் ஆய்வு முறைகள் : பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு
1.6.2 பொருளாதார உண்மைகளும், கோட்பாடுகளும்
1.6.3 பொருளியல் விதிகளின் இயல்புகள்
1.7 பொருளியலின் உட்பிரிவுகள்
1.7.1 நுகர்வு
1.7.2 உற்பத்தி
1.7.3 பரிமாற்றம்
1.7.4 பகிர்வு
1.8 பொருளியலின் வகைகள்
1.8.1 நுண்ணியல் பொருளியல்
1.8.2 பேரியல் பொருளாதாரம்
1.8.3 பன்னாட்டுப் பொருளாதாரம்
1.8.4 பொது நிதிப் பொருளாதாரம்
1.8.5 வளர்ச்சிப் பொருளாதாரம்
1.8.6 சுகாதாரப் பொருளாதாரம்
1.8.7 சுற்றுச் சூழல் பொருளாதாரம்
1.9 அடிப்படைப் பிரச்சினைகள்
1.10 உற்பத்தி வாய்ப்பு வளைகோடு
1.11 தொகுப்புரை



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



# கருத்து வரைபடம்

## 1. நுண்ணினப் பொருளியல் : ஓர் அறிமுகம்

**பொருளியல் : பொருள்**

- **பொருளியல் அதன் இயல்புகள்**
  - செல்வ இலக்கணம் : ஆடம்ஸ்மித்
  - நல இலக்கணம் : ஆல்ஃபிரட் மார்ஷல்
  - பற்றாக்குறை இலக்கணம் : இலயனல் இராபின்ஸ்
  - வளர்ச்சி இலக்கணம் : சாமுவேல்சன்
- **பொருளியலின் எல்லை**
  - பொருளியல் : பாடப்பொருள்
  - பொருளியல் என்பது ஒரு கலை மற்றும் அறிவியல்
  - பொருளியல்: இயல்புரை அறிவியல் மற்றும் நெறியுரை அறிவியல்
- **பொருளியலின் அடிப்படைக் கருத்துக்கள்**
  - பண்டங்கள் மற்றும் பணிகள்
  - பயன்பாடு
  - விலை
  - அங்காடி
  - செலவு
  - வருவாய்
  - சமநிலை
  - வருமானம்
- **பொருளியல் முறைகள், கூறுகள், கோட்பாடுகள் மற்றும் விதிகள்**
  - பொருளியல் ஆய்வு முறைகள் : பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு
  - பொருளாதார உண்மைகளும் கோட்பாடுகளும்
  - பொருளியல் விதிகளின் இயல்புகள்
- **பொருளியலின் உட்பிரிவுகள்**
  - நுகர்வு
  - உற்பத்தி
  - பரிமாற்றம்
  - பகிர்வு
- **பொருளியலின் வகைகள்**
  - நுண்ணியல் பொருளியல்
  - பேரியல் பொருளாதாரம்
  - பொதுப் பொருளாதாரம்
  - வளர்ச்சி பொருளாதாரம்
  - சுகாதாரப் பொருளாதாரம்
  - சுற்றுச்சூழல் பொருளாதாரம்

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



# முக்கியக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **பொருளியல்** | : | பொருளியல் (Economics) என்ற சொல் ஆய்க்கனோமிக்ஸ் (Oikonomikos) என்னும் பழமையான கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. 'பொருளியல்' என்றால் 'இல்லங்களின் நிர்வாகம்' என்று பொருள். |
| **ஆய்க்கோஸ் (Oikos)** | : | 'ஆய்க்கோஸ்' என்றால் இல்லங்கள் என்று பொருள். |
| **நேமோஸ் (Nomos)** | : | நேமோஸ் என்றால் நிர்வாகம் என்று பொருள். |
| **நாடுகளின் செல்வம்** | : | ஆடம்ஸ்மித்தின் நூலான "நாடுகளின் செல்வம் (1776)" – வெளியீட்டுக்குப்பின் பொருளியல் ஒரு தனி இயலாக உருவானது. |
| **பொருளியலின் எல்லை** | : | பொருளியலின் எல்லை என்பது பாடப் பொருளாகும். |
| **பொருளியல் ஒரு கலை** | : | கலை என்பது நடைமுறையில் உள்ள ஒரு குறிப்பிட்ட இலக்குகளை அடைய அறிவைப் பயன்படுத்துவதாகும். பொருளியல் அனைத்து பொருளாதார பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வழிகாட்டுகிறது. |
| **பொருளியல் ஓர் அறிவியல்** | : | அறிவியல் என்பது ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட ஓர் அறிவுத் தொகுதியாகும். |
| **பொருளியல் என்பது ஒரு கலை மற்றும் அறிவியல்** | : | பொருளியல், பிரச்சினைகளுக்கான காரண விளைவுகளுக்கு இடையேயுள்ள உறவுகளைப் பற்றி ஆராய்கிறது, ஆகையால் பொருளியல் கலை மற்றும் அறிவியலாக கருதப்படுகிறது. |
| **இயல்புரை அறிவியல்** | : | இயல்புரை அறிவியல், 'உள்ளதை உள்ளவாறு' கூறுகிறது. |
| **நெறியுரை அறிவியல்** | : | நெறியுரை அறிவியல், 'எதுவாக இருக்க வேண்டும்' என்ற வினாவிற்கு விடையளிப்பதாக உள்ளது. |
| **பொருளியலின் அடிப்படைக் கருத்துக்கள்** | : | மற்ற அறிவியல்களைப் போன்றே பொருளியலிலும் அதன் கோட்பாடுகளை விளக்கும் சில கருத்துக்கள் உள்ளன. |
| **பண்டங்கள் மற்றும் பணிகள்** | : | பண்டங்கள் மற்றும் பணிகள் ஆகிய இரண்டும் மனித விருப்பங்களை பூர்த்தி செய்கின்றன. |
| **பொது பொருட்கள்** | : | பொருள்களுக்கான விலையைக் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், அப்பொருள் அனைவரின் நுகர்விற்கும் கிடைக்கும். |
| **தனியார் பொருட்கள்** | : | தனி ஒருவரால் மட்டும் நுகரக் கிடைக்கும். |
| **நுகர்வோர் பண்டங்கள்** | : | நுகர்வோர் பண்டங்கள் என்பது நேரடியாக மனித விருப்பங்களை நிறைவேற்றுவதாகும். (எ.கா.) வாகனங்கள். |
| **மூலதன பண்டங்கள் (உற்பத்தியாளர்கள் பண்டங்கள்)** | : | மூலதன பண்டங்கள் என்பவை நேரடியாக நுகர்வோருக்கு மனநிறைவு தருவதில்லை. இது நுகர்வோர் பண்டங்களைத் தயாரிக்க பயன்படுகின்றன. (எ.கா.) இயந்திரங்கள். |
| **அழியும் பண்டங்கள்** | : | விரைவில் அழியக்கூடிய பண்டங்கள் அழியும் பண்டங்கள் ஆகும். இதன் ஆயுட்காலம் குறைவானது. (எ.கா.) பூக்கள், பழங்கள். |
| **நீடித்து இருக்கக் கூடிய பண்டங்கள்** | : | விரைவில் அழியக்கூடிய பண்டங்களைவிட நீடித்து இருக்கக்கூடிய பண்டங்கள். இதன் ஆயுட்காலம் நீண்டது. (எ.கா.) மேசை. |
| **பணிகள்** | : | பண்டங்களோடு சேர்த்து பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப்படுகின்றன. |
| **பயன்பாடு** | : | பொருளியலில் மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் ஆற்றலே பயன்பாடு எனப்படும். |
| **அறிவுப் பயன்பாடு** | : | அறிவுப் பயன்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட ஒன்றைப் பற்றி பெறும் அறிவாகும். |
| **பயன்பாட்டை அளவிடுதல்** | : | மனிதனின் விருப்பம், நுகர்வின் போது நிறைவடைகிறது. நுகர்வோர் பெறும் பயன்பாடு யுடில்ஸ் (utils) என்று அளவிடப்படுகிறது. |
| **விலை** | : | பண்டங்களின் மதிப்பை பணத்தால் குறிப்பிட்டால் அது விலை எனப்படும். |
| **அங்காடி** | : | அங்காடி என்பது பொருட்களை வாங்குவதும், விற்பதும் நடைபெறும் ஒரு இடமாகும். |

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



# இலக்கணம்

| | | |
|---|---|---|
| **பகுத்தாய்வு முறையின் இலக்கணம்** | : | பகுத்தாய்வு முறையானது (Deductive Method) பொதுக்கருத்திலிருந்து தனிக்கருத்தைப் பெறுவது ஆகும். தொன்மைப் பொருளியல் அறிஞரான ரிகார்டோ பகுத்தாய்வு முறையைப் பின்பற்றினார். |
| **தொகுத்தாய்வு முறையின் இலக்கணம்** | : | தொகுத்தாய்வு முறையானது (Inductive Method) தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்தைப் பெறுவதாகும். அறிவியல் தேடுதலில் தொகுத்தாய்வு முறையே சிறந்தது என்று பிரான்சிஸ் பேகான் (Francis Bacon) கூறுகிறார். |
| **ஆல்ஃபிரட் மார்ஷலின் பொருளியில் விதிகளின் இலக்கணம்** | : | ஆல்ஃபிரட் மார்ஷல் "பொருளியல் விதிகளை எளிய துல்லியமான புவிஈர்ப்பு விசை விதிகளோடு ஒப்பிடுவதை விட கடல் அலைகளின் விதிகளோடு ஒப்பிடலாம்" என்று குறிப்பிட்டுள்ளார். |
| **செலிக்மென் வருமான இலக்கணம்** | : | "பொருளியலில் வருமானம் என்பது பொருளியல் பண்டங்களிலிருந்து கிடைக்ககூடிய மன நிறைவினைக் குறிக்கும் என்று செலிக்மென் கூறுகிறார்". |
| **ஆடம் ஸ்மித்தின் செல்வ இலக்கணம்** | : | ஆடம் ஸ்மித் (1723 – 1790) "நாடுகளின் செல்வத்தின் இயல்பும், காரணங்களும் பற்றிய ஓர் ஆய்வு" (1776) என்ற தனது நூலில் "பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல்" என்று வரையறுத்துள்ளார். |
| **ஆல்ஃபிரட் மார்ஷலின் நல இலக்கணம்** | : | அரசியல் பொருளியல் அல்லது பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள் சார் நலனைஅடைவதின் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வது ஆகும். பொருளியல் ஒருபுறம் செல்வத்தைப் பற்றியும், முக்கியமான மற்றொருபுறம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது. |
| **இலயனல் இராபின்ஸ் பற்றாக்குறை இலக்கணம்** | : | இலயனல் இராபின்ஸ் பொருளியல் என்பது "விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியலே ஆகும்". |
| **சாமுவேல்சன் வளர்ச்சி இலக்கணம்** | : | பால் அந்தோணி சாமுவேல்சன் பொருளியல் என்பது, "மனிதனும், சமுதாயமும் பணத்தை பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ, மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு, பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து, அவற்றை தற்காலத்திலும் எதிர்காலத்திலும், மக்களுக்கிடையேயும் சமுதாயக் குழுக்களுக்கிடையேயும் நுகர்விற்காக எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதை தெரிவு செய்யும் இயலாகும்" என வரையறை செய்கிறார். |
| **பேரியல் பொருளாதாரம்** | : | J.M. கீன்ஸ், "வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடு" என்ற நூல் தற்கால பேரியல் பொருளாதாரத்திற்கு அடிப்படையாக விளங்குகிறது என்று கூறுகிறார். |
| **நெறியுரைப் பொருளியலின் இலக்கணம்** | : | "நெறியுரைப் பொருளியல் எதுவாக இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை வகுக்கும் இயல்" என்று ஆசிமாகாபுலூஸ் (Asimakopulos) கூறுகின்றார். |
| **நுண்ணியல் பொருளாதாரம் வரையறை** | : | தனி ஒரு பண்டத்தின் விலை, தனிப்பட்ட நிறுவனங்கள் அல்லது தொழில், தனிக்குடும்பங்கள் ஆகியவற்றைப் பற்றி ஆராய்வது நுண்ணியல் பொருளாதாரம் ஆகும். |
| **பென்ஹாமின் அங்காடி இலக்கணம்** | : | "நேரடியாகவோ அல்லது முகவர் மூலமாகவோ, வாங்குபவரும், விற்பவரும் சந்திக்கும் ஓர் இடமே அங்காடியாகும். எடுத்துக்காட்டாக மீன் சந்தை மீன்களை விற்கும் இடமாகும் இங்கு வாங்குவோரும் விற்போரும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர். அங்காடியில் ஒரு பகுதியில் கொடுக்கப்படும் விலையானது அதன் மறுபகுதியில் கொடுக்கப்படும் விலையைப் பாதிக்கும்" என்று பென்ஹாம் கூறுகின்றனார். |
| **கீன்சின் பொருளாதார இலக்கணம்** | : | J.M. கீன்ஸ் “அரசியல் பொருளாதாரம் தனது வரையறை மூலம் தனக்கு தானே குரல்வளையை நெரித்துக்கொள்கிறது” என்பதாக பொருளியலை அணுகுகிறார். |

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



# புத்தக வினாக்கள்

## மாதிரி வினாக்கள்

## பகுதி - அ

**சரியான (அல்லது) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளை பற்றி பொருளியல் ஆராய்கிறது என்று கூறியவர்.** *[May-'22]*

(அ) ஆடம் ஸ்மித் (ஆ) இலயனல் இராபின்ஸ்
(இ) ஆல்ஃபிரட் மார்ஷல் (ஈ) சாமுவேல்சன்

**[விடை. (இ) ஆல்ஃபிரட் மார்ஷல்]**

**2. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படைப் பிரச்சனை**

(அ) எண்ணற்ற விருப்பங்கள் *[BEQ] [QY-2018]*
(ஆ) அளவற்ற வளங்கள்
(இ) பற்றாக்குறை
(ஈ) நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உத்தி

**[விடை. (இ) பற்றாக்குறை]**

**3. நுண்ணியல் பொருளியல் எதை உள்ளடக்கியது?** *[BEQ] [First Mid - 2018][Sep-2020]*

(அ) ஒட்டு மொத்தப் பொருளாதாரம்
(ஆ) பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள்
(இ) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள்
(ஈ) ஒட்டு மொத்த பொருளாதாரத் தொடர்பு

**[விடை. (இ) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள்]**

**4. கீழ்க்கண்டவற்றில் எது நுண்ணியல் பொருளாதாரம் சார்ந்தது?** *[BEQ] [Govt. MQP-2018]*

(அ) கடந்த ஆண்டு உண்மை உள்நாட்டு உற்பத்தி 2.5% அதிகரித்துள்ளது.
(ஆ) கடந்த ஆண்டு 9.8% உழைக்கும் சக்தி வேலையின்மை நிலைப் பெற்றுள்ளது.
(இ) கோதுமையின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது.
(ஈ) கடந்த ஆண்டுபொது விலை 4% அதிகரித்துள்ளது.

**[விடை. (இ) கோதுமையின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது.]**

**5. பொருந்தா ஒன்றைக் கண்டறிக.** *[BEQ] [Govt. MQP-2018; First Mid - 2018; QY-2018]*

(அ) "நாடுகளின் செல்வங்கள் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை"
(ஆ) "பொருளாதாரக் கோட்பாடுகள்"
(இ) "பொருளாதார அறிவியலின் இயல்பும் அதன் சிறப்பும்"
(ஈ) "மற்றவை மாறாதிருக்கும்போது"

**[விடை. (ஈ) "மற்றவை மாறாதிருக்கும்போது"]**

**6. சமநிலை விலை என்பது அந்த விலையில்** *[HY - '19;CRT-'22]*

(அ) எல்லாம் விற்கப்படுகிறது
(ஆ) வாங்குபவர்கள் பணத்தை செலவிடுகின்றனர்
(இ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம்
(ஈ) மிகைத்தேவை பூஜ்ஜியம்

**[விடை. (இ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம்]**

**7. நாடுகளின் செல்வம் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை என்ற நூலின் ஆசிரியர்** *[Mar-'19; Aug-'22]*

(அ) ஆல்ஃபிரட் மார்ஷல் (ஆ) ஆடம் ஸ்மித்
(இ) இலயனல் ராபின்ஸ் (ஈ) பால் அ சாமுவேல்சன்

**[விடை. (ஆ) ஆடம் ஸ்மித்]**

**8. விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்றுவழிகளில் பயன்படத்தக்க சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றி பயில்கின்ற அறிவியலே பொருளியலாகும் என்று இலக்கணம் வகுத்தவர்.**

(அ) இலயனல் இராபின்ஸ் (ஆ) ஆடம் ஸ்மித்
(இ) ஆல்ஃபிரட் மார்ஷல் (ஈ) பால் அ சாமுவேல்சன்

**[விடை. (அ) இலயனல் ராபின்ஸ்]**

**9. பொருளாதாரத்தின் தந்தை யார்?** *[BEQ;HY-2018; Mar-2020;CRT-'22]*

(அ) மாக்ஸ் முல்லர் (ஆ) ஆடம் ஸ்மித்
(இ) கார்ல் மார்க்ஸ் (ஈ) பால் அ சாமுவேல்சன்

**[விடை. (ஆ) ஆடம் ஸ்மித்]**

**10. பொருளியல் என்பது ஒரு சமூகஅறிவியல் என்று கூறுவர். ஏனெனில்,**

(அ) காரணம் மற்றும் விளைவுகளுக்கிடையே உள்ள தொடர்பு
(ஆ) விதிகளை உருவாக்குவதற்கு தொகுத்தாய்வு முறையும், பகுத்தாய்வு முறையும் பயன்படுத்தப்படுகின்றன.
(இ) பரிசோதனைகள்
(ஈ) மேற்கூறிய அனைத்தும்

**[விடை. (ஈ) மேற்கூறிய அனைத்தும்]**

**11. பயன்பாடு என்பது** *[Mar-'19]*

(அ) தேவையும், அளிப்பும் சமமாக இருக்கும் சமநிலைப்புள்ளி
(ஆ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி
(இ) பண்டங்களின் மொத்த மதிப்பு
(ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விருப்பம்

**[விடை. (ஆ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி]**

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**12. அங்காடி என்பது** *[QY - '19; May-'22]*
(அ) பொருட்கள் வாங்கும் இடத்தை மட்டும் குறிக்கும்
(ஆ) பொருட்கள் விற்கும் இடத்தை மட்டும் குறிக்கும்
(இ) விலைகள் சரி செய்யும் இடத்தை மட்டும் குறிக்கும்
(ஈ) நபர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருட்கள் வாங்கும், விற்கும் முறையைக் குறிக்கும்.
**[விடை. (ஈ) நபர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருட்கள் வாங்கும், விற்கும் முறையைக் குறிக்கும்.]**

**13. எது பொருளாதார நல இலக்கணம் சார்ந்ததல்ல?**
(அ) சாதாரண மனிதனைப் பற்றிப் படிப்பது
(ஆ) பொருளாதாரம் செல்வம் மீது மட்டும் தனி கவனம் செலுத்துவதில்லை
(இ) பொருளாதாரம் என்பது பருப்பொருள் நலம் சார்ந்த படிப்பு
(ஈ) பொருளாதாரம் எண்ணற்ற விருப்பங்களையும், வரையறுக்கப்பட்ட வளங்களையும் பற்றியது.
**[விடை. (ஈ) பொருளாதாரம் எண்ணற்ற விருப்பங்களையும், வரையறுக்கப்பட்ட வளங்களையும் பற்றியது.]**

**14. வளர்ச்சி இலக்கணம் என்பது**
(அ) இயங்கு நிலை பொருளாதார கட்டமைப்பில் தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சனை
(ஆ) எண்ணற்ற வளங்கள் மற்றும் விருப்பங்களுக்கான பிரச்சனையாகும்.
(இ) செல்வத்தை உற்பத்தி செய்வது மற்றும் பகிர்வது
(ஈ) மனிதர்களின் பருப்பொருள் சார்ந்த நலன்
**[விடை. (அ) இயங்கு நிலை பொருளாதார கட்டமைப்பில் தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சனை]**

**15. பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியுள்ளது?** *[Sep-2021]*
(அ) விலைக் கோட்பாடு
(ஆ) வருமானக் கோட்பாடு
(இ) வேலைவாய்ப்புக் கோட்பாடு
(ஈ) வணிகக் கோட்பாடு
**[விடை. (அ) விலைக் கோட்பாடு]**

**16. ______ பரிமாற்ற மதிப்பைக் கொண்டுள்ளவை அவற்றின் உரிமையாளர் உரிமைகளை நிறுவவும், பரிமாற்றவும் முடியும்.** *[BEQ]*
(அ) பண்டங்கள் (ஆ) சேவைகள்
(இ) அங்காடிகள் (ஈ) வருவாய்
**[விடை. (அ) பண்டங்கள்]**

**17. பயன்பாட்டின் சரியான பண்புகளை அடையாளம் காண்க.**
(அ) இது பயனுக்கும் சமமானது.
(ஆ) இது நீதிநெறி முக்கியத்துவம் கொண்டது
(இ) இது மகிழ்வுக்கு சமமானது
(ஈ) இது நுகர்வோரின் மனநிலையைச் சார்ந்தது
**[விடை. (ஈ) இது நுகர்வோரின் மனநிலையைச் சார்ந்தது]**

**18. பற்றாக்குறைப் பொருளாதார இலக்கணத்தின் ஆசிரியர் யார்?** *[QY - '19]*
(அ) ஆடம் ஸ்மித் (ஆ) மார்ஷல்
(இ) ராபின்ஸ் (ஈ) ராபர்ட்சன்
**[விடை. (இ) ராபின்ஸ்]**

**19. தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்து பெறும் முறை** *[First Mid - 2018]*
(அ) பகுத்தாய்வு முறை (ஆ) தொகுத்தாய்வு முறை
(இ) இயல்புரை அறிவியல் (ஈ) நெறியுரை அறிவியல்
**[விடை. (ஆ) தொகுத்தாய்வு முறை]**

**20. விற்பனை செய்யும் பொருட்களை எதனால் பெருக்கினால் மொத்த வருவாய் கிடைக்கும்?** *[CRT & Aug-'22]*
(அ) விலை
(ஆ) மொத்தச் செலவு
(இ) இறுதி சமநிலை வருவாய்
(ஈ) இறுதி சமநிலைச் செலவு
**[விடை. (அ) விலை]**

## பகுதி - ஆ

### பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி.

**21. பொருளியல் என்றால் என்ன?** *[BEQ] [QY - '19; Sep-2020; Aug-'22]*
**விடை.** (i) 'பொருளியல்' என்றால் **இல்லங்களின் நிர்வாகம்** என்று பொருள்படும்.
(ii) பொருளியல் என்ற சொல் **ஆய்க்கனோமிக்ஸ்** என்னும் பழமையான கிரேக்க சொல்லிலிருந்து வந்தது.
(iii) ஆரம்பத்தில் அரசியல் பொருளாதாரம் என்று அழைக்கப்பட்ட இவ்வியல், பிற்பகுதியில் **'பொருளியல்'** என்று ஆல்ஃபிரட் மார்ஷலால் பெயர் மாற்றப்பட்டது.

**22. நுண் பொருளியல் என்றால் என்ன?** *[HY - '19;CRT-'22]*
**விடை.** (i) தனிப்பட்ட மனிதர்கள், இல்லங்கள் மற்றும் நிறுவனங்கள் அல்லது தொழில்களின் பொருளாதார நடவடிக்கைகளை நுண்ணியல் பொருளியல் என்கிறோம்.
(ii) பல்வேறுபட்ட சந்தை சூழலில் தொழில் நிறுவனங்கள், வாங்குபவர்கள், விற்பவர்கள் இணைந்து எவ்வாறு விலையைத் தீர்மானிக்கும் செயலில் ஈடுபடுகிறார்கள் என்பதை நுண்ணிய பொருளியல் தெளிவுபடுத்துகிறது.

**23. பண்டங்கள் என்றால் என்ன?**
**விடை.** (i) **மனித விருப்பத்தை நிறைவு செய்யும் எதுவும்** பொருளியலில் பண்டங்களாக கருதப்படுகின்றன.
(ii) பொருளியலில் பண்டங்கள் என்பது குறிப்பிட்டு சொல்லப்படாதவரை, பணிகளையும் சேர்த்தே "பண்டங்கள்" என்ற சொல் குறிக்கும்.

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**24. பண்டங்களை பணிகளிலிருந்து வேறுபடுத்துக.**

**விடை.** *[BEQ] [First Mid - 2018; QY-2018]*

| வ. எண் | பண்டங்கள் | பணிகள் |
|---|---|---|
| 1 | பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும். | பண்டங்களோடு சேர்த்து பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப்படுகின்றன. |
| 2 | பண்டங்களுக்கு உருவ அடையாளம் உண்டு. | பணிகளுக்கு உருவ அடையாளம் இல்லை. |
| 3 | பண்டங்கள் உரிமையாளரிடமிருந்து தனித்துக் காணப்படும். | பணிகளை உருவாக்குபவரிடமிருந்து பிரிக்க இயலாது. |

**25. பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகளைக் கூறுக.**

*[BEQ;First Mid & HY - 2018; May-'22]*

**விடை.** (i) வடிவப் பயன்பாடு.

(ii) காலப் பயன்பாடு.

**26. இயல்புரை அறிவியலின் இலக்கணத்தை வரையறுக்க.**

**விடை.** இயல்புரை அறிவியல் என்பது ஏன் மற்றும் எப்படி என்பதையும், நெறியுரை அறிவியல் எதுவாக இருக்க வேண்டும் என்பதையும் கூறுகிறது.

**27. பகுத்தாய்வு முறையின் பொருள் கூறுக.**

**விடை.** பகுத்தாய்வு முறை என்பது முழுமை தொகுதியினை பற்றிய கருத்தின் அடிப்படையில் அதன் தனி அலகு ஒன்றினைப் பற்றி கருத்துக் கூறுவதாகும். பகுத்தாய்வு முறையை பகுத்தறியும் முறை என்றும் கருத்தியலான முறை என்றும் கூறுவதுண்டு.

## பகுதி – இ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடையளி.**

**28. பொருளியலைப் பற்றிய பற்றாக்குறை இலக்கணத்தை விளக்குக. மேலும் அதனை மதிப்பீடு செய்க.**

*[BEQ; First Mid - 2018; Sep-2021]*

**விடை.** பொருளியல் என்பது "விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய **மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியலே**" ஆகும் என இலயனல் இராபின்ஸ் கூறியுள்ளார்.

**இராபின்ஸ் இலக்கணத்தின் முக்கிய சிறப்பியல்புகள் :**

(i) மனித விருப்பங்கள் எல்லையற்றவை.

(ii) மனிதனின் எல்லையற்ற தேவைகளை பூர்த்தி செய்யும் வளங்களின் அளிப்பு பற்றாக் குறையாக உள்ளன.

(iii) பற்றாக்குறையான வளங்கள் மாற்று வழிகளில் பயன்தரக்கூடியவையாக உள்ளன.

**திறனாய்வு :**

(i) இராபின்ஸ் மனிதர்களுக்கு நலன் தரக்கூடிய பொருட்கள் அல்லது நலன்தரா பொருட்கள் என்று தரம் பிரிக்கவில்லை.

(ii) பொருளியல் என்பது நுண்ணியல் பொருளியல் கருத்துகளான வளங்களைப் பங்கிடுதல், பண்டங்களின் விலைத் தீர்மானம் ஆகியவற்றை மட்டுமே கூறுவது அல்ல. அது பேரியல் பொருளாதார நிகழ்வுகளான **தேசிய வருவாய்** எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதையும் உள்ளடக்கியது.

(iii) இவ்விலக்கணமானது பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் சார்ந்த கோட்பாடுகளை உள்ளடக்கவில்லை.

**29. "என்ன உற்பத்தி செய்ய வேண்டும்" என்பதற்கான முக்கிய முடிவுகள் யாவை?** *[BEQ; QY-2018]*

**விடை.** (i) உணவு, உடை, வீட்டுப் பொருட்கள் போன்றவற்றை அதிகம் உற்பத்தி செய்வதா? அல்லது ஆடம்பரப் பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்வதா?

(ii) விவசாயப் பொருட்களை அதிகம் உற்பத்தி செய்வதா? அல்லது தொழிற்சாலைப் பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதா?

(iii) வளங்களை, அதிகமாக கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு பயன்படுத்துவதா? அல்லது ராணுவப் பணிகளுக்கு பயன்படுத்துவதா?

(iv) நுகர்வுப் பண்டங்களை அதிகம் வைத்துக்கொள்வதா? அல்லது முதலீட்டுப் பண்டங்களை வைத்துக் கொள்வதா?

(v) அடிப்படைக் கல்விக்கு அதிகம் செலவு செய்வதா? அல்லது உயர்கல்விக்கு அதிகம் செலவு செய்வதா?

**30. பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறு வகைகளை விளக்குக.** *[BEQ; HY-2018;CRT & May-'22]*

**விடை.** பொருளாதார நடவடிக்கைகள் நுகர்வு, உற்பத்தி, பரிமாற்றம், பகிர்வு ஆகியவைகளாகும்.

**நுகர்வு :**

மனித விருப்பங்களை நிறைவு செய்யும் **நுகர்வு, பொருளாதார நடவடிக்கைகளின் துவக்கப் புள்ளியாக** விளங்குகிறது.

**உற்பத்தி :**

**உள்ளீடுகளை வெளியீடுகளாக** மாற்றும் செயல்பாடே உற்பத்தி எனப்படும்.

**பரிமாற்றம் :**

பரிமாற்றம் என்பது பல்வேறு அங்காடி அமைப்புகளின் மூலம் விலை தீர்மானிக்கப்படுவதோடு தொடர்புடையது.

**பகிர்வு :**

உற்பத்தி என்பது காரணிகளின் பங்களிப்பு மூலம் கிடைக்கும் விளைவாகும்.

**31. பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை.**

*[Sep-2020;CRT-'22]*

**விடை.** பணிகளின் இயல்புகள்,

(i) **புலனாகாதவை :**

✶ புலனாகாப் பொருட்களுக்கு உருவ அடையாளம் இல்லை. ஆனால் மற்ற பண்புகளோடு தொடர்புடையவை.

✶ (எ.கா.)அடையாள குறியீடு, நிறுவன நன்மதிப்பு.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**(ii) பலதரப்பட்டவை :**

* பணிகள் பல்வேறு இடங்கள் மற்றும் கலாச்சாரப் பின்னணியில் வேறுபடுகின்றன.
* (எ.கா.) இசை மற்றும் மருத்துவர் சேவை.

**(iii) பணிகளை உருவாக்குபவரிடமிருந்து பிரிக்க இயலாது:**

* பணிகள் அவற்றை செயல்படுத்துபவருக்கே உரியவை.
* (எ.கா) உழைப்பாளரிடமிருந்து உழைப்பை பிரிக்க இயலாது.

**(iv) அழியக்கூடியவை :**

* பண்டங்களை போன்று பணிகளை சேமித்து வைக்க இயலாது.
* (எ.கா.) மட்டை பந்து விளையாட்டை காண வழங்கப்பட்ட கட்டண விலை விளையாட்டு முடிந்த பிறகு பயன்தராது.

**32. பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?** *[Aug-'22]*

**விடை.** (i) பயன்பாடு **உளவியல் சார்ந்தது.**

(ii) பயன்பாடும், உபயோகமும் ஒன்றானவை அல்ல.

(iii) பயன்பாடு தனித்தும், சார்ந்தும் இருக்கும்.

(iv) பயன்பாடு மனித விருப்பத்தின் தீவிரத்தைச் சார்ந்தது.

(v) பயன்பாடு ஒரு உளவியல் கருத்தாகும்.

(vi) பயன்பாடு நீதிநெறி, ஒழுக்க நெறி முக்கியத்துவம் கொண்டதல்ல.

(vii) பயன்பாடும் மகிழ்ச்சியும் ஒன்றானவை அல்ல.

**33. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?** *[BEQ;Govt. MQP-2018;First Mid - 2018; Mar-'19; QY - '19; Sep-2021]*

**விடை.**

| வ. எண் | நுண்ணியப் பொருளியல் | பேரியல் பொருளியல் |
|---|---|---|
| 1 | தனிப்பட்ட பொருளாதார முகவர்களான உற்பத்தியாளர், நுகர்வோர் எடுக்கும் பொருளாதார முடிவுகளை விளக்குவது நுண்ணியல் பொருளியல் பிரிவு. | இந்த பிரிவு முழுப் பொருளாதாரத்தின் முழுத் தொகுதியையும் ஆராயும் பகுதிகள் கொண்டது. (உ.ம்) மொத்த உற்பத்தி, தேசிய வருவாய், மொத்த சேமிப்பு மற்றும் முதலீடு ஆகியன. |
| 2 | பொருளாதாரத்தின் சிறு பகுதிகளை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்கிறது. | நாட்டின் முழுப் பொருளாதாரத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்கிறது. |
| 3 | இப்பிரிவு தனியொரு பண்டம் மற்றும் காரணியின் விலை எவ்வித முறையில் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை விளக்குகிறது. | இது பொருளாதாரத்தின் பொது விலை நிலையோடு தொடர்புடையது. |
| 4 | இது விலைக்கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. | இது வருவாய் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. |
| 5 | தனிப்பட்ட நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளரது உத்தம அளவு குறிக்கோளுடன் தொடர்பு உடையது. | இது வளர்ச்சி முறையின் உத்தம அளவுடன் தொடர்புடையது. |

**34. இயல்புரை பொருளியல் மற்றும் நெறியுரை பொருளியலை ஒப்பிடுக.** *[BEQ] [HY - '19]*

**விடை.**

| வ. எண் | இயல்புரை பொருளியல் | நெறியுரை பொருளியல் |
|---|---|---|
| 1 | பண அளிப்பு அதிகரிப்பு பொருளாதாரத்தில் விலை ஏற்றத்தை ஏற்படுத்துகிறது. | பணவாட்டத்தை விட பணவீக்கமே மேலானது. |
| 2 | நீர்ப்பாசன வசதி மற்றும் இரசாயன உரங்களின் விரிவாக்கத்திற்கேற்ப உணவு தானிய உற்பத்தி அதிகரிக்கிறது. | வளர்ச்சி குறைந்த நாட்டில் ஆடம்பரப் பண்டங்களை அதிகமாக உற்பத்தி செய்வது நல்லதல்ல. |
| 3 | பிறப்பு வீத அதிகரிப்பும், இறப்பு வீத குறைவும் மக்கள் தொகை வளர்ச்சி வீதத்தில் பிரதி பலிக்கின்றன. | செல்வம் மற்றும் வருமானப் பகிர்விலுள்ள ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட வேண்டும். |

# பகுதி - ஈ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.**

**35. பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.** *[BEQ;Govt. MQP-2018; QY-2018; Sep-2020;CRT & May-'22]*

**விடை. (1) ஆடம்ஸ்மித்தின் செல்வ இலக்கணம் :**

(i) பொருளியல் என்பது **செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல்** என்று வரையறுத்துள்ளார்.

(ii) சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் தனது சுய நன்மைக்காகவும், இலாபத்தை முன்னேற்றவும் உழைக்கின்றான் என்று கூறுகிறார்.

**(2) நல இலக்கணம் : ஆல்ஃபிரட் மார்ஷல் :**

(i) பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள்சார் நலனை அடைவதின் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வதும் ஆகும்.

(ii) பொருளியல், **ஒருபுறம் செல்வத்தை பற்றியும் மறுபுறம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது.**

**(3) பற்றாக்குறை இலக்கணம் : இலயனல் இராபின்ஸ் :**

(i) பொருளியல் என்பது விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக் கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியலே ஆகும்.

(ii) மனிதர்களின் எல்லையற்ற தேவைகளை பூர்த்தி செய்யும் வளங்களின் அளிப்புகள் பற்றாக்குறையாக உள்ளன என்பதை இந்த இலக்கணம் கூறுகிறது.

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



# அரசு தேர்வு வினாக்கள்

## 1 மதிப்பெண்

**(i) கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பொதுக்கருத்திலிருந்து தனிக்கருத்து பெறும் முறை** *[BEQ] [HY-2018]*

(அ) பகுத்தாய்வு முறை
(ஆ) தொகுத்தாய்வு முறை
(இ) இயல்புரை அறிவியல்
(ஈ) நெறியுரை அறிவியல்

**[விடை. (அ) பகுத்தாய்வு முறை]**

**2. அடிப்படை பொருளியல் பிரச்சனை அல்லாதது** *[QY-2018]*

அ) என்ன உற்பத்தி செய்வது
ஆ) எவ்வாறு உற்பத்தி செய்வது
இ) யாருக்காக உற்பத்தி செய்வது
ஈ) சுற்றுச்சூழல் பொருளாதாரம்

**[விடை. (ஈ) சுற்றுச்சூழல் பொருளாதாரம்]**

**3. 'அரசியல் பொருளாதாரம்' என்ற நூலின் ஆசிரியர்** *[QY - '19]*

அ) ஆடம் ஸ்மித் ஆ) மார்ஷல்
இ) A.C. பிகு ஈ) F.A. வாக்கர்

**[விடை. (ஆ) மார்ஷல்]**

**(ii) கீழ்க்கண்ட கோடிட்ட இடத்திற்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. உற்பத்தி என்பது உள்ளீடுகளை வெளியீடுகளாக ______ முறை ஆகும்.** *[BEQ] [First Mid - 2018]*

அ) நுகர்வு ஆ) பகிர்வு
இ) மாற்றும் ஈ) பொதுநிலை
உ) பொதுநிதி

**[விடை. (இ) மாற்றும்]**

**2. ஆய்க்கோஸ் (Oikos) என்றால் ______ என்று பொருள்படும்.** *[BEQ] [First Mid - 2018]*

(அ) பாலிஸ்
(ஆ) நிர்வாகம்
(இ) இல்லங்கள்
(ஈ) மேற்கூறிய அனைத்தும்

**[விடை. (இ) இல்லங்கள்]**

## 2 மதிப்பெண்கள்

**1. பொருளியலின் பிரிவுகள் யாவை?** *[BEQ] [Govt. MQP-2018]*

**விடை.** (i) நுகர்வு (ii) உற்பத்தி
(iii) பரிமாற்றம் (iv) பகிர்வு

**2. ஏங்கலின் விதி என்றால் என்ன?** *[QY - '19]*

**விடை.** ஏங்கலின் விதியின்படி, "உணவுப் பண்டங்களுக்காக செலவிடப்படும் செலவின் சதவீதம், மொத்த செலவு (வருமான உயர்வின்போது) அதிகரிக்கும்போது குறையும்".

**3. அங்காடி என்றால் என்ன?** *[BEQ] [First Mid - 2018]*

**விடை.** (i) அங்காடி என்பது பொருட்களை வாங்குவதும், விற்பதும் நடைபெறும் ஒரு இடமாகும்.
(ii) பொருளியலில் அங்காடி என்பது ஒரு விலையில் பண்டங்களையும், பணிகளையும் பரிமாற்றம் செய்திட விற்போரும், வாங்குபவரும் இணைவதை குறிக்கும்.

**4. ஒரு சமுதாயத்தில் காணப்படும் அடிப்படைப் பிரச்சனைகள் யாவை?** *[CRT-'22]*

**விடை.** (i) என்ன உற்பத்தி செய்வது?
(ii) எவ்வாறு உற்பத்தி செய்வது.
(iii) யாருக்காக உற்பத்தி செய்வது?

**5. பண்டங்களை வகைப்படுத்துக.** *[May-'22]*

**விடை.** (i) இன்றியமையாத பண்டங்கள்.
(ii) வசதிப் பண்டங்கள்
(iii) ஆடம்பரப் பண்டங்கள்

## 3 மதிப்பெண்கள்

**1. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் ஏதேனும் மூன்று அனுமானங்களை எழுதுக.** *[BEQ] [First Mid - 2018]*

**விடை. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் அனுமானங்கள் :**
(i) காலத்தில் மாற்றம் இல்லை. வளைகோட்டின் நெடுகிலும் ஒரே காலம் நிலைத்திருக்கிறது.
(ii) உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் நிலையானது.
(iii) சமுதாயத்தில் முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது.


**2. நுண்ணினப் பொருளியலின் முக்கியத்துவத்தை விவரி.** *[BEQ] [QY-2018]*

**விடை.** (i) ஒரு பொருளாதாரத்தின் செயல்பாட்டை அறிந்துகொள்ள உதவுகிறது.
(ii) பொருளாதாரக் கொள்கைக்கான கருவிகளைத் தருகிறது.
(iii) பொருளாதார நலனின் நிலையை பற்றி ஆராய்கிறது.
(iv) வளங்களை திறன்பட பயன்படுத்த உதவுகிறது.
(v) பன்னாட்டு வாணிபத்தில் பயன்படுகிறது.
(vi) பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு பயன்படுகிறது.
(vii) வளங்களை உத்தம அளவில் பங்கிட பயன்படுகிறது.
(viii) முன்கணிப்பிற்கு அடிப்படையாக உள்ளது.
(ix) விலை நிர்ணயம் செய்ய உதவுகிறது.

## 5 மதிப்பெண்கள்

**1. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் பயன்களை விவரி.** *[QY-2018]*

**விடை. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் பயன்கள் :**




orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



(i) **தேர்ந்தெடுப்பின் பிரச்சனை :**
வளங்கள் பற்றாக்குறையாகவும், தேவைகள் எண்ணற்றவையாகவும் இருப்பதால் அதிக வருவாய் உள்ள குழுக்களுக்கும் குறைந்த வருவாய் உள்ள குழுக்களுக்கும் இடையே வளங்களைப் பங்கிடுதலில் சிக்கல்கள் எழலாம். உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டில் பல இணைப்புகள் (பலவாய்ப்புகள்) உள்ளதால் தெரிவு சார்ந்த பிரச்சினைகள் எழாது.

(ii) **பற்றாக்குறை எனும் கருத்து :**
உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் உதவியுடன் பற்றாக்குறை எனும் கருத்தை விளக்கலாம். எந்த ஒரு சமுதாயமும் குறிப்பிட்ட அளவிலான வளங்களை மட்டுமே பெற்றிருப்பதால், இருக்கிற தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஒரு குறிப்பிட்ட அளவிலேயே உற்பத்தி செய்ய முடியும் என்பதை நாம் அறிவோம். வளங்களின் பற்றாக்குறையினால் ஏற்படும் சிரமங்களை உற்பத்தி வாய்ப்பு வளைகோடு பிரதிபலிக்கிறது.

(iii) **மைய சிக்கல்களுக்கான தீர்வு :**
பொருளாதாரத்தின் மையமான சிக்கல்களுக்கு உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் மூலம் விளக்கம் அளிக்க முடியும். எதை எவ்வளவு உற்பத்தி செய்வது என்ற பிரச்சினைக்கான தீர்வு உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் எந்த பகுதியை தேர்ந்தெடுப்பது என்ற முடிவில் அடங்கியுள்ளது.

**2. அடிப்படை பொருளியல் பிரச்சனைகளை விவரி.**
*[BEQ;First Mid - 2018]*

**விடை. அடிப்படை பொருளியல் பிரச்சனைகள் :**

(i) விருப்பங்கள் எண்ணற்றவை
(ii) வளங்கள் பற்றாக்குறையானவை
❖ இலவசமாக கிடைப்பதல்ல
(iii) விருப்பங்களின் தெரிவு
(iv) பொருளியல்

பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு மக்கள் எவ்வாறு தங்களது விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறார்கள் என்பதைக் கூறுகிறது.

வளங்கள் ஏராளமாகவும், தேவைகள் சிலவாகவும் இருந்தால் பொருளாதாரப் பிரச்சினை இருப்பதில்லை. ஆனால் இத்தகைய சூழ்நிலை ஒருபோதும் இருப்பதில்லை. எப்போதும் வளங்கள் குறைவாகவும் நமது தேவை எண்ணிலடங்காதவையாகவும் இருக்கிறது. எனவே எல்லாச் சமுதாயத்திலும் சில தெரிவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**என்ன உற்பத்தி செய்வது? எவ்வளவு உற்பத்தி செய்வது?**

எந்த பண்டங்களை உற்பத்தி செய்வது? எவ்வாறு உற்பத்தி செய்வது? யாருக்காக உற்பத்தி செய்வது? எங்கு உற்பத்தி செய்வது? எவ்வளவு உற்பத்தி செய்வது? போன்ற வினாக்கள் எல்லாச் சமுதாயங்களிலும் எழுகின்றன. இவற்றிற்கான விடை சில முக்கியமான சிக்கலான முடிவுகளை சார்ந்துள்ளது :

அ) உணவு, உடை, வீட்டுப் பொருட்கள் போன்றவற்றை அதிகம் உற்பத்தி செய்வதா? அல்லது ஆடம்பரப் பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்வதா?

ஆ) விவசாயப் பொருட்களை அதிகம் உற்பத்தி செய்வதா? அல்லது தொழிற்சாலைப் பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதா?

இ) வளங்களை அதிகமாக கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு பயன்படுத்துவதா? அல்லது வளங்களை அதிகமாக ராணுவப் பணிகளுக்கு பயன்படுத்துவதா?

ஈ) நுகர்வுப் பண்டங்களை அதிகம் வைத்துக் கொள்வதா? அல்லது முதலீட்டுப் பண்டங்களை வைத்துக் கொள்வதா?

உ) அடிப்படைக் கல்விக்கு அதிகம் செலவு செய்வதா? அல்லது உயர்கல்விக்கு அதிகம் செலவு செய்வதா?

**எவ்வாறு உற்பத்தி செய்வது?**

ஒவ்வொரு சமுதாயமும் உழைப்புச் செறிவு மிக்க தொழில் நுட்பத்தை அதிகம் பயன்படுத்துவதா? அல்லது, மூலதனச் செறிவு மிக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதா? என்பதை முடிவு செய்ய வேண்டும். அதாவது உழைப்பை அதிகம் பயன்படுத்துவதா அல்லது இயந்திரத்தை அதிகம் பயன்படுத்துவதா என்று தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

**யாருக்காக உற்பத்தி செய்வது?**

ஒவ்வொரு சமுதாயமும் உற்பத்தி செய்த பண்டங்களை சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு எவ்வாறு பிரித்துக் கொடுப்பது? யார் அதிகம் பெறுகிறார்கள்? யார் குறைவாகப் பெறுகிறார்கள்? என்பதையும் அறிய வேண்டியுள்ளது. சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்ச நுகர்வுக்காவது பண்டங்கள் மற்றும் பணிகள் கிடைக்கின்றனவா? என்பதையும் உறுதி செய்ய வேண்டியுள்ளது.

ஒரு பொருளாதாரத்தில், உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளை தனி நபர்களுக்கு ஒதுக்கீடு செய்வது போன்ற பிரச்சினைகளையும் சமுதாயம் சந்திக்க வேண்டியுள்ளது.

**3. மார்ஷலின் நல இலக்கணத்தை ஆராய்க.**
*[BEQ;First Mid - 2018]*

**விடை. நல இலக்கணம் ஆல்ஃபிரட் மார்ஷல் :**

ஆல்ஃபிரட் மார்ஷல் (1842–1924) தன்னுடைய "பொருளியல் கோட்பாடுகள்" (1890) என்ற நூலில் பொருளியலை கீழ்வருமாறு வரையறுத்துள்ளார்:

"அரசியல் பொருளியல் அல்லது பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள் சார் நலனை அடைவதின் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வதும் ஆகும்.

பொருளியல் ஒருபுறம் செல்வத்தைப் பற்றியும், முக்கியமான மற்றொருபுறம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது."

**மார்ஷல் வரையறையின் சிறப்பம்சங்கள்:**

அ) அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் முதலும், முடிவுமானது செல்வமே என்று பொருளியலில் கருதப் படவில்லை.

ஆ) பொருளியல் சாதாரண மனிதனின் நடத்தையைப் பற்றியதே; அந்தச் சாதாரண மனிதர்கள் அன்பினால் கட்டுப்பட்டவர்களேயன்றி, உச்சபட்ச பணம் பெறுவதை நோக்கிச் செல்பவர்கள் அல்லர்.

இ) பொருளியல் ஒரு சமூக அறிவியல் ஆகும். அது சமுதாயத்தில் ஒருவர் மற்றொருவர் மீது செலுத்தும் ஆதிக்கத்தைப் பற்றிப் படிக்கிறது.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**திறனாய்வு**

**அ)** மார்ஷல், பொருள்சார் நலனுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்துள்ளார். அவர் பொருள்சாரா நலனைத் தரக்கூடிய மருத்துவர், ஆசிரியர் போன்றோரது பணிகளைக் கருத்தில் கொள்ளவில்லை. ஆனால், அவர்களது பணிகளும் மனித நலனை மேம்படுத்துகிறது.

**ஆ)** பொருள் சாரா பணிகளுக்கு வெகுமதியாக அளிக்கப்படும் பணத்தினைப் பற்றி, மார்ஷல் தனது கூலிக் கோட்பாட்டில் ஏதும் கூறாமல் புறக்கணித்துவிட்டார்.

**இ)** மார்ஷலின் இலக்கணமானது நலன் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், நலன் என்பது தெளிவுற வரையறுக்கப்படவில்லை. நலன் என்பது மனிதருக்கு மனிதர், நாட்டுக்கு நாடு, காலத்திற்குக் காலம் வேறுபடக் கூடியது. மக்கள் நலனை மேம்படுத்தும் மற்றும் மேம்படுத்தாத பொருட்களைப் பற்றி மார்ஷல் தெளிவாக வேறுபடுத்தி காட்டியுள்ளார்.

**ஈ)** எனினும், நலன் என்பது தனி மனிதனோ அல்லது மனிதர்களின் குழுவோ மகிழ்ச்சியாகவோ அல்லது வசதியாகவோ வாழ்வதாகும். தனிமனிதனின் நலன் அல்லது நாட்டின் நலனானது அந்த நாடு கொண்டுள்ள செல்வ இருப்பை மட்டுமே சார்ந்தது அல்ல. அது அந்நாட்டின் அரசியல், சமூக மற்றும் கலாச்சார நடவடிக்கைகளையும் சார்ந்ததாகும்.

**4. பொருளியலின் வகைகளை விவரிக்கவும்.** *[HY - '19]*

**விடை. பொருளியலின் வகைகள் :**

**நுண்ணியல் பொருளியல் :**

தனிப்பட்ட மனிதர்கள், இல்லங்கள் மற்றும் நிறுவனங்கள் அல்லது தொழில்களின் பொருளாதார நடவடிக்கைகளை நுண்ணியல் பொருளியல் எனப்படும்.

**பேரியல் பொருளாதாரம் :**

பேரியல் பொருளியல் நுண்ணியல் பொருளியலில் இருந்து சற்று மாறுபட்டது. இது ஒட்டு மொத்த பொருளாதார நடவடிக்கைகளை விளக்குகிறது. நாட்டு உற்பத்தி, பண வீக்கம், வேலையின்மை மற்றும் வரி போன்ற பல ஒட்டுமொத்தங்களைப் பற்றி படிக்கிறது.

**பன்னாட்டுப் பொருளாதாரம் :**

நவீன உலகில் எந்த ஒரு நாடும் தனிப்பட்ட நிலையில் வளர்ச்சி அடைய இயலாது என்று கருதப்படுகிறது. வெளிநாட்டு மூலதனம், முதலீடு (வெளிநாட்டு நேரடி முதலீடு) மற்றும் பன்னாட்டு வாணிபத்தின் மூலம் ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளோடு தொடர்பு கொண்டுள்ளன. இவற்றை பன்னாட்டுப் பொருளியல் விளக்குகிறது.

**பொது நிதிப் பொருளாதாரம் :**

பொதுநிதி என்பது வருமானம் அல்லது வருவாயை அதிகரிக்க பொது அதிகார அமைப்புகள் ஒன்றோடொன்று இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கையை விளக்குகிறது. பொதுச் செலவு, பொது வருவாய், பொதுக் கடன் மற்றும் நிதி நிர்வாகம் போன்றவை பொதுநிதியின் எல்லைகளாகும்.

**வளர்ச்சிப் பொருளாதாரம் :**

தலா வருமானம், மனித மேம்பாட்டு குறியீடு, மகிழ்ச்சி குறியீடு ஆகியவற்றின் அடிப்படையில் நாடுகள் வளர்ச்சி அடைந்த நாடுகள், வளர்ந்துவரும் நாடுகள், பின்தங்கிய நாடுகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

**சுகாதாரப் பொருளாதாரம் :**

சுகாதாரப் பொருளாதாரம் என்பது செயல்முறை பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகும். இது சுகாதாரக் குறியீடுகள், நோய் தடுப்பு மற்றும் நோய் நீக்கும் நடவடிக்கைகள், மருத்துவ ஆராய்ச்சி மற்றும் கல்வி, கிராமப்புற சுகாதாரப் பணி, மருந்து விலை கட்டுப்பாடு, பிரசவத்திற்கு பின்னரான தொடர்பான பாதுகாப்பு, மகப்பேறு மற்றும் குழந்தை சுகாதாரம், சுகாதாரத்திற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

**சுற்றுச்சூழல் பொருளாதாரம் :**

இயற்கை வளங்களின் இருப்பை சுரண்டுதல் மற்றும் சுற்றுச்சூழல் மாசு ஆகியன விரைவான பொருளாதார முன்னேற்றத்தின் விளைவான தீய விளைவுகளாகும். எனவே பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையே உள்ள உறவை ஆராயும் சுற்றுச்சூழல் பொருளாதாரத்தை படிப்பதும் அவசியமாகும்.

**5. பொருளியலின் பல்வேறு பிரிவுகளை விவரிக்கவும்.** *[QY - '19; May-'22]*

**விடை.** பொருளியல், நுகர்வு, உற்பத்தி, பரிமாற்றம், பகிர்வு ஆகிய உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

**(1) நுகர்வு :**

(i) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் நுகர்வு, பொருளாதார நடவடிக்கையின் துவக்க புள்ளியாக விளங்குகிறது.

(ii) மனித விருப்பங்களின் இயல்புகளின் அடிப்படையில், நுகர்வோரின் நடத்தை குறைந்துசெல் பயன்பாடு, நுகர்வோரின் உபரி போன்ற பல விதிகள் விளக்கப்பட்டுள்ளன.

**(2) உற்பத்தி :**

(i) உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றும் செயல்பாடே உற்பத்தி எனப்படும்.

(ii) நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் அமைப்பு மேலும் உள்ளீடு, வெளியீடுகளுக்கிடையேயான உறவு ஆகியவையாகும்.

**(3) பரிமாற்றம் :**

(i) பரிமாற்றம் என்பது பல்வேறு அங்காடி அமைப்புகளின் மூலம் விலை தீர்மானிக்கப்படுவதோடு தொடர்புடையது.

(ii) உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் நுகர்வோரின் கைகளுக்கு கிடைக்கின்றபோதுதான் நுகர்வு சாத்தியமாகிறது.

**(4) பகிர்வு :**

(i) உற்பத்தி என்பது உற்பத்திக் காரணிகளின் பங்களிப்பு மூலம் கிடைக்கும் விளைவாகும்.

(ii) பகிர்வு என்னும் பகுதி உற்பத்தி காரணிகளின் விலைகள் நிர்ணயிக்கப்படுவதை விளக்குகிறது.

www.Padasalai.Net www.surabooks.com

orders@surabooks.com Ph:8124201000/8124301000

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



# கூடுதல் வினாக்கள்

## பகுதி - அ

**சரியான விடையைத் தேர்வு செய்யவும் : 1 மதிப்பெண்**

(i) **கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பொருளாதாரத்தின் வேறு பெயர்** *[BEQ]*

(அ) இந்தியப் பொருளாதாரம்
(ஆ) அரசியல் பொருளாதாரம்
(இ) வணிகப் பொருளாதாரம்
(ஈ) கலப்பு பொருளாதாரம்

[விடை. (ஆ) அரசியல் பொருளாதாரம்]

**2. புதிய பொருளாதாரத்தின் தந்தை யார்?**

(அ) மார்க்ஸ் முல்லர் (ஆ) ஆடம்ஸ்மித்
(இ) J.M. கீன்சு (ஈ) கார்ல் மார்க்ஸ்

[விடை. (இ) J.M. கீன்சு]

**3. பேரியல் பொருளியல் எதை உள்ளடக்கியது?**

(அ) ஒட்டு மொத்தப் பொருளாதாரம்.
(ஆ) பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள்.
(இ) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள்.
(ஈ) விலைக் கோட்பாடு.

[விடை. (அ) ஒட்டு மொத்தப் பொருளாதாரம்.]

**4. "பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல்" என்று கூறியவர்**

(அ) ஆடம்ஸ்மித் (ஆ) இலயனல் ராபின்ஸ்
(இ) ஆல்ஃபிரட் மார்ஷல் (ஈ) சாமுவேல்சன்

[விடை. (அ) ஆடம்ஸ்மித்]

**5. 'நலஇயல்' என்பது**

(அ) மகிழ்ச்சி (ஆ) தனி மனிதனின் நலம்
(இ) ஒட்டுமொத்த மக்களின் நலம்
(ஈ) மேற்கூறிய அனைத்தும்

[விடை. (ஈ) மேற்கூறிய அனைத்தும்]

**6. "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய ஒரு பொதுக் கோட்பாடு" என்னும் நூல் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு**

(அ) 1930 (ஆ) 1936 (இ) 1988 (ஈ) 1990

[விடை. (ஆ) 1936]

**7. "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய ஒரு பொதுக் கோட்பாடு" என்னும் நூலை அறிமுகப்படுத்தியவர்**

(அ) ஆல்ஃபிரட் மார்ஷல் (ஆ) ஆடம் ஸ்மித்
(இ) இராபின்ஸ் (ஈ) J.M. கீன்சு

[விடை. (ஈ) J.M. கீன்சு]

**8. பொருளியல் குறிப்பிடுவது**

(அ) பற்றாக்குறை வளங்களும் குறிப்பிட்ட விருப்பங்களும்.
(ஆ) மனித விருப்பமும் நிறைவடைதலும்.
(இ) செல்வத்திற்கும் சேமிப்பிற்கும் உள்ள தொடர்பு.
(ஈ) அரசு மேலாண்மை.

[விடை. (ஆ) மனித விருப்பமும் நிறைவடைதலும்.]

**9. 'இயங்கா' நிலை என்பது**

(அ) கணிதம் (ஆ) வணிகக் கணிதம்
(இ) மாற்றங்கள் ஏற்படாத காலம்
(ஈ) எதுவுமில்லை

[விடை. (இ) மாற்றங்கள் ஏற்படாத காலம்]

**10. ஆடம்ஸ்மித் நாடுகளின் செல்வம் என்ற புத்தகத்தை வெளியிட்ட ஆண்டு**

(அ) 1776 (ஆ) 1786 (இ) 1886 (ஈ) 1766

[விடை. (அ) 1776]

(ii) **பட்டியல் I–ல் உள்ளவற்றை பட்டியல் II–உடன் பொருத்திப் பார்த்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையை தெரிவு செய்க.**

**1.**

| பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|
| அ. ஆடம் ஸ்மித் | (i) | வளர்ச்சி இலக்கணம் |
| ஆ. ஆல்ஃபிரடு மார்ஷல் | (ii) | பற்றாக்குறை இலக்கணம் |
| இ. இலயனல் இராபின்ஸ் | (iii) | நல இலக்கணம் |
| ஈ. சாமுவேல்சன் | (iv) | செல்வ இலக்கணம் |

(1) அ-iv ஆ-iii இ-ii ஈ-i (2) அ-i ஆ-ii இ-iii ஈ-iv
(3) அ-ii ஆ-iii இ-iv ஈ-i (4) அ-iii ஆ-iv இ-i ஈ-ii

[விடை: (1) அ-iv ஆ-iii இ-ii ஈ-i]

**2.**

| பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|
| அ. நுகர்வு | (i) | உள்ளதை உள்ளவாறு கூறுகிறது |
| ஆ. இயல்புரை அறிவியல் | (ii) | விலைக் கோட்பாடு |
| இ. பகுத்தாய்வு முறை | (iii) | பொருளாதார நடவடிக்கையின் துவக்கப் புள்ளியாக விளங்குகிறது. |
| ஈ. நுண்ணினப் பொருளாதாரம் | (iv) | பொது கருத்திலிருந்து தனிக் கருத்தை பெறுவது |

(1) அ-i ஆ-ii இ-iii ஈ-iv
(2) அ-iv ஆ-iii இ-ii ஈ-i
(3) அ-iii ஆ-i இ-iv ஈ-ii
(4) அ-ii ஆ-iv இ-i ஈ-iii

[விடை: (3) அ-iii ஆ-i இ-iv ஈ-ii]

**3.**

| பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|
| அ. தொன்மை காலம் | (i) | சாமுவேல்சன் |
| ஆ. புதிய தொன்மை காலம் | (ii) | இயனல் இராபின்ஸ் |
| இ. புதிய யுகம் | (iii) | ஆல்ஃபிரட் மார்ஷல் |
| ஈ. நவீன யுகம் | (iv) | ஆடம்ஸ்மித் |

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**2.**

| | | | |
|---|---|---|---|
| அ. | விலை | – | மூலப்பொருட்களின் மதிப்பு |
| ஆ. | வேலைவாய்ப்பு வட்டி, பணம் பற்றிய பொதுக் கோட்பாடு | – | மார்ஷல் |
| இ. | பரிமாற்றம் | – | வேலைபகுப்பு முறை |
| ஈ. | சேவை பயன்பாடு | – | நோயாளி மருத்துவரிடமும் பெறுகின்ற சேவை |

**[விடை. (ஈ) சேவை பயன்பாடு – நோயாளி மருத்துவரிடமும் பெறுகின்ற சேவை]**

**(vi) கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தவில்லை?**

**1.**

| | | | |
|---|---|---|---|
| அ. | உடைமைப் பயன்பாடு | – | பயன்பாட்டின் வகைகள் |
| ஆ. | தொகுத்தாய்வு முறை | – | பொருளியல் ஆய்வு முறை |
| இ. | பற்றாக்குறை இலக்கணம் | – | இலயனல் ராபின்ஸ் |
| ஈ. | மார்ஷல் | – | செல்வ இலக்கணம் |

**[விடை. (ஈ) மார்ஷல் – செல்வ இலக்கணம்]**

**2. பொருந்தாத ஒன்றை கண்டறிக.**

| | | | |
|---|---|---|---|
| அ. | அழியும் பண்டம் | – | பழங்கள் மற்றும் பூ |
| ஆ. | புலனாகப் பொருட்கள் | – | உருவ அடையாளம் |
| இ. | பண வருமானம் | – | பெயரளவு வருமானம் |
| ஈ. | தொகுத்தாய்வு முறை | – | வரலாற்றுப் பள்ளி |

**[விடை. (ஆ) புலனாகப் பொருட்கள் – உருவ அடையாளம்]**

**(vii) கீழ்க்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க.**

**1. கூற்று (A) : பொருளியல் பண்டங்களுக்கு மாற்று [பண] மதிப்பு உண்டு.**

**காரணம் (R): பொருளியல் பண்டங்கள் பற்றாக்குறையானவை.**

அ) A மற்றும் R இரண்டும் சரி. மேலும் Aக்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி. ஆனால் Aக்கான சரியான விளக்கம் R இல்லை.


இ) A சரி. ஆனால் R தவறு.

ஈ) A தவறு. ஆனால் R சரி.

**[விடை. (அ) A மற்றும் R இரண்டும் சரி. மேலும் Aக்கான சரியான விளக்கம் R.]**

**(viii) சரியான கூற்றைக் கண்டறி.**

**1.**




**உற்பத்தி வாய்ப்பு வளைகோடு இடம்பெயர்வதற்கான காரணம்.**

**(i) உற்பத்தி சாதனங்களின் அறிப்பு.**


**(ii) நிலையான உற்பத்தி**

(அ) (i) சரி (ii) தவறு　　(ஆ) (i) மற்றும் (ii) சரி

(இ) (i) தவறு (ii) சரி　　(ஈ) (i) மற்றும் (ii) தவறு

**[விடை. (அ) (i) சரி (ii) தவறு]**

**2. பின்வரும் PPf வரைபடத்தைக் காண்க. (உற்பத்தி சார்பு)**




**PPf படத்தில் காட்டப்பட்டுள்ளது.**

**A ல் இருந்து B க்கு நகர்கையில் வாய்ப்புச் செலவு யாது?**

(அ) 5 ஆரஞ்சு　　(ஆ) 10 ஆப்பிள்

(இ) 5/10 ஆப்பிள்　　(ஈ) 10/5 ஆரஞ்சு

**[விடை. (ஈ) 10/5 ஆரஞ்சு]**

# பகுதி – ஆ

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி.**

**2 மதிப்பெண்கள்**

**1. பொருளியல் தலைப்புகளில் காணப்படும் பல நூல்கள் யாவை?**

**விடை.** பொருளியல் போன்ற பாடத்திற்கு

**(i)** பொருளியலின் அறிமுகம்.

**(ii)** பொருளியல் ஓர் அறிமுகம்.

**(iii)** அடிப்படைப் பொருளியல்.

**(iv)** பொருளியலின் கூறுகள்.

**(v)** தொடக்கப் பொருளியல்.

**(vi)** பொருளியலின் அடிப்படைகள்

போன்ற தலைப்புகளில் பொருளியல் நூல்கள் பல காணக் கிடைக்கின்றன.

www.Padasalai.Net
www.surabooks.com

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**2. ஆடம் ஸ்மித்தின் செல்வ இலக்கணத்தை குறை கூறியவர்கள் யார்?**

**விடை.** (i) 'இரஸ்கின் மற்றும் கார்லைல்' போன்றோர், நீதிநெறிக்கு புறம்பான சுயநலத்தைக் கற்றுத் தருவதாக பொருளியலை வர்ணிக்கின்றனர்.

(ii) எனவே பொருளியலை ஓர் **"இருண்ட அறிவியல்"** (Dismal Science) எனக் கூறியுள்ளனர்.

**3. இராபின்ஸ் இலக்கணத்தின் முக்கிய சிறப்பியல்புகள் யாவை?**

**விடை.** (i) மனிதர்கள் எல்லையற்ற தேவைகளை உடையவர்கள்.

(ii) எல்லையற்ற தேவைகளை பூர்த்தி செய்யும் வளங்கள் பற்றாக்குறையாகவே உள்ளன.

(iii) பற்றாக்குறையான வளங்கள் மாற்று வழிகளில் பயன்தரக்கூடியவையாக உள்ளன.

(iv) எனவே இராபின்ஸ் கூற்றுப்படி பொருளியல் என்பது தேவைகளை தேர்வு செய்யும் அறிவியலாகும்.

**4. இலவசப் பண்டங்கள் மற்றும் பொருளாதாரப் பண்டங்களை வேறுபடுத்துக.**

**விடை.**

| வ. எண் | இலவசப் பண்டங்கள் | பொருளாதாரப் பண்டங்கள் |
|---|---|---|
| 1 | இயற்கையின் நன்கொடையாக கிடைக்கும் பண்டம் இலவச பண்டம். | பணம் கொடுத்து பெறும் பண்டம் பொருளாதாரப் பண்டம். |
| 2 | பற்றாக்குறையற்றவை, மேலும் சந்தையில் விலை இல்லை. | பற்றாக்குறையானவை மேலும் சந்தையில் விலை உண்டு. |
| 3 | (எ. கா.) காற்று, சூரிய ஒளி. | (எ.கா.) மேசை, நாற்காலி. |

# பகுதி - இ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடையளி.** **3 மதிப்பெண்கள்**

**1. நுகர்வுப் பண்டத்தையும் மூலதனப் பண்டத்தையும் வேறுபடுத்துக.** *[BEQ]*

**விடை.**

| வ. எண் | நுகர்வுப் பண்டங்கள் | மூலதனப் பண்டங்கள் |
|---|---|---|
| 1 | நுகர்வோர் பண்டங்கள் என்பது நேரடியாக மனித விருப்பங்களை நிறைவேற்றுவதாகும். | மூலதனப் பண்டங்கள் என்பவை நேரடியாக நுகர்வோருக்கு மனநிறைவு தருவதில்லை. |
| 2 | (எ.கா.) தொலைக்காட்டி. | (எ.கா.) இயந்திரங்கள். |

**2. மார்ஷல் நல இலக்கண வரையறையின் சிறப்பம்சங்களை விவரி.**

**விடை.** (i) அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் முதலும், முடிவுமானது செல்வமே என்று கருதப்படவில்லை, மாறாக மனித நலத்தை மேம்படுத்த முயல்கிறான்.

(ii) பொருளியல் சாதாரண மனிதனின் நடத்தையைப் பற்றியதே, அவர்கள் சாதாரண அன்பினால் கட்டுப்பட்டவர்களேயன்றி, உச்ச பட்ச பணம் பெறுவதை நோக்கிச் செல்பவர்கள் அல்லர்.

(iii) பொருளியல் ஓர் சமூக அறிவியலாகும். அது சமுதாயத்தில் ஒருவர் மற்றொருவர் மீது செலுத்தும் ஆதிக்கத்தைப் பற்றிப் படிக்கிறது.

**3. பகுதிச் சமநிலைக்கும் பொதுச் சமநிலைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.**

**விடை.** (1) **பகுதிச் சமநிலை :**

(i) ஒரேயொரு மாறியின் மூலம் கிடைக்கக்கூடிய சமநிலை பகுதிச் சமநிலை எனப்படும்.

(ii) இது **தனிச் சமநிலை** என்றும் அழைக்கப்படுகிறது.

(2) **பொதுச் சமநிலை :**

பொதுச் சமநிலை என்பது பொருளாதாரத்தில் செயல்படுகின்ற அனைத்து மாறிகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு மொத்த பொருளா–தாரத்திலும் சமநிலை ஏற்படுவதைக் குறிக்கின்றது.

# பகுதி - ஈ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.** **5 மதிப்பெண்கள்**

**1. நிலையான சமநிலையை அடைவதற்கான நிலையை வரைபடம் மூலம் விளக்குக.**

**விடை.** **நிலையான சமநிலை :**

(i) சமநிலை என்பது மாற்றமில்லா நிலையை அடைவது என்று பேராசி ஸ்டிக்லர் குறிப்பிடுகிறார்.

(ii) நுகர்வோர் உச்ச மனநிறைவை பெறுகின்றபோது சமநிலையடைகிறார்.

(iii) உற்பத்தியாளர் உச்ச இலாபம் பெறுகின்ற போது சமநிலையடைகிறார்.


(iv) உற்பத்தி காரணிகள் முழு வேலை வாய்ப்பையும், உச்ச வெகுமதியையும் பெறும் போது சமநிலை அடைகின்றன.

(v) எனவே, நிலையான சமநிலை என்பது நிலையான வேலை, அளவு, வருமானம், தொழில்நுட்பம், மக்கள் தொகை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது.

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores






**வரைபட விளக்கம் :**

(i) X - அச்சு தேவை மற்றும் அளிப்பின் அளவையும், Y - அச்சு விலையையும் குறிக்கிறது.

(ii) DD - என்பது கீழ்நோக்கி சரியும் தேவைக்கோடு மற்றும் SS - என்பது மேல்நோக்கி செல்லும் அளிப்பு கோடு ஆகும்.

(iii) OP - என்பது சமநிலை விலை.

(iv) OM - என்பது சமநிலை அளவு ஆகும்.

(v) புள்ளி - E - ல் தேவை கோடும், அளிப்புக் கோடும் ஒன்றையொன்று வெட்டிக்கொள்கிறது.

(vi) புள்ளி - E - ல் தேவையும், அளிப்பும் சமமாகி சமநிலை அடைகிறது.

**2. ஆடம் ஸ்மித்தின் செல்வ இலக்கணத்தை விளக்குக.**

**விடை. செல்வ இலக்கணம் :**

(i) ஆடம்ஸ்மித் (1723 – 1790) "நாடுகளின் செல்வத்தின் இயல்பும், காரணங்களும் பற்றிய ஓர் ஆய்வு" (1776) என்ற தனது நூலில் **"பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல்** என்று வரையறுத்துள்ளார்."

(ii) அவர் ஒரு நாட்டின் செல்வம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது மற்றும் அதிகரிக்கப்படுகிறது என்பதை விளக்குகின்றார்.

(iii) அவரைப் பொறுத்தவரை சமுதாயத்தில் உள்ள தனி மனிதர்கள் தங்கள் சுய இலாபத்தை முன்னேற்ற விரும்புவதாக அவர் கருதுகிறார்.

(iv) தனிமனிதர்கள் அவ்வாறு செயல்படும்போது அவர்களை திரைக்குப் பின்னாலிருந்து ஒரு புலனாக உந்து சக்தி வழி நடத்துகிறது. ஒவ்வொரு மனிதனும் சுய ஆர்வத்தால் தூண்டப்படுவதாக ஸ்மித் கூறுகிறார். ஒவ்வொரு நபரும் தனது சுய நன்மைக்காக உழைக்கிறான்.

(v) உற்பத்தி அளவினை அதிகரிக்க **"வேலை பகுப்பு முறையை"** அறிமுகப்படுத்துவதை ஆதரிக்கின்றார்.

(vi) சமுதாயம் மற்றும் நிறுவனங்களில் நிலவும் கடுமையான போட்டியின் காரணமாக சிறந்த பொருட்கள் கிடைக்கின்றன.

**திறனாய்வு :**

(i) ஸ்மித்தைப் பொறுத்தவரை பொருளியல் என்பது **'செல்வத்தைத் திரட்டுதல்'** மற்றும் **'செல்வத்தைச் செலவிடுதல்'** சார்ந்த நடவடிக்கைகளாகும்.

(ii) பொருட்சார் செல்வம் என்ற ஒன்றிற்கு மட்டுமே அதிக அளவு முக்கியத்துவம் தரப்பட்டு முக்கிய பகுதியான 'மனித நலம்' அவரால் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

(iii) மதம் மற்றும் ஆன்மீக மதிப்பீடுகள் மேலோங்கியிருந்த காலக் கட்டத்தில் ஸ்மித் தனது வரையறையை வழங்கியுள்ளார்.

(iv) இரஸ்கின் மற்றும் கார்லைல் போன்றோர் நீதிநெறிக்கு புறம்பான சுயநலத்தை கற்றுதருவதாக பொருளியல் வர்ணிக்கப்படுவதால், பொருளியலை 'ஓர் இருண்ட அறிவியல்' எனக் கூறியுள்ளார்.

❖ ❖ ❖

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

அத்தியாயம்

2

# நுகர்வுப் பகுப்பாய்வு

## பொருளடக்கம்


2.1 அறிமுகம்
2.2 மனித விருப்பங்கள்
2.3 மனித விருப்பங்களின் பண்புகள்
2.4 பண்டங்களின் வகைகள்
2.5 எண்ணளவை பயன்பாட்டு ஆய்வு
2.5.1 குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி
2.6 சம இறுதிநிலை பயன்பாட்டு விதி
2.7 நுகர்வோர் உபரி
2.8 தேவை விதி
2.8.1 தேவையின் பண்புகள்
2.8.2 தேவைச் சார்பு
2.8.3 தேவை விதி
2.8.4 தேவையைத் தீர்மானிக்கும் காரணிகள்
2.8.5 தேவை விதியின் விதிவிலக்குகள்
2.8.6 தேவை விதியின் விதிவிலக்கிற்கான காரணங்கள்
2.8.7 தேவை விரிவும் தேவைச் சுருக்கமும்
2.8.8 தேவை ஒரே வளைகோட்டில் நகர்ந்து செல்லுதல்
2.8.9 தேவை வளைகோடு இடப்பெயர்வு
2.9 தேவை நெகிழ்ச்சி
2.9.1 தேவை நெகிழ்ச்சியின் வகைகள்
2.9.2 விலைத் தேவை நெகிழ்ச்சி அளவுகள்
2.9.3 தேவை நெகிழ்ச்சியைத் தீர்மானிப்பவைகள்
2.9.4 தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள்
2.9.5 தேவை நெகிழ்ச்சியின் முக்கியத்துவம்
2.10 தரவரிசை ஆய்வு
2.11 சமநோக்கு வளைகோடு
2.12 சமநோக்கு வரைபடம்
2.13 குறைந்து செல் இறுதிநிலை பதிலீட்டு வீதம்
2.14 சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள்
2.15 விலைக்கோடு அல்லது வரவு செலவுக் கோடு
2.16 நுகர்வோர் சமநிலை
2.17 தொகுப்புரை




orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



# கருத்து வரைபடம்

## 2. நுகர்வோர் பகுப்பாய்வு

- மனித விருப்பங்கள்
  - மனித விருப்பங்களின் பண்புகள்
    - விருப்பங்கள் எண்ணற்றவை
    - விருப்பங்கள் பழக்கவழக்கங்களால் மாறும்
    - விருப்பங்கள் நிறைவேற கூடியவை
    - விருப்பங்கள் மாற்றுப் பொருளால் நிறைவு பெறுபவை
    - விருப்பங்கள் போட்டியிடுபவை
    - விருப்பங்கள் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன
    - விருப்பங்கள் மீளத் தோன்றுபவை
- பண்டங்களின் வகைகள்
  - இன்றியமையாத பண்டங்கள்
  - வசதிப் பண்டங்கள்
  - ஆடம்பரப் பண்டங்கள்
- எண்ணளவை பயன்பாட்டு ஆய்வு
  - குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாடு
- தேவை விதி
  - தேவையின் பண்புகள்
  - தேவைச் சார்பு
  - தேவை விதி
  - தேவையை தீர்மானிக்கும் காரணிகள்
  - தேவை விதியின் விதிவிலக்குகள்
  - தேவை விதியின் விதிவிலக்கிற்கான காரணங்கள்
  - தேவையின் விரிவும் தேவைச் சுருக்கமும்
- தேவை நெகிழ்ச்சி
  - தேவை நெகிழ்ச்சியின் வகைகள்
  - விலைத்தேவை நெகிழ்ச்சியின் அளவுகள்
  - தேவை நெகிழ்ச்சியை தீர்மானிப்பவைகள்
  - தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள்
  - தேவை நெகிழ்ச்சியின் முக்கியத்துவம்
- தரவரிசை ஆய்வு
  - சமநோக்கு வளைகோடு

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



# முக்கியக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **பொருளியல் நடவடிக்கை** | : | பொருளியல் நடவடிக்கையின் ஒரே நோக்கம் நுகர்வே ஆகும். |
| **மனித விருப்பங்கள்** | : | பண்டத்தை வாங்கும் மற்றும் நுகரும் நடத்தை மனித விருப்பத்தை சார்ந்தது. |
| **இன்றியமையாத பண்டங்கள்** | : | மனிதன் உயிர் வாழத் தேவையான மற்றும் தவிர்க்க முடியாத பண்டங்கள் இன்றியமையாத பண்டங்கள் ஆகும். |
| **வசதிப் பண்டங்கள்** | : | நம்முடைய வாழ்வை எளிதாக, சுலபமாக மற்றும் வசதியாக வைத்துக் கொள்ளும் பண்டங்கள் வசதிப் பண்டங்கள் ஆகும். |
| **ஆடம்பரப் பண்டங்கள்** | : | சில பண்டங்கள் மிக முக்கியமானவை அல்ல ஆனால் அவற்றின் விலை மிக உயர்ந்தவை இவ்வகை பண்டங்கள் ஆடம்பரப் பண்டங்கள் ஆகும். |
| **பயன்பாடு** | : | பொருளியலில் மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள், பணிகளின் சக்தியே பயன்பாடு எனப்படும். |
| **மொத்த பயன்பாடு** | : | ஒரு பண்டத்தின் எல்லா அலகுகளையும் நுகர்வதால் கிடைக்கும் பயன்பாட்டின் கூடுதலே மொத்த பயன்பாடு ஆகும். |
| **இறுதி நிலைப் பயன்பாடு** | : | கூடுதலாக ஓர் அலகு நுகர்வதால், மொத்தப்பயன்பாட்டில் ஏற்படும் கூடுதல் அல்லது மாற்றமே இறுதிநிலைப் பயன்பாடு ஆகும். |
| **சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி** | : | சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி நுகர்வோர் எவ்வாறாக தனது குறைந்த வருமானத்தைப் பல பண்டங்களின் நுகர்விற்காக செலவு செய்து உச்சப்பயன்பாட்டைப் பெறுகிறார் என்று விளக்குகிறது. |
| **நுகர்வோர் உபரி** | : | நுகர்வோர் எச்சம் (அ) உபரி என்பது பண்டங்களின், பயன்பாட்டின் அனுபவத்தைச் சார்ந்ததாகும். ஒரு பொருளுக்கு கொடுக்க நினைக்கும் விலைக்கும், உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வித்தியாசம் நுகர்வோர் உபரி ஆகும். |
| **தேவை விதி** | : | ஒரு பொருளுக்கான தேவை என்பது அப்பொருளை வாங்குவதற்கான விருப்பத்தையும், போதிய சக்தியையும், வாங்கிட வேண்டும் என்ற முடிவையும் குறிக்கும். |
| **தேவை விதியின் விதிவிலக்குகள்** | : | பொதுவாக தேவைகோடு கீழ்நோக்கி சரியும், ஆனால் சில விதிவிலக்கு காரணமாக தேவை கோடு இடமிருந்து வலமாக மேல்நோக்கி உயரும் இது விதிவிலக்கான தேவைக்கோடு என அழைக்கப்படுகிறது. |
| **கிஃபன் முரண்பாடு** (Giffen Paradox) | : | கிஃபன் பண்டங்கள் தேவை விதியின் விதிவிலக்காகும். தாழ்ந்தரக பண்டங்களின் விலை குறையும்போது ஏழைகள் அவற்றைக் குறைவாகவும். விலை கூடும்போது அதிகமாகவும் வாங்குவர். |
| **வெப்ளன் விளைவு** (Veblen Effect) | : | வெப்ளன் விளைவு என்பது, பணக்காரர்கள் போல் காட்டிக்கொள்பவர்கள் விலை உயர்வாக இருந்தாலும் சில பண்டங்களை சமூக அந்தஸ்திற்காக அதிகமான வாங்குகின்றனர். |
| **ஊக விளைவு** | : | ஒரு பண்டத்தின் விலை உயரும்போது எதிர்காலத்தில் இன்றும் அந்த பண்டத்தின் விலை உயரும் என்ற பயத்தில் நுகர்வோர் தற்பொழுது அதிகம் வாங்குவது ஊக விளைவு ஆகும். |
| **தேவை விரிவும், தேவைச் சுருக்கமும்** | : | விலையில் ஏற்படும் மாற்றத்தால் மட்டுமே தேவை அளவில் மாற்றம் ஏற்பட்டால் அதனை தேவை விரிவு மற்றும் சுருக்கம் என்கிறோம். |

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



# இலக்கணம்

| | | |
|---|---|---|
| **வரவு செலவுக் கோடு வரையறை** | : | கொடுக்கப்பட்ட விலை மற்றும் வருவாயில் நுகர்வோரின் இரண்டு பண்டங்களுக்கான பல்வேறு கலவைகளின் புள்ளிகளின் இணைப்பே ஆகும். |
| **விருப்பங்கள் வரையறை** | : | "பண்டங்கள் மற்றும் பணிகளை பயன்படுத்துவதின் மூலம் விருப்பங்கள் நிறைவடையும்". |
| **குறைந்த செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியின் இலக்கணம்** | : | "ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்றபொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்து கிடைக்கும் பயன்பாடு குறைகிறது" என்று மார்ஷல் இவ்விதியை வரையறை செய்கிறார். |
| **காசனின் இரண்டாம் விதி (அ) சம இறுதிநிலை பயன்பாட்டு விதி (அ) நுகர்வோரின் உச்ச மனநிறைவு தரும் விதி – இலக்கணம்.** | : | "ஒரு மனிதன் பல வகையிலும் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருளைப் பெற்றிருந்தால் அதன் பலவகைப் பயன்பாடுகளிடையே பகிர்ந்தளிக்கும்போது அதன் பயன்களின் இறுதிநிலை பயன்பாடு ஒரே அளவில் சமமாய் இருக்கும் வண்ணம் பகிர்ந்தளிப்பார்" என்று இவ்விதியை விளக்குகின்றார். |
| **நுகர்வோரின் உபரியின் இலக்கணம்** | : | "ஒரு பொருளை வாங்காமல் இருப்பதைவிட, வாங்குவதே மேல் என முடிவுசெய்து, கொடுக்க நினைத்த விலைக்கும், நுகர்வோர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வித்தியாசம் நுகர்வோர் எச்சம் என்று மார்ஷல் கூறுகிறார்". |
| **தேவை விதியின் இலக்கணம்** | : | 'விலை குறையும்போது தேவையின் அளவு அதிகரிக்கிறது, விலை அதிகரிக்கும்போது தேவையின் அளவு குறைகிறது' என மார்ஷல் தேவை விதியை வரையறுக்கிறார். |
| **தேவை நெகிழ்ச்சியின் இலக்கணம்** | : | "தேவை நெகிழ்ச்சி" என்ற கருத்துருவின் மூலம், குறிப்பிட்ட விலை மாற்றத்திற்கு தேவை அளவில் ஏற்படும் பதில் மாற்ற விகிதம் விளக்கப்படுகிறது என ஸ்டோனியர் மற்றும் ஹேக் கூறுகின்றனர். |
| **விலைத் தேவை நெகிழ்ச்சியின் இலக்கணம்** | : | "விலையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு தேவை அளவில் ஏற்படும் பதில் மாற்ற விளைவையே தேவை நெகிழ்ச்சி" என்கிறோம். |
| **வருமான தேவை நெகிழ்ச்சியின் இலக்கணம்** | : | "வருமானத்தில் ஏற்பட்ட மாற்றத்தால் தேவையில் ஏற்படும் பதில் மாற்ற விகித அளவே வருமானத்தேவை நெகிழ்ச்சி" ஆகும். |
| **சமநோக்கு வளைகோட்டின் இலக்கணம்** | : | "இரு பண்டங்களின் வெவ்வேறு அளவுகளின் ஒருமித்த நுகர்வில் சம அளவு நிறைவைத்தரும் புள்ளிகளின் குவியிடமே" சமநோக்கு வளைகோடு எனப்படும். |
| **பயன்பாடு வரையறு** | : | "பொருளியலில் மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள், பணிகளின் சக்தியே பயன்பாடு எனப்படும்." |
| **குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியின் இலக்கணம்** | : | "ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்து கிடைக்கும் பயன்பாடு குறைகிறது என்று" மார்ஷல் கூறுகிறார். |

www.surabooks.com www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



# புத்தக வினாக்கள்

## மாதிரி வினாக்கள்

## பகுதி - அ

**சரியான (அல்லது) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. முரண்பட்டதை தெரிவு செய்க.** *[BEQ] [First Mid - 2018; HY-2018; Sep-2020]*

(அ) ஆடம்பர பண்டங்கள்
(ஆ) வசதிபண்டங்கள்
(இ) அத்தியாவசிய பண்டங்கள்
(ஈ) விவசாயப் பொருட்கள்

**[விடை. (ஈ) விவசாயப் பொருட்கள்]**

**2. தெரிவுகள் எப்போதும் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்டவையாக இருப்பதற்கு காரணம் வளங்கள் _____ இருப்பதால்.**

(அ) பற்றாக்குறை (ஆ) அளிப்பு
(இ) தேவை (ஈ) அபரிமிதமான

**[விடை. (அ) பற்றாக்குறை]**

**3. இயல்பெண் பயன்பாட்டு ஆய்வை வழங்கியதில் முதன்மையானவர்.** *[BEQ] [Govt. MQP-2018; QY-2018]*

(அ) ஜே.ஆர்.ஹிக்ஸ் (ஆ) ஆர்.ஜி.டி.ஆலன்
(இ) மார்ஷல் (ஈ) ஸ்டிக்லர்

**[விடை. (இ) மார்ஷல்]**

**4. கீழ்க்கண்ட வாய்ப்பாட்டின் மூலம் இறுதிநிலை பயன்பாட்டை அளவிடலாம்.** *[BEQ] [First Mid - 2018; Mar-2020]*

(அ) $TU_n - TU_{n-1}$ (ஆ) $TU_n - TU_{n+1}$
(இ) $TU_n + TU_{n+1}$ (ஈ) $TU_n - TU_{n+1}$

**[விடை. (அ) $TU_n - TU_{n-1}$]**

**5. இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்யமாக இருக்கும் போது மொத்தப் பயன்பாடு _____.** *[QY - '19; Sep-2020; May-'22]*

(அ) குறைவாக (ஆ) உச்சமாக
(இ) பூஜ்ஜியமாக (ஈ) எதிர்மறையாக

**[விடை. (ஆ) உச்சமாக]**

**6. காஸன் முதல் விதி _____ என்றும் அழைக்கப்படுகிறது.**

(அ) சமஇறுதி நிலை பயன்பாட்டு விதி
(ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி
(இ) தேவை விதி
(ஈ) குறைந்து செல் விளைவு விதி

**[விடை. (ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி]**

**7. கீழ்க்கண்ட விதியை தேவை விதி அடிப்படையாகக் கொண்டுள்ளது.**

(அ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி
(ஆ) அளிப்புவிதி
(இ) சம இறுதிநிலை பயன்பாட்டு விதி
(ஈ) காஸன் விதி

**[விடை. (அ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி]**

**8. நுகர்வோர் எச்சம் என்ற கருத்துடன் தொடர்புடையவர்** *[CRT-'22]*

(அ) ஆடம் ஸ்மித் (ஆ) மார்ஷல்
(இ) ராபின்ஸ் (ஈ) ரிக்கார்டோ

**[விடை. (ஆ) மார்ஷல்]**

**9. தகுவிலை ரூ250 ஆகவும் மற்றும் உண்மை விலை ரூ 200 ஆகவும் உள்ளது. நுகர்வோர் எச்சத்தைக் காண்க.** *[BEQ;First Mid - 2018]*

(அ) 375 (ஆ) 175 (இ) 200 (ஈ) 50

**[விடை. (ஈ) 50]**

**10. சமநோக்கு வளைகோட்டின் அடிப்படையானது _____.** *[BEQ;QY-2018]*

(அ) தரவரிசை ஆய்வு (ஆ) இயல்பெண் ஆய்வு
(இ) பண்பளவை ஆய்வு (ஈ) உளவியல் ஆய்வு

**[விடை. (அ) தரவரிசை ஆய்வு]**

**11. தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர் _____.** *[QY - '19; HY - '19]*

(அ) பெர்கூசன் (ஆ) கீன்ஸ்
(இ) ஆடம் ஸ்மித் (ஈ) மார்ஷல்

**[விடை. (ஈ) மார்ஷல்]**

**12. கீழ்க்காணும் எவற்றால் தேவை அதிகரிக்கும்?** *[BEQ; First Mid - 2018; QY-2018; CRT-'22]*

(அ) வரி அதிகரிப்பதால்
(ஆ) அதிக மானியம் வழங்குவதால்
(இ) வட்டி வீதம் அதிகரிப்பதால்
(ஈ) மக்கள் தொகை குறைவதால்

**[விடை. (ஆ) அதிக மானியம் வழங்குவதால்]**

**13. கொடுக்கப்பட்ட தேவை வளைகோட்டில் நகர்ந்து செல்லுதல் கீழ்க்கண்டவாறு அழைக்கப்படுகிறது.**

(அ) தேவை விரிவு மற்றும் சுருக்கம்
(ஆ) தேவை இடப்பெயர்வு
(இ) தேவை கூடுதல் மற்றும் குறைதல்
(ஈ) மேற்காண் அனைத்தும்

**[விடை. (அ) தேவை விரிவு மற்றும் சுருக்கம்]**

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**14. மிகைத்தேவை நெகிழ்ச்சி உள்ள தேவைக்கோட்டின் வடிவமானது _____.**

(அ) படுகிடை (ஆ) செங்குத்து
(இ) விரைந்து சரியும் (ஈ) மெதுவாக சரியும்

**[விடை. (ஈ) மெதுவாக சரியும்]**

**15. நுகர்வோர் சமநிலையில் இருக்கும்போது இறுதிநிலை பயன்பாடானது _____ இருக்கும்.** *[Aug-'22]*

(அ) குறைவாக (ஆ) எதிர்மறை
(இ) சமமாக (ஈ) கூடுதலாக

**[விடை. (இ) சமமாக]**

**16. சமநோக்கு வளைகோட்டை முதன்முதலில் தோற்றுவித்தவர்.** *[BEQ]*

(அ) ஹிக்ஸ் (ஆ) ஆலன்
(இ) கீன்ஸ் (ஈ) எட்ஜ்வொர்த்

**[விடை. (ஈ) எட்ஜ்வொர்த்]**

**17. தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமமாக இருக்கும்போது அது _____.** *[May-'22]*

(அ) அலகுத் தேவை நெகிழ்ச்சி
(ஆ) முற்றிலும் நெகிழ்ச்சியுள்ளது
(இ) முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவை
(ஈ) மிகைத் தேவை

**[விடை. (அ) அலகுத் தேவை நெகிழ்ச்சி]**

**18. சம அளவு திருப்தியை கொடுக்கக்கூடிய புள்ளிகளை இணைக்கும் கோடானது இதனுடன் தொடர்புடையவை.**

(அ) சம நோக்கு வளைகோடுகள்
(ஆ) இயல்பெண் ஆய்வு
(இ) தேவை விதி
(ஈ) அளிப்பு விதி

**[விடை. (அ) சம நோக்கு வளைகோடுகள்]**

**19. சாதாரண தரவரிசைப் பயன்பாட்டை எவ்வாறு அளவிடலாம்?** *[HY - '19;CRT & Aug-'22]*

(அ) தரப்படுத்துதல்
(ஆ) எண்ணிக்கைப்படுத்துதல்
(இ) வார்த்தைப்படுத்துதல்
(ஈ) எதுவுமில்லை

**[விடை. (அ) தரப்படுத்துதல்]**

**20. சம நோக்கு வளைகோடுகள்** *[QY - '19; Sep-2021]*

(அ) செங்குத்துக் கோடுகள்
(ஆ) படுக்கைக் கோடுகள்
(இ) நேர்மறைச் சரிவுடையவை
(ஈ) எதிர்மறைச் சரிவுடையவை

**[விடை. (ஈ) எதிர்மறைச் சரிவுடையவை]**

# பகுதி - ஆ

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி.**

**21. பயன்பாட்டை வரையறு.** *[BEQ;QY-2018; Sep-2020]*

**விடை.** (i) பண்டங்கள் மற்றும் பணிகளை நுகரும்போது நுகர்வோருக்கு கிடைப்பதாக நுகர்வோர் கருதுவது.
(ii) **விருப்பத்தை நிறைவு செய்யும் ஆற்றல்.**

**22. விருப்பங்களை வகைப்படுத்து.**

**விடை.** விருப்பங்களின் வகைகள் மூன்று.
(i) இன்றியமையாத விருப்பம்.
(ii) வசதிக்கான விருப்பம்.
(iii) ஆடம்பரத்திற்கான விருப்பம்.

**23. நுகர்வோர் நடத்தையின் அடிப்படை அணுகுமுறைகளை குறிப்பிடுக.**

**விடை.** (i) நுகர்வு ஒரு முக்கியமான பொருளாதார நடவடிக்கையாகும்.
(ii) நுகர்வின் தன்மை மற்றும் அளவின் அடிப்படையில் மக்களின் வாழ்க்கைத் தரம் தீர்மானிக்கப்படுகிறது.
(iii) ஒருவரின் **விருப்பங்களை நிறைவு செய்யும்** சக்தி நுகர்வுக்கு உண்டு.

**24. விலைத் தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி.** *[HY - '19;CRT-'22]*

**விடை.** விலையில் ஏற்படும் பிரதிபலிப்பின் காரணமாக தேவை ஏற்படும் மாற்றம் விலைத் தேவை நெகிழ்ச்சியாகும்.
(i) முற்றிலும் நெகிழ்ச்சியுள்ள தேவை ($EP = \infty$)
(ii) முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவை ($EP = 0$)
(iii) மிகைத் தேவை நெகிழ்ச்சி ($EP > 1$)
(iv) குறைவான நெகிழ்ச்சியுள்ள தேவை / குறைத்தேவை நெகிழ்ச்சி ($EP < 1$)
(v) அலகுத் தேவை நெகிழ்ச்சி ($EP = 1$)

**25. சமநோக்கு வளைகோடுகள் என்றால் என்ன?** *[BEQ;First Mid - 2018; Aug-'22]*

**விடை.** ஒரு வளைகோட்டில் உள்ள இரு பண்டங்களின் அனைத்து கலவையும் நுகர்வோருக்கு சமஅளவு திருப்தியைத் தருமாயின் அது சமநோக்கு வளை கோடாகும்.

**26. நுகர்வோர் எச்சம் காணும் முறையை எழுதுக.** *[ Sep-2021]*

**விடை.** (i) ஒரு பொருளுக்கு நுகர்வோர் கொடுக்க விரும்பும் விலைக்கும் உண்மையிலேயே கொடுக்கும் விலைக்கும் உள்ள வித்தியாசமே நுகர்வோர் எச்சம்.
(ii) நுகர்வோர் எச்சம் = கொடுக்க நினைத்த விலை – உண்மையில் கொடுத்த விலை
அல்லது
(iii) நுகர்வோர் எச்சம் = தகுவிலை – உண்மை விலை.

TU = மொத்தப் பயன்பாடு
P = விலை
Q = பண்ட அளவு

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**27. கிஃபன் பொருள்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?** *[First Mid - 2018] [QY - '19]*

**விடை.** (i) கிஃபன் பண்டங்கள் அல்லது தாழ்ந்தரக பண்டங்கள் தேவை விதியின் விதி விலக்காகும்.

(ii) தாழ்ந்தரக பண்டங்களின் விலை குறையும்போது ஏழைகள் அவற்றைக் குறைவாகவும் மேலும் விலை கூடும்போது அதிகம் வாங்குவர்.

# பகுதி - இ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடையளி.**

**28. மனித விருப்பங்களின் இயல்பைக் கூறுக.** *[Mar-'19; CRT & May- '22]*

**விடை.** (i) விருப்பங்கள் எண்ணற்றவை.
(ii) விருப்பங்கள் பழக்க வழக்கங்களாக மாறும்.
(iii) விருப்பங்கள் நிறைவேறக் கூடியவை.
(iv) விருப்பங்கள் மாற்றுப் பொருளால் நிறைவு பெறுபவை.
(v) விருப்பங்கள் போட்டியிடுபவை.
(vi) விருப்பங்கள் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன.
(vii) விருப்பங்கள் மீளத் தோன்றுபவை.

**29. மொத்தப் பயன்பாட்டிற்கும் இறுதிநிலை பயன்பாட்டிற்கும் உள்ள உறவை விளக்குக.** *[BEQ;First Mid & HY- 2018;QY - '19; Sep-2020]*

**விடை.** (i) ஒரு பண்டத்தின் எல்லா அலகுகளையும் நுகர்வதால் கிடைக்கும் பயன்பாட்டின் கூடுதலே **மொத்தப் பயன்பாடு** ஆகும்.

(ii) கூடுதலாக ஓர் அலகு பண்டத்தை நுகர்வதால், மொத்தப் பயன்பாட்டில் ஏற்படும் கூடுதல் அல்லது மாற்றமே **இறுதிநிலைப் பயன்பாடு** ஆகும்.

(iii) $MU_n = TU_n - TU_{n-1}$

மொத்தப் பயன்பாட்டிற்கும் இறுதிநிலை பயன்பாட்டிற்கும் உள்ள தொடர்பு.

| வ. எண் | இறுதிநிலைப் பயன்பாடு | மொத்தப் பயன்பாடு |
|---|---|---|
| 1 | இறதிநிலைப் பயன்பாடு குறையும். | மொத்தப் பயன்பாடு அதிகரிக்கும். |
| 2 | இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்ஜியத்தை அடையும். | மொத்தப் பயன்பாடு உச்ச நிலையை அடையும். |
| 3 | இறுதிநிலைப் பயன்பாடு எதிர்மறையில் செல்லும். | மொத்தப் பயன்பாடு குறையும். |

**30. நுகர்வோர் எச்சம் என்ற கருத்தை வரைபடத்துடன் விளக்குக.** *[May-'22]*

**விடை. மார்ஷலின் நுகர்வோர் எச்சம் : இலக்கணம்**

"ஒரு பொருளை வாங்காமல் இருப்பதை விட வாங்குவதே மேல் என முடிவுசெய்து, கொடுக்க நினைத்த விலைக்கும், நுகர்வோர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வித்தியாசம் நுகர்வோர் எச்சம்" எனப்படும் என்று மார்ஷல் கூறுகிறார்.


நுகர்வோர் எச்சம் = தகுவிலை – உண்மைவிலை

(அ)

நுகர்வோர் எச்சம்= (மொத்தப் பயன்பாடு) – (உண்மைவிலை × பண்ட அலகுகள்)

$CS = TU - P \times Q$

**நுகர்வோர் எச்ச வரைபடம்**




**வரைபட விளக்கம் :**

(i) X - அச்சில் தேவையின் அளவும், Y - அச்சில் விலையும் குறிக்கப்பட்டுள்ளது

(ii) DDI என்பது நுகர்வோரின் பல்வேறு பண்ட அலகுகளின் மூலம் பெறும் பயன்பாட்டைக் குறிக்கும்.

(iii) விலை OP ஆக இருக்கும் போது தேவை அளவு OQ ஆக உள்ளது.

(iv) எனவே, உண்மை விலை OPCQ – (OP × OQ) ஆகும். தகுவிலை (மொத்தப் பயன்பாடு) ODCQ ஆகும்.

நுகர்வோர் எச்சம் = ODCQ – OPCQ = PDC

= 20 – 10 = 10

∴ நுகர்வோர் எச்சம் = 10 (நிழலிட்ட பகுதி ஆகும்)

**31. நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தைத் தருக.** *[BEQ;First Mid - 2018]*

**விடை.** (i) நுகர்வோர் எச்சம் என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர்கள் தொன்மை பொருளியல் அறிஞர்கள் ஆவார்.

(ii) காலப்போக்கில் ஜூல் டூபூட் மற்றும் ஜீவன்ஸ் 1884–ல் இக்கருத்தில் மாற்றங்களை ஏற்படுத்தினர்.

(iii) ஆனால் நுகர்வோர் எச்சம் என்ற இக்கருத்தை சீர்படுத்தி வழங்கியவர் மார்ஷல் ஆவார்.

**இலக்கணம் :** *[Mar. 19]*

"ஒரு பொருளை வாங்காமல் இருப்பதைவிட வாங்குவதே மேல் என முடிவு செய்து, கொடுக்க நினைத்த விலைக்கும், நுகர்வோர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வித்தியாசம் நுகர்வோர் எச்சம்" எனப்படும் என்று மார்ஷல் கூறுகிறார்.

**எடுகோள்கள் :**

(i) பயன்பாட்டை அளவிட முடியும்.
(ii) பதிலீட்டு பண்டங்கள் இல்லை.
(iii) நுகர்வோரின் சுவை, வருமானம் மற்றும் செயல்பாட்டில் மாற்றமில்லை.

நுகர்வோர் எச்சம் = தகுவிலை – உண்மைவிலை


www.Padasalai.Net www.Surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores




**பண்டத்திற்கான அங்காடித் தேவை :**


**A என்பவரது தேவை**





**B என்பவரது தேவை**




**C என்பவரது தேவை**




**அங்காடித் தேவை**




அங்காடியில் உள்ள அனைத்து தனி நபர்களின் தேவை அளவினை ஒன்று கூட்டினால் பண்டத்திற்கான அங்காடித் தேவை வளைகோட்டினைப் பெறலாம்.

**தேவை விதியின் விதிவிலக்குகள் :**

பொதுவான தேவை வளைகோடு இடமிருந்து வலமாக கீழ்நோக்கிச் சரியும். ஆனால் சில விதிவிலக்கு தேவைக் கோடுகள் இந்த விதிக்கு கட்டுப்படாமல் மாறிச் செயல்படும்; விலை குறைவு தேவை சுருக்கத்தையும், விலை உயர்வு தேவை விரிவையும் ஏற்படுத்தும். இந்நிலையில் தேவைக்கோடு இடமிருந்து வலமாக மேல்நோக்கி உயரும். இது விதிவிலக்கான தேவைக்கோடு என அழைக்கப்படுகிறது.

**36. குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.** *[BEQ;Govt. MQP-2018; QY-2018, '19; Sep-2021;CRT, May & Aug-'22]*

**விடை. அறிமுகம் :**

(i) ஆஸ்திரிய பொருளியல் வல்லுனரான **H.H. காசன்** (Gossen) என்பவர் இவ்விதியை 1854 ல் பொருளியலில் முதன் முதலாக உருவாக்கினார்.

(ii) ஜெவான்ஸ் இவ்விதியை காசனின் முதல் நுகர்வு விதி என அழைத்தார்.

**இலக்கணம் :**

'ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்றபொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது' என்று மார்ஷல் இவ்விதியை வரையறை செய்கிறார்.

**எடுகோள்கள் :**

(i) பயன்பாடு எண்ணளவையில் அளவிட வேண்டும்.

(ii) பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடு மாறாது இருக்க வேண்டும்.

(iii) நுகர்வோர் பகுத்தறிவாளராக இருப்பதால் செலவை குறைப்பவராகவும் திருப்தியை அதிகப்படுத்துபவராகவும் இருக்க வேண்டும்.

(iv) நுகரப்படும் பண்ட அளவு ஒரே சீரானதாக இருக்க வேண்டும்.

(v) நுகரப்படும் பண்டத்தின் எல்லா அளவுகளும் ஒத்த தன்மை கொண்டவை (உ.ம்.) எடை, தரம், சுவை, நிறம் போன்றவை.


(vi) பண்டங்களை நுகரும் போது கால இடைவெளியின்றி தொடர்ந்து நுகர வேண்டும்.

**விளக்கம் :**

ஒரு நுகர்வோர் ஒரே பண்டத்தை தொடர்ந்து கால இடைவெளியின்றி தொடர்ச்சியாக நுகரும்போது ஒவ்வொரு கூடுதல் பொருளிலிருந்து கிடைக்கிற பயன்பாடு (இறுதிநிலைப் பயன்பாடு) குறைந்து செல்லும் என்று இவ்விதி விளக்குகிறது.

**அட்டவணை இறுதிநிலை பயன்பாடு**

| ஆப்பிள் அலகுகள் | மொத்தப் பயன்பாடு | இறுதிநிலைப் பயன்பாடு |
|---|---|---|
| 1 | 20 | 20 |
| 2 | 35 | 15 (35 –20) |
| 3 | 45 | 10 (45 – 35) |
| 4 | 50 | 5 (50 – 45) |
| 5 | 50 | 0 (50 – 50) |
| 6 | 45 | –5 (45 – 50) |
| 7 | 35 | –10 (35 – 45) |




**வரைபட விளக்கம் :**

X – அச்சு அலகுகளும், Y – அச்சில் TU & MU ம் குறிக்கிறது.

(i) ஒரு நுகர்வோர் 7 ஆப்பிள்களை ஒன்றன்பின் ஒன்றாக நுகர விரும்புகிறார்.

(ii) முதல் ஆப்பிளில் இருந்து அவர் பெற்ற பயன்பாடு 20 அலகுகள்.

www.Padasalai.Net www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



(iii) இரண்டாவது ஆப்பிளில் இருந்து பெற்ற பயன்பாடானது முதல் ஆப்பிளை விட குறைவானதாகும் (15 அலகுகள்).

(iv) அவர் தொடர்ந்து மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆப்பிளை நுகரும்போது மொத்த பயன்பாடு உச்சத்திலும் இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்ஜியத்திலும் இருக்கும்.

(v) மேலும் ஆறாவது, ஏழாவது ஆப்பிள்களை நுகர்ந்தால் அவர் பெறுவது எதிர்மறைப் பயன்பாடாகும்.

(vi) இந்த போக்கை கூறுவதே குறைந்த செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி ஆகும்.

## 37. சம இறுதிநிலை பயன்பாட்டு விதியை விளக்குக.

*[BEQ;QY-2018-CRT-'22]*

**விடை. சம இறுதிநிலை பயன்பாட்டு விதி :**

(i) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியானது விரிவாக்கப்பட்டு சமஇறுதிநிலை பயன்பாட்டு விதியாக உருவானது.

(ii) இவ்விதி "பதிலீட்டு விதி", "நுகர்வோரின் சமநிலை விதி" காசனின் **"இரண்டாம் விதி"** மற்றும் **"உச்ச பட்ச திருப்தி விதி"** என்றும் அழைக்கப்படுகிறது.

**வரையறை :**

மார்ஷலின் கூற்றுப்படி, "ஒரு மனிதன் பல வகையிலும் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருளைப் பெற்றிருந்தால், அதன் பலவகைப் பயன்களிடையே பகிர்ந்தளிக்கும்போது அதன் பயன்களின் இறுதிநிலைப் பயன்பாடு ஒரே அளவில் சமமாய் இருக்கும்படி பகிர்ந்தளிப்பான், ஒன்றை விட மற்றொன்றில் அதிக இறுதிநிலைப் பயன்பாடு கிடைக்குமெனில் அவர் அதிகப்பயன் பெறும் நோக்கில் குறைந்த பயன்தரும் பொருளில் இருந்து அதிக பயன்தரும் பொருளுக்கு மாறிவிடுவார்.

**அனுமானங்கள் :**

(i) திருப்தியை அதிகப்படுத்த விரும்பக் கூடிய பகுத்தறிவாளராக இருக்க வேண்டும்.

(ii) ஒவ்வொரு பண்டத்தின் பயன்பாடும் எண்ணளவில் அளவிடப்பட வேண்டும்.

(iii) பணத்தின் இறுதிநிலைப் பயன்பாட்டில் மாற்றமில்லை.

(iv) நுகர்வோரின் வருமானம் வரையறுக்கப்பட்டது.

(v) பொருட்களின் சந்தையில் நிறைவுப் போட்டி நிலவுகிறது.

(vi) பண்டங்களின் விலைகள் வரையறுக்கப்பட்டது.

(vii) குறைந்த செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி செயல்படுகிறது.

**விளக்கம் :**

(i) ஆப்பிள் மற்றும் ஆரஞ்சு என்று இரு பண்டங்களில் தன் வரையறுக்கப்பட்ட வருமானத்தை ஒரு நுகர்வோர் செலவிட விரும்புகிறார் என்று எடுத்துக் கொள்வோம்.

(ii) அவரின் வரையறுக்கப்பட்ட வருமானத்தில் அதிக திருப்தியை பெறக்கூடிய நிலையில் அவர் சமநிலையை அடைவார். அவரின் சமநிலையை கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

$$\frac{\text{ஆப்பிளின் இறுதிநிலைப் பயன்பாடு}}{\text{ஆப்பிளின் விலை}} = \frac{\text{ஆரஞ்சின் இறுதிநிலைப் பயன்பாடு}}{\text{ஆரஞ்சின் விலை}} = K$$

எனவே $\frac{MU_A}{P_A} = \frac{MU_O}{Po} = K$

(iii) K– என்பது பணத்தின் நிலையான இறுதிநிலைப் பயன்பாடு. எ.கா. 50/10 = 20/4 = 5

(iv) மேற்கூறிய சமன்பாட்டின் அடிப்படையில் இவ்விதியானது 'நுகர்வுச் சமநிலை விதி' என்று அழைக்கப்படுகிறது.

(v) ஒருவேளை = $\frac{MU_A}{P_A}$ வைவிட $\frac{MU_O}{Po}$ குறைவாக இருக்குமெனில் அவர் ஆப்பிளிலிருந்து ஆரஞ்சுக்குத் தான் செலவழிக்கும் தொகையை மாற்றிக் கொள்வார். இந்த பதிலீட்டு செயலானது அவருக்கு அதிக மனநிறைவை இரண்டு பண்டங்களில் இருந்தும் பெற வழிவகுக்கும். எனவே, இவ்விதியானது 'பதிலீட்டு விதி' என்றும் அழைக்கப்படுகிறது. எ.கா. ஆரஞ்சு : 20/4 ஆப்பிள் 50/25. இச்சூழலில் ஆப்பிளை நுகவர்தைவிட, ஆரஞ்சை நுகர்வது புத்திசாலித்தனம்.

| | ஆப்பிள் | | | ஆரஞ்சு | | |
|---|---|---|---|---|---|---|
| பண்டங்கள் எண்ணிக்கை | மொத்தப் பயன் பாடு | இறுதி நிலைப் பயன் பாடு | $\frac{MU_A}{P_A}$ | மொத்தப் பயன் பாடு | இறுதி நிலைப் பயன் பாடு | $\frac{MU_O}{Po}$ |
| 1 | 25 | 25 | 25/2 = 12.5 | 30 | 30 | 30/1 = 30 |
| 2 | 45 | 20 | 20/2 = 10 | 41 | 11 | 11/1 = 11 |
| 3 | 63 | 18 | 18/2 = 9 | 49 | 8 | 8/1 = 8 |
| 4 | 78 | 15 | 15/2 = 7.5 | 54 | 5 | 5/1 = 5 |
| 5 | 88 | 10 | 10/2 = 5 | 58 | 4 | 4/1 = 4 |
| 6 | 92 | 4 | 4/2 = 2 | 61 | 3 | 3/1 = 3 |


**எடுத்துக்காட்டு விளக்கம் :** நுகர்வோர் ₹ 14ஐ வருமானமாகக் கொண்டுள்ளார் என எடுத்துக் கொள்வோம். அவர் அந்த முழுத் தொகையையும் ஆப்பிளுக்காகவும் ஆரஞ்சுக்காகவும் செலவிட விரும்புகிறார். ஆப்பிளின் விலை ₹ 2 ஆரஞ்சின் விலை ₹ 1 ஆகவும் இருக்கிறது.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**சம இறுதிநிலைப் பயன்பாடு**




**வரைபட விளக்கம் :**

(i) X – அச்சில் செலவின் அளவும், Y – அச்சில் ஆப்பிள் மற்றும் ஆரஞ்சின் இறுதிநிலைப் பயன்பாட்டையும் குறிப்பிடுகிறோம்.

(ii) நுகர்வோர் ஆப்பிளுக்கான ₹ 10ம், ஆரஞ்சுக்காக ₹ 4ம் செலவிடுகிறார் எனக் கொண்டால், இரண்டின் இறுதிநிலைப் பயன்பாடும் சமமாக இருக்கும். [i.e. AA1 = BB1 (5=5)].

(iii) ஆகவே அவர் உச்ச பயன்பாட்டினை பெறுகிறார்.

**38. தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் யாவை?** *[BEQ;QY-2018; HY - '19;CRT-'22]*

**விடை.** விலைத் தேவை நெகிழ்ச்சியை நான்கு வகைகளில் அளவிடலாம்.

(i) **விழுக்காட்டு முறை :**

(1) $E_P = \frac{\Delta Q}{\Delta P} \times \frac{P}{Q}$

(2) இது **விகிதாசார முறை** என்றும் அழைக்கப்படுகிறது.

(3) விகிதாச்சார முறையில்

$$E_P = \frac{\%\Delta Q}{\%\Delta P}$$

இதில் %ΔQ என்பது தேவையில் ஏற்படும் சதவீத மாற்றம் %ΔP என்பது விலையில் ஏற்படும் சதவீத மாற்றம்.

(ii) **மொத்தச் செலவு முறை :**

நுகர்வோரின் மொத்த செலவில் ஏற்படும் மாற்றத்தையோ அல்லது நிறுவனத்தின் மொத்த வருவாயில் ஏற்படும் மாற்றத்தையோ அளவிடுவதன் மூலம் தேவையானது நெகிழ்ச்சி உள்ளதா நெகிழ்ச்சியற்றதா என்பதை எளிய முறையில் அறியமுடியும் என மார்ஷல் குறிப்பிடுகிறார்.

மொத்த வருவாய் = விலை × விற்பனை அளவு

TR = P × Q


**மொத்த ஒதுக்கீட்டு முறை**

| விலை | தேவை அளவு | மொத்த ஒதுக்கீடு | நெகிழ்ச்சி |
|---|---|---|---|
| 150 | 3 | 450 | } e > 1 |
| 125 | 4 | 500 | } e = 1 |
| 100 | 5 | 500 | |
| 75 | 6 | 450 | } e < 1 |

விலைக்கும் மொத்தச் செலவிற்கும் எதிர்மறை உறவு இருக்குமெனில் இங்கு தேவை நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கும்.

(iii) **புள்ளி அல்லது வடிவியல் முறை :**

நேர் தேவைக் கோட்டில் குறிப்பிட்ட புள்ளியினுடைய வலப்பகுதியை இடப்பகுதியால் வகுக்கக் கிடைக்கும் விகிதத்தைக் கொண்டு புள்ளிமுறையில் நெகிழ்ச்சியை அளவிடலாம்.




புள்ளி நெகிழ்ச்சி = $\frac{\text{தேவை கோட்டில் புள்ளிக்கு கீழ்ப் பகுதியின் அளவு(வலது பகுதி)}}{\text{தேவைக் கோட்டில் புள்ளிக்கு மேல் பகுதி(இடது பகுதி)}}$

$$e_p = \frac{L}{U} = \frac{\text{கீழ்பகுதி}}{\text{மேல்பகுதி}}$$

# அரசு தேர்வு வினாக்கள்

## 1 மதிப்பெண்

(i) **கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. நுகர்வோர் எச்சம் ₹75 ஆகவும், உண்மை விலை ₹372 ஆகவும் உள்ளது எனில் தகு விலையினை காண்க.** *[Mar-'19]*

(அ) 447 (ஆ) 50 (இ) 375 (ஈ) 474

[விடை. (அ) 447]

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores




**2. தகு விலை ரூ.350 ஆகவும் மற்றும் உண்மை விலை ரூ. 250 ஆகவும் உள்ளது நுகர்வோர் எச்சத்தைக் காண்க.** *[BEQ;HY-2018]*

அ) 375 ஆ) 175 இ) 200 ஈ) 100

**[விடை. (ஈ) 100]**

**3. தேநீர் பண்டத்தை விளக்கக் கூடிய 3 தேவை வளை கோடுகள் படத்தில் காட்டப்பட்டுள்ளது.** *[BEQ] [Govt. MQP-2018]*




**தேநீர் மற்றும் காபி ஆகியன பதிலிப்பண்டங்கள் என்க. காபியின் விலை உயர்ந்தால், பின்வருவனவற்றுள் எத்தகைய மாற்றம் அங்காடியில் தேநீர் பண்டத்திற்கு உரியதாக அமையும்?**

(அ) A யிலிருந்து C (ஆ) A யிலிருந்து B
(இ) B யிலிருந்து A (ஈ) B யிலிருந்து E

**[விடை. (அ) A யிலிருந்து C]**

**4. தகு விலை ரூ. 375 ஆகவும் மற்றும் உண்மை விலை ரூ. 200 ஆகவும் உள்ளது. நுகர்வோர் எச்சம் காண்க.** *[BEQ] [Govt. MQP-2018]*

(அ) 375 (ஆ) 175 (இ) 200 (ஈ) 50

**[விடை. (ஆ) 175]**

**5. தேவைக் கோடும் அளிப்புக் கோடும் ஒன்றை ஒன்று வெட்டும் புள்ளி _______ ஆகும்.** *[HY - '19]*

(அ) சமநிலை விலை (ஆ) சமநிலையற்ற விலை
(இ) பகுதி சமநிலை (ஈ) பொதுச் சமநிலை

**[விடை. (அ) சமநிலை விலை]**

**(ii) கீழ்க்கண்ட கோடிட்ட இடத்திற்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. சமநோக்கு வளைகோடு _______ ஆக அமையும்.** *[BEQ] [First Mid - 2018]*

(அ) செங்குத்துக் கோடு (ஆ) படுக்கைக் கோடு
(இ) நேர்மறை சரிவுடையது (ஈ) எதிர்மறைச் சரிவுடையது

**[விடை. (ஈ) எதிர்மறைச் சரிவுடையது]**

**2. சம நோக்கு வளைகோடுகள் :** *[Mar-2020]*

(அ) எதிர்மறைச் சரிவுடையவை
(ஆ) செங்குத்துக் கோடுகள்
(இ) படுக்கைக் கோடுகள்
(ஈ) நேர்மறைச் சரிவுடையவை

**[விடை. (அ) எதிர்மறைச் சரிவுடையவை]**

## 2 மதிப்பெண்கள்

**1. சம இறுதிநிலை பயன்பாட்டு விதியின் குறைபாடுகளை எழுதுக.** *[BEQ;First Mid - 2018]*

**விடை.** 1) பயன்பாட்டினை அளவிட முடியாது, உணர மட்டுமே முடியும்.
2) இவ்விதி நீண்ட காலப் பயன்பாட்டு பண்டங்களுக்கு பொருந்தாது.

**2. ஒரு பண்டத்தின் விலை ₹ 50 விலிருந்து ₹ 30 ஆகக் குறைகின்றது. இதன் காரணமாக பண்டத்தினை வாங்கும் அளவு 200 அலகுகளிலிருந்து 220 அலகுகளாக அதிகரிக்கின்றது. விலை தேவை நெகிழ்ச்சியை கணக்கிடுக.**

**தீர்வு :** *[BEQ;Govt. MQP-2018]*

விலைத்தேவை நெகிழ்ச்சியை கணக்கிடும் வாய்ப்பாடு $= \frac{\Delta Q}{Q} \times \frac{P}{\Delta P}$

இதனை $Ep = \frac{\Delta Q}{\Delta P} \times \frac{P}{Q}$

$Q = 200$ $\Delta Q = 20$ $(220 - 200)$

$P = 50$ $\Delta P = 20$ $(50 - 30)$

$$EP = \frac{\Delta Q}{\Delta P} \times \frac{P}{Q}$$

$$= \frac{\cancel{20}^{1}}{\cancel{20}} \times \frac{\cancel{50}^{1}}{\cancel{200}^{4}}$$

$\therefore EP = 0.25$

விலைத் தேவை நெகிழ்ச்சி = 0.25 ஆகும்.

## 3 மதிப்பெண்கள்

**1. தேவை நெகிழ்ச்சியின் முக்கியத்துவத்தை எழுதுக.** *[BEQ;First Mid - 2018]*

**விடை.** 1) விலைத் தீர்மானம்
2) உற்பத்தி
3) பகிர்வு
4) பன்னாட்டு வாணிபம்
5) பொது நிதி
6) நாட்டுடமையாக்குதல்

## 5 மதிப்பெண்கள்

**1. மனித விருப்பங்களின் இயல்புகள் யாவை?** *[BEQ;Govt. MQP-2018]*

**விடை. (அ) விருப்பங்கள் எண்ணற்றவை :**

மனித விருப்பங்கள் எண்ணிலடங்காதவை மற்றும் பல வகையானவை. ஒரு விருப்பம் நிறைவடையும்போது மற்றொரு விருப்பம் தோன்றும். வளர்ச்சியும் நாகரிகமும் வளர வளர மனித விருப்பங்கள் பல்கிப் பெருகும்.

**(ஆ) விருப்பங்கள் பழக்க வழக்கங்களாக மாறும் :**

விருப்பங்கள் பழக்கங்களாகவும், வழக்கங்களாகவும் மாறும். எடுத்துக்காட்டாக காலையில் நாளிதழ் படிக்கின்ற மனிதனின் விருப்பம் பழக்கமாக மாறிவிடுகிறது. தேனீர் அருந்துதல் மற்றும் வெற்றிலை மெல்லுதல் போன்றவையும் இவ்வாறே பழக்கமாக மாறிவிடுகின்றன.

www.Padasalai.Net
www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

அத்தியாயம்
4

# செலவு மற்றும் வருவாய் பற்றிய ஆய்வு

பொருளடக்கம்


**4.1** முன்னுரை
**4.2** செலவு பற்றிய ஆய்வு
**4.3** செலவு கருத்துக்கள்
- **4.3.1** பணச் செலவு
- **4.3.2** உண்மைச் செலவு
- **4.3.3** வெளிப்படையான செலவு / செலவிட்ட செலவு
- **4.3.4** உள்ளார்ந்த செலவு
- **4.3.5** பொருளாதாரச் செலவு
- **4.3.6** சமூகச் செலவு
- **4.3.7** வாய்ப்புச் செலவு
- **4.3.8** அமிழ்த்தப்பட்ட செலவு
- **4.3.9** மிதக்கும் செலவு
- **4.3.10** முதன்மைச் செலவு
- **4.3.11** மாறாச் செலவு
- **4.3.12** மாறும் செலவுகள்

**4.4** குறுகியகாலச் செலவுக் கோடுகள்
- **4.4.1** மொத்த மாறாச் செலவு
- **4.4.2** மொத்த மாறும் செலவு
- **4.4.3** மொத்தச் செலவு வளைகோடு
- **4.4.4** சராசரி மாறாச் செலவு
- **4.4.5** சராசரி மாறும் செலவு
- **4.4.6** சராசரி மொத்தச் செலவு (அ) சராசரி செலவு
- **4.4.7** இறுதிநிலைச் செலவு
- **4.4.8** சராசரி செலவிற்கும் இறுதிநிலை செலவிற்கும் உள்ள தொடர்புகள்

**4.5** நீண்டகாலச் செலவுக் கோடு
**4.6** வருவாய் பற்றி ஆய்வு
- **4.6.1** வருவாய் கருத்துக்கள்
- **4.6.2** AR மற்றும் MR வளைகோடுகளுக்கு இடையே உள்ள தொடர்பு
- **4.6.3** TR, AR மற்றும் MR வளைகோடுகளுக்கு இடையே உள்ள தொடர்பு
- **4.6.4** TR, AR, MR மற்றும் தேவை நெகிழ்ச்சி

**4.7** தொகுப்புரை



www.Padasalai.Net
www.surabooks.com



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores






orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



# முக்கியக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **செலவு** | : | ஒரு பொருளை உற்பத்தி செய்யும் போது ஏற்படுகின்ற பலவகையான செலவினங்கள் "உற்பத்திச் செலவு" (Cost of Production) என்று அழைக்கப்படும். |
| **செலவுச் சார்பு** | : | செலவுச் சார்பு என்பது மொத்த செலவினங்களுக்கும் மற்றும் உற்பத்திக்கும் இடையே உள்ள தொடர்பினை (Functional Relationship) வெளிப்படுத்துகிறது. |
| **பணப் செலவு** | : | உற்பத்திச் செலவுகள் பணத்தால் குறிப்பிடப்பட்டால் அது பணச் செலவு எனப்படும். |
| **உண்மைச் செலவு** | : | உண்மைச் செலவு என்பது அனைத்து காரணிகளின் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் சங்கடங்கள், முயற்சிகள் மற்றும் தியாகங்களுக்காக அக்காரணிகளின் உடமையாளருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையாகும். |
| **வெளிப்படையான செலவு** | : | உற்பத்திக் காரணிகளை வாங்க மற்றவர்களுக்கு செலுத்தும் செலுத்துகையே வெளிப்படையான செலவு எனப்படும். |
| **உள்ளார்ந்த செலவு** | : | நிறுவனத்திற்குச் சொந்தமான உற்பத்தி வளங்களுக்கு வழங்கப்படும் ஊதியம் உள்ளார்ந்த செலவு எனப்படும். |
| **பொருளாதார செலவு** | : | வெளிப்படையான மற்றும் உள்ளார்ந்த செலவுகள் உள்ளடக்கியதே பொருளாதாரச் செலவு எனப்படும். |
| **சமூகச் செலவு** | : | சமூகச் செலவு என்பது உற்பத்தியின் விளைவாக சமுதாயம் எதிர்கொள்ளும் செலவாகும். |
| **வாய்ப்புச் செலவு** | : | பிறவாய்ப்புச் செலவு என்பது அடுத்த சிறந்த மாறுபட்ட செலவைக் குறிக்கும். |
| **அமிழ்த்தப்பட்ட செலவு** | : | மீட்டு எடுக்க முடியாத, கடந்த காலச் செலவுகள் அமிழ்த்தப்பட்ட செலவுகள் ஆகும். |
| **மிதக்கும் செலவு** | : | வியாபார நடவடிக்கைகளுக்கு நேரடியாக தொடர்புடைய செலவுகள் அனைத்தும் மிதக்கும் செலவுகள் எனப்படும். |
| **முதன்மைச் செலவு** | : | உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடக் கூடிய செலவுகளுடன், நிர்வாகச் செலவையும் சேர்த்துக் கொண்டால் அது முதன்மைச் செலவு எனப்படும். |
| **மாறாச் செலவு** | : | மாறா உற்பத்திக் காரணிகளுக்கு ஆகும் செலவு மாறாச் செலவு என்று அழைக்கப்படுகின்றது. |
| **மொத்தச் செலவு** | : | மொத்தச் செலவு என்பது மொத்த மாறாச் செலவையும் மொத்த மாறும் செலவையும் கூட்டிய மொத்தத் தொகையாகும். |
| **மாறும் செலவு** | : | உற்பத்தி மாறுபடுவதற்கேற்ப செலவுகள் மாறுபடும் இதுவே மாறுபடும் செலவு எனப்படும். |
| **மொத்த மாறாச் செலவு** | : | மாறாத உற்பத்தி காரணிகளுக்கு செய்யப்படும் அனைத்துச் செலவுகளின் கூடுதல் மொத்த மாறாச் செலவாகும். |
| **மொத்த மாறும் செலவு** | : | மாறும் உற்பத்திக் காரணிகளுக்கு செய்யப்படும் அனைத்து செலவுகளின் கூடுதல் மொத்த மாறும் செலவாகும். |
| **சராசரி செலவு** | : | சராசரி செலவு என்பது ஓர் அலகிற்கான செலவு ஆகும். |
| **சராசரி மாறும் செலவு** | : | சராசரி மாறும் செலவு என்பது உற்பத்தியின் ஒரு அலகிற்கான மாறும் செலவாகும். |
| **சராசரி மாறாச் செலவு** | : | சராசரி மாறாச் செலவு என்பது உற்பத்தியின் ஒரு அலகிற்கான மாறாச் செலவாகும். |
| **சராசரி மொத்தச் செலவு** | : | சராசரி செலவு என்பது ஒரு பண்டத்திற்கான ஓர் அலகு செலவு. |
| **வருவாய்** | : | அங்காடியில் விற்பனை செய்வதன் மூலம் ஒரு நிறுவனம் பெறுகின்ற வருமானமே நிறுவனத்தின் வருவாய் எனப்படும். |
| **மொத்த வருவாய்** | : | மொத்த வருவாய் என்பது, தான் உற்பத்தி செய்த பண்டங்களை விற்று அதனால் கிடைக்கின்ற மொத்த வருமானமே மொத்த வருவாய் என்று குறிப்பிடப்படுகிறது. |
| **சராசரி வருவாய்** | : | சராசரி வருவாய் என்பது ஒரு பொருளை விற்பனை செய்வதினால் கிடைக்கும் ஓர் அலகு வருவாயாகும். |

www.Padasalai.Net www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



| | | |
|---|---|---|
| **இறுதிநிலைச் செலவு** | : | ஒரு அலகு உற்பத்தி அதிகரிப்பினால், மொத்த செலவில் ஏற்படும் கூடுகின்ற நிகர அளவு செலவே இறுதிநிலைச் செலவு என்று அழைக்கிறோம். |
| **சமமுறிவுப் புள்ளி** | : | சமமுறிவுப் புள்ளி என்பது இலாபமும், நட்டமும், இல்லா நிலையை குறிக்கும். இப்புள்ளியில் மொத்த வருவாயானது மொத்த செலவிற்கு சமமாக இருக்கும் (TR = TC). |
| **இலாபம்** | : | இலாபம் என்பது ஒரு நிறுவனத்தின் மொத்த வருவாய்க்கும் மொத்த செலவிற்கும் இடையே உள்ள வேறுபாடாகும். |

# இலக்கணம்

| | | |
|---|---|---|
| **செலவு வரையறு** | : | ஒரு பொருளை உற்பத்தி செய்யும் போது ஏற்படுகின்ற பலவகையான செலவினங்கள் "உற்பத்தி செலவு" என்று அழைக்கப்படுகிறது. |
| **வாய்ப்புச் செலவு வரையறு** | : | "வாய்ப்பு செலவு" என்பது சில வாய்ப்புகளை இழப்பதால் ஏற்படும் செலவாகும். அதாவது அந்த வாய்ப்புகளின் மூலம் பெற்றிருக்கக்கூடிய நன்மைகள் ஆகும். வேறுவிதமாக சொல்வதானால் "வாய்ப்புச் செலவு" என்பது அடுத்த தகுந்த மதிப்புடைய மாற்றுப் பண்டங்களின் மதிப்பை குறிப்பிடுவதாகும். |
| **உண்மைச் செலவின் இலக்கணம்** | : | ஆடம் ஸ்மித் கருத்துப்படி, உழைப்பாளர்களின் துன்பங்களும், தியாகங்களுமே உண்மையான செலவு என்று கூறுகிறார். |
| **சமூகச் செலவின் இலக்கணம்** | : | மார்ஷலின் கூற்றுப்படி, நிறுவனம் உற்பத்தி செய்யும் ஒரு பண்டத்தினால் சமுதாயத்தில் உள்ள மற்ற மக்கள் ஏற்றுக் கொள்ளும் சங்கடங்களும், தியாகங்களும் சமூகச் செலவு எனப்படும். |
| **இறுதிநிலைச் செலவு வரையறு** | : | "ஒரு அலகு உற்பத்தி அதிகரிப்பினால், மொத்த செலவில் ஏற்படும் கூடுகின்ற நிகர அளவு செலவே இறுதிநிலைச் செலவு என்று வரையறை செய்யப்படுகின்றது." |
| **வெளிப்படையான செலவு வரையறு** | : | "ஒரு நிறுவனம் தன்னுடைய உற்பத்திக்கு தேவையான காரணிகளை விலைக்கு வாங்கியோ அல்லது வாடகைக்கு அமர்த்தியோ உற்பத்தியை மேற்கொள்ளும்போது ஏற்படும் ஒட்டு மொத்தச் செலவு வெளிப்படையான செலவு எனப்படும்." |
| **உள்ளார்ந்த செலவு வரையறு** | : | "நிறுவனத்திற்குச் சொந்தமான உற்பத்தி வளங்களுக்கு வழங்கப்படும் ஊதியம் உள்ளார்ந்த செலவு எனப்படும்." |
| **பேரேட்டு செலவின் இலக்கணம்** | : | கணக்கிடும் செலவு (கணக்கீட்டுச் செலவு) என்பது உற்பத்தியாளன் நேரடியாக செலுத்தும் (அ) அவரே கணக்கிடும் நியமிக்கப்பட்ட உழைப்பாளரின் கூலி, பெறப்பட்ட முதலீடு, பண்டங்களின் விலைகள், எரிபொருள் மற்றும் மின்சார செலவுகள், உற்பத்தி வேலைகளுக்காக வாடகைக்குக் கொள்ளப்பட்ட கட்டிடத்திற்கான வாடகை, கடன் வாங்கப்பட்ட மூலதனத்திற்கான வட்டிவீதம் மற்றும் செலுத்தப்பட்ட வரிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். |

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



# புத்தக வினாக்கள்

## மாதிரி வினாக்கள்

## பகுதி - அ

**சரியான (அல்லது) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. செலவு என்பது** *[Sep-2020]*
(அ) விலை (ஆ) மதிப்பு
(இ) மாறாச் செலவு (ஈ) உற்பத்தி
**[விடை. (ஈ) உற்பத்தி]**

**2. செலவுச் சார்புகளை _______ சார்புகள் எனலாம்.** *[CRT-'22]*
(அ) உற்பத்தி (ஆ) முதலீடு
(இ) தேவை (ஈ) நுகர்வு
**[விடை. (அ) உற்பத்தி]**

**3. பணச் செலவை _______ செலவு என்றும் அழைக்கலாம்.** *[HY-2018]*
(அ) வெளியுறு (ஆ) உள்ளுறு
(இ) சமூக (ஈ) உண்மை
**[விடை. (அ) வெளியுறு]**

**4. வெளியுறு செலவுகள் மற்றும் உள்ளுறு செலவுகளின் கூடுதல் _______ செலவாகும்.** *[QY - '19; Sep-2021]*
(அ) சமூக (ஆ) பொருளாதார
(இ) பண (ஈ) மாறா
**[விடை. (ஆ) பொருளாதார]**

**5. வெளியுறு செலவுகள் என்பது**
(அ) கையிலிருந்து செய்யும் செலவுகள்
(ஆ) உண்மைச் செலவுகள்
(இ) சமூகச் செலவு
(ஈ) மூழ்கும் செலவுகள்
**[விடை. (அ) கையிலிருந்து செய்யும் செலவுகள்]**

**6. தனக்குச் சொந்தமான வளங்களை நிறுவனத்திற்கு செய்யும் செலவு _______.** *[CRT & Aug-'22]*
(அ) உண்மைச் செலவு (ஆ) வெளியுறு செலவு
(இ) பணச் செலவு (ஈ) உள்ளுறு செலவு
**[விடை. (ஈ) உள்ளுறு செலவு]**

**7. உற்பத்தியின் எல்லா மட்டங்களிலும் மாறாத செலவுகள் _______.**
(அ) மாறாச் செலவு (ஆ) மாறும் செலவு
(இ) உண்மைச் செலவு (ஈ) சமூகச் செலவு
**[விடை. (அ) மாறாச் செலவு]**

**8. சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு** *[Govt. MQP-2018] [Mar. 19]*
(அ) TC / Q (ஆ) TVC / Q (இ) TFC / Q (ஈ) TAC / Q
**[விடை. (ஆ) TVC / Q]**

**9. ஓர் அலகு கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு** *[May-'22]*
(அ) மாறும் செலவு (ஆ) மாறாச் செலவு
(இ) இறுதிநிலைச் செலவு (ஈ) மொத்தச் செலவு
**[விடை. (இ) இறுதிநிலைச் செலவு]**

**10. உற்பத்திக்கு ஏற்றாற் போல் மாறும் செலவு _______ செலவு எனப்படும்.**
(அ) பண (ஆ) மாறும் (இ) மொத்த (ஈ) மாறா
**[விடை. (ஆ) மாறும்]**

**11. கூலி _______ செலவுக்கு எடுத்துக்காட்டாகும்.** *[BEQ;CRT-'22]*
(அ) மாறா (ஆ) மாறும்
(இ) இறுதிநிலை (ஈ) வாய்ப்பு
**[விடை. (ஆ) மாறும்]**

**12. ஓர் அலகு உற்பத்திக்கான செலவு _______ செலவாகும்.** *[Sep-2021]*
(அ) சராசரி (ஆ) இறுதிநிலை
(இ) மாறும் (ஈ) மொத்த
**[விடை. (அ) சராசரி]**

**13. சராசரிச் செலவுக்கான வாய்ப்பாடு** *[May-'22]*
(அ) AVC / Q (ஆ) TC / Q
(இ) TVC / Q (ஈ) AFC / Q
**[விடை. (ஆ) TC / Q]**

**14. மொத்த மாறாச் செலவு 100, மொத்த மாறும் செலவு 125 எனில் மொத்தச் செலவைக் கணக்கிடுக.** *[BEQ; HY - '19; CRT-'22]*
(அ) 125 (ஆ) 175 (இ) 225 (ஈ) 325
**[விடை. (இ) 225]**

**15. நீண்ட கால சராசரி செலவுக் கோடு _______ கோடு என அழைக்கப்படுகிறது.** *[QY - '19]*
(அ) தேவைக் (ஆ) திட்ட
(இ) உற்பத்தி (ஈ) விற்பனை
**[விடை. (ஆ) திட்ட]**

**16. பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் _______ வருவாயாகும்.** *[Mar-2020]*
(அ) இலாபம் (ஆ) மொத்த
(இ) சராசரி (ஈ) இறுதிநிலை
**[விடை. (ஆ) மொத்த]**

**17. ஓர் அலகு பொருளை கூடுதலாக விற்பதால் கிடைக்கும் வருவாய் _______ வருவாயாகும்.** *[BEQ] [HY-2018]*
(அ) இலாபம் (ஆ) சராசரி
(இ) இறுதிநிலை (ஈ) மொத்த
**[விடை. (இ) இறுதிநிலை]**

www.Padasalai.Net www.surabooks.com


Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**18. இறுதிநிலை வருவாய் என்பது ஏற்கனவே உள்ள _______ உடன் கூடுதலாக பெறுவது.** *[Aug-'22]*

(அ) மொத்த விற்பனை (ஆ) மொத்த வருவாய்
(இ) மொத்த உற்பத்தி (ஈ) மொத்தச் செலவு

**[விடை. (ஆ) மொத்த வருவாய்]**

**19. விலை நிலையாக இருக்கும்போது, AR கோடு MR கோட்டுக்கு _______ ஆக இருக்கும்.**

(அ) சமமாக (ஆ) அதிகமாக
(இ) குறைவாக (ஈ) தொடர்பற்று

**[விடை. (அ) சமமாக]**

**20. ஒரு புத்தகம் ₹10 வீதம் 40 புத்தகங்களை விற்கிறார், எனில் அவருக்கு கிடைக்கும் மொத்த வருவாய்**

(அ) 100 (ஆ) 200 (இ) 300 (ஈ) 400

**[விடை. (ஈ) 400]**

## பகுதி – ஆ

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி.**

**21. செலவை வரையறு.**

**விடை.** (i) செலவு என்பது உற்பத்திச் செலவைக் குறிக்கும்.

(ii) ஒரு பொருளை உற்பத்தி செய்யும் போது ஏற்படுகின்ற பல்வேறு வகையான செலவினங்கள் உற்பத்திச் செலவு ஆகும்.

(iii) உற்பத்தி செலவினை ஆய்வு செய்யும் போது அதனுடன் தொடர்புடைய பல்வேறு காரணிகளையும் அறிந்து கொள்ளவேண்டும்.

(iv) **(எ.கா.)** நிறுவனத்தின் அளவு.

**22. செலவுச் சார்பை வரையறு.**

**விடை.** (i) செலவுச் சார்பு என்பது **மொத்த செலவிற்கும் மற்றும் உற்பத்திக்கும் இடையே உள்ள தொடர்பினை வெளிப்படுத்துகிறது.**

(ii) செலவுச் சார்பை, C = f (Q) என்று எழுதலாம் இதில் C = செலவு, Q = உற்பத்தி அளவு.

(iii) செலவுச் சார்பு என்பது பெறப்பட்ட சார்பு ஆகும்.

**23. மாறாச் செலவு என்றால் என்ன?** *[BEQ;Sep-2020;CRT-'22]*

**விடை.** (i) மாறாச் செலவுகள் உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுவதில்லை.

(ii) மாறாக் காரணிகளுக்காக செய்யப்படும் செலவுகள் மாறாமல் நிலையாக இருக்கும்.

(எ.கா.) நிறுவனத்தின் வாடகை, காவலரின் ஊதியம்.

**24. வருவாயை வரையறு.** *[BEQ;HY-2018 & '19]*

**விடை.** (i) ஒரு விற்பனையாளர் தன் பண்ட **பரிமாற்றத்தின் மூலம் ஈட்டுகின்ற பணமே வருவாய்** எனப்படும்.

(ii) உற்பத்தியாளர் தான் உற்பத்தி செய்த பண்டத்தை ஒரு குறிப்பிட்ட விலையில், சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் பெறுகின்ற வருமானமே அந்நிறுவனத்தின் வருவாய் எனப்படும்.

**25. வெளியுறு செலவு - வரையறு.** *[May-'22]*

**விடை.** (i) உற்பத்திக் காரணிகளை வாங்க மற்றவர்களுக்கு செலுத்தும் செலுத்துகையே வெளிப்படையான செலவு எனப்படும்.

(ii) வெளிப்படையான செலவு என்பது கணக்கியல் செலவு (அ) **வெளிச்செலவு** (அ) **பணச் செலவு** என்றும் அழைக்கப்படும்.

**26. உண்மைச் செலவு - இலக்கணம் தருக.**

**விடை.** (i) "ஆடம் ஸ்மித் கருத்துப்படி, உழைப்பாளர்களின் துன்பங்களும், தியாகங்களுமே உண்மையான செலவு என்று கூறுகிறார்.

(ii) உண்மைச் செலவு என்பது அனைத்து காரணிகளின் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும், சங்கடங்கள், முயற்சிகள் மற்றும் தியாகங்களுக்காக அக்காரணிகளின் உடமையாளருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையாகும்.

**27. மூழ்கும் செலவுகள் என்றால் என்ன?**

*[Govt. MQP-2018; QY-2018 ; Mar-'19; Sep-2021; Aug-'22]*

**விடை.** (i) மீட்டு எடுக்க முடியாத கடந்த காலச் செலவுகள் அமிழ்த்தப்பட்ட (அ) மூழ்கும் செலவுகள் ஆகும்.

(ii) எதிர்கால வியாபாரத்தை தீர்மானிப்பதில் இக்கடந்த காலச் செலவுகள் பொருத்தமற்றதாக இருக்கும்.

## பகுதி – இ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடையளி.**

**28. மாறாச் செலவை - மாறும் செலவிலிருந்து வேறுபடுத்துக.**

**விடை.**

| வ. எண் | மாறாச் செலவுகள் (Fixed Cost) | மாறும் செலவுகள் (Variable Cost) |
|---|---|---|
| 1 | மாறாச் செலவுகள் உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுவதில்லை. | மாறும் செலவுகள் உற்பத்தி மாறுபடுவதற்கேற்ப செலவுகள் மாறுபடும். |
| 2 | மாறாக் காரணிகளுக்காக செய்யப்படும் செலவுகள் மாறாச் செலவுகள் எனப்படும். | மாறும் காரணிகளுக்காக செய்யப்படும் செலவுகள் மாறும் செலவுகள் ஆகும். |
| 3 | உற்பத்தி அதிகரித்தாலும், குறைந்தாலும், உற்பத்தி பூஜ்ஜியமாக இருந்தாலும் கூட இச்செலவுகள் மாறாமல் நிலையாக இருக்கும். | உற்பத்தி செலவு அதிகரித்தால் இச்செலவு அதிகரிக்கும், குறைந்தால் குறையும், பூஜ்ஜியமாக இருந்தால் மாறும் செலவும் பூஜ்ஜியமாக இருக்கும். |
| 4 | (எ.கா.) நிறுவனத்தின் வாடகை | (எ.கா.) பணியாளர்களின் கூலி |

www.Padasalai.Net www.Surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**29. பணச் செலவு -உண்மைச் செலவு வேறுபாடுகளைக் கூறுக.**

விடை. *[BEQ] [QY - '19; Sep-2020]*

| வ. எண் | உண்மைச் செலவு | பணச் செலவு |
|---|---|---|
| 1 | உண்மைச் செலவு என்பது அனைத்து காரணிகளின் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும், சங்கடங்கள், முயற்சிகள் மற்றும் தியாகங்களுக்காக அக்காரணிகளின் உடமையாளருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையாகும். | உற்பத்தி செலவுகள் பணத்தால் குறிப்பிட்டால் அது பணச் செலவு. |
| 2 | நிலத்தை பயன்படுத்துவதால், நிலச்சுவாந்தார் சந்திக்கும் பல்வேறு முயற்சிகளும், மற்றும் தியாகங்களும், முதலீட்டாளர் தங்கள் நுகர்வு மூலம் சேமித்தவற்றை முதலீடு செய்வதும், உழைப்பாளர் தங்கள், ஓய்வு நேரத்தை உற்பத்தியில் ஈடுபடுவதும் உண்மை செலவில் அடங்கும். | கச்சாப் பொருள்களுக்கான செலவுகள், உழைப்பதற்கான கூலி மற்றும் சம்பளம் கட்டிடங்களுக்கான வாடகை, மூலதனத்திற்கான வட்டி, எரிபொருள் மற்றும் மின் சக்திக்கான செலவு போக்குவரத்துச் செலவுகள் மற்றும் உற்பத்தி சார்ந்த பிற செலவுகள் இதில் அடங்கும். |
| 3 | ஆடம் ஸ்மித் கருத்துப்படி உழைப்பாளர்களின் துன்பங்களும், தியாகங்களுமே உண்மையான செலவு என்று கூறுகிறார். | முதன்மைச் செலவு, நேரடிச் செலவு, பெயரளவுச் செலவு, கணக்கியல் செலவு, வெளிப்படையான செலவு, வெளிச் செல்லும் செலவு ஆகியவை பணச் செலவில் அடங்கும். |

**30. வெளியுறு செலவு - உள்ளுறு செலவு வேறுபடுத்துக.** *[CRT-'22]*

விடை.

| வ. எண் | வெளியுறு செலவு | உள்ளுறு செலவு |
|---|---|---|
| 1 | உற்பத்திக் காரணிகளை வாங்க மற்றவர்களுக்கு செலுத்தும் செலுத்துகையே வெளிப்படையான செலவு எனப்படும். | நிறுவனத்திற்குச் சொந்தமான உற்பத்தி வளங்களுக்கு வழங்கப்படும் ஊதியம் உள்ளார்ந்த செலவு எனப்படும். |
| 2 | ஒரு நிறுவனம் தன்னுடைய உற்பத்திக்கு தேவையான காரணிகளை விலைக்கு வாங்கியோ அல்லது வாடகைக்கு அமர்த்தியோ உற்பத்தியை மேற்கொள்ளும் போது ஏற்படும் ஒட்டு மொத்த செலவு வெளிப்படையான செலவு. | ஒரு நிறுவனத்திற்கு சொந்தமான வளங்கள் மற்றும் சுய உழைப்பிற்கான செலவுகள் உள்ளார்ந்த செலவுகள். |
| 3 | வெளிப்படையான செலவு என்பது கணக்கியல் செலவு அல்லது பணச் செலவு என்று அழைக்கப்படும். | உள்ளார்ந்த செலவு என்பது மறைந்திருக்கும் செலவு அல்லது ஏட்டுச் செலவு என்றழைக்கப்படும். |

**31. வாய்ப்புச் செலவை எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.**

*[BEQ] [Govt. MQP-2018; QY-2018; HY-2018; Mar. 19]*

விடை. (i) பிறவாய்ப்பு செலவு என்பது அடுத்த சிறந்த மாறுபட்ட செலவைக் குறிக்கும்.

(ii) ஒரு பண்டத்தின் சிறந்த பயன்பாடு தேந்தெடுக்கப் படுவதால் அதனுடைய அடுத்த சிறந்த பயன்பாடு விட்டுக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

(iii) எடுத்துக்காட்டாக, ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில் நெல் அல்லது கரும்பை விளைவிக்க முடியும். அவ்விவசாயி நெல் சாகுபடி செய்தால், நெல்லின் வாய்ப்புச் செலவு யாதெனில் விட்டுத்தந்த கரும்பு உற்பத்தியின் அளவே ஆகும்.

**32. AC மற்றும் MC எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.**

*[QY - '19; Sep-2021;CRT-'22]*

விடை. **சராசரி செலவு (ATC) அல்லது சராசரி செலவு (AC) :**

(i) சராசரி செலவு என்பது ஒரு பண்டத்திற்கான செலவு எனப்படும்.

(ii) சராசரி மொத்தச் செலவு என்பது மொத்தச் செலவை, உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கையால் வகுத்தால் கிடைப்பதாகும்.

(iii) **(எ.கா.)** TC = 1600

Q = 4 எனில்

ATC = 400 ஆகும்

அதாவது ATC = TC/Q = 1600/4 = 400

ATC = 400

**இறுதிநிலைச் செலவு (MC) :**

(i) இறுதிநிலைச் செலவு என்பது மொத்த செலவில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கிறது.

(ii) அதாவது கூடுதலாக ஓர் அலகுப் பண்டத்தை உற்பத்தி செய்வதால் மொத்த செலவில் ஏற்படுகின்ற கூடுதல் இறுதிநிலைச் செலவு எனப்படுகிறது.

(iii) இறுதிநிலைச் செலவு கீழ்கண்ட முறைகளில் அளவிடப்படுகிறது.

MC = ΔTC/ΔQ

இதில் MC = இறுதிநிலைச் செலவு

ΔTC = மொத்த செலவில் ஏற்பட்ட மாற்றம்

ΔQ = மொத்த உற்பத்தியில் உள்ள மாற்றம்

(iv) **எ.கா.** ஒரு நிறுவனம் 4 பண்டத்தை உற்பத்தி செய்ய ஆகும் மொத்தச் செலவு ₹ 1600. பிறகு அந்நிறுவனம் கூடுதலாக ஒரு பண்டம் (4+1=5) உற்பத்தி செய்ய ஆகும் மொத்தச் செலவு ₹ 1900 எனில் இறுதிநிலைச் செலவு ₹ 300 அதாவது MC = ₹ 1900 – ₹ 1600 = ₹ 300.

**33. இறுதிநிலை வருவாய் - குறிப்பு வரைக.** *[Aug-'22]*

விடை. (i) இறுதிநிலை வருவாய் என்பது, கூடுதலாக ஓர் அலகு பண்டத்தை விற்பனை செய்வதால் மொத்த வருவாயில் ஏற்படும் கூடுதல் இறுதிநிலை வருவாய் எனப்படும்.

(ii) மொத்த வருவாயில் ஏற்படும் மாற்றத்தை மொத்த பண்டங்களின் அளவில் ஏற்படும் மாற்றத்தால் வகுத்தால் இறுதிநிலை வருவாய் கிடைக்கும்.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**(iii)** $MR_n = TR_n - TR_{n-1}$ அல்லது

$MR = TR_{n+1} - TR_n = \Delta TR_n$

இதில்

$TR_n$ = 'n' அலகிற்கான மொத்த வருவாய்

$TR_{n-1}$ = n-1அலகிற்கான மொத்த வருவாய்

$TR_{n+1}$ = n+1 அலகிற்கான மொத்த வருவாய்

விலை மாறாத போது TR=P*Q, MR = ΔTR/ΔQ= P, எனவே AR –க்குச் சமமாக இருக்கும்.


**34. நீண்ட கால செலவு வளைகோட்டை தக்க வரைபடத்துடன் விளக்குக.** *[BEQ]*

**விடை. நீண்டகாலச் செலவுக் கோடுகள் :**

**(i)** நீண்டகாலத்தில் அனைத்து உற்பத்திக் காரணிகளும் மாறக் கூடியவை.

**(ii)** நீண்டகாலத்தில் மாறாக்காரணி மற்றும் மாறாச் செலவுகள் இருக்க வாய்ப்பு இல்லை.

**(iii)** நீண்ட கால சராசரி செலவுக் கோடுகள் (LAC) என்பது நீண்டகால மொத்தச் செலவை மொத்த உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளால் வகுக்கப்படுவதால் பெறப்படும் செலவாகும்.




**(iv)** LAC = LTC/Q

LAC = நீண்டகால சராசரி செலவு

LTC = நீண்டகால மொத்தச் செலவு

Q = உற்பத்தி அளவு

**(v)** நீண்டகால சராசரி செலவு வளைகோடானது பல குறுகிய கால சராசரி செலவு வளை கோடுகளிலிருந்து பெறப்பட்டதாகும்.

**(vi)** குறுகியகால சராசரி செலவு வளைகோடுகளின் மிகத் தாழ்வான புள்ளிகளை ஒருங்கிணைத்து, நீண்ட கால சராசரி செலவு வளைகோடானது அமைந்துள்ளது.

**(vii)** நீண்டகால, சராசரி செலவு வளைகோடானது 'திட்ட வளைகோடு' அல்லது 'உறைவடிவ வளைகோடு' என்றும் அழைக்கப்படுகிறது.

## பகுதி – ஈ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.**

**35. மொத்தச் செலவு = 10 + $Q^3$, Q = 5 எனில் AC, AVC, TFC, AFC ஆகியவற்றைக் கண்டுபிடி.**

*[BEQ] [Govt. MQP-2018; HY-2018; CRT-'22]*

**விடை. (i)** TC = TFC + TVC

TC = மொத்தச் செலவு, TFC = மொத்த மாறாச் செலவு, TVC = மொத்த மாறும் செலவு

$AVC = \frac{TVC}{Q}$   $AFC = \frac{TFC}{Q}$   $AC = \frac{TC}{Q}$

AVC = சராசரி மாறும் செலவு

Q = உற்பத்தி

AFC = சராசரி மாறாச் செலவு

AC = சராசரி செலவு

மொத்த செலவு = 10 + $Q^3$, Q = 5 எனில்

மொத்தச் செலவு = 10 + $(5)^3$

= 10 + 125

∴ மொத்தச் செலவு = 135

**(ii)** மொத்தச் செலவில் இரண்டு செலவுகள் உள்ளடங்கியுள்ளது. அவை,

**(iii)** மொத்த மாறும் செலவு மற்றும் மொத்த மாறாச் செலவு ஆகும்.

**(iv)** மொத்த மாறாச் செலவு உற்பத்தி அதிகரித்தாலும் குறைந்தாலும், பூஜ்ஜியமாக இருந்தாலும் மாறாது. எனவே,

TC = 10 + $Q^3$

**(v)** இங்கு மொத்த மாறாச் செலவு **10** ஆகும்.

TC = 135, TFC = 10 எனில் TVC = ?

135 = 10 + TVC

135 – 10 = TVC

∴ 125 = TVC   மொத்த மாறும் செலவு

TVC = 125, TC = 135, TFC = ?

TC = (TFC + TVC)

135 = $x$ + 125

$x$ = 135 – 125

∴ TFC = 10

$AVC = \frac{TVC}{Q}$

$AVC = \frac{125}{5} = 25$

∴ AVC = 25   சராசரி மாறும் செலவு

$AFC = \frac{TFC}{Q}$   TFC = 10, Q = 5

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net
www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



$$AFC = \frac{10}{5} = 2$$

$\therefore AFC = 2$ சராசரி மாறாச் செலவு

$$AC = \frac{TC}{Q} \qquad TC = 135, Q = 5$$

$$AC = \frac{135}{5} = 27$$

$\therefore AC = 27$ சராசரி செலவு


$AC = AFC + AVC$

$AC = 2 + 25$

$\therefore AC = 27$ ஆகும்.

**36. குறுகிய காலச் செலவுக் கோடுகளை தகுந்த படத்துடன் விவரி.** *[BEQ;QY-2018, '19;CRT & Aug-'22]*


**விடை. மொத்த மாறாச் செலவு (TFC) :**




(i) மாறாத உற்பத்திக் காரணிகளுக்கு செய்யப்படும் அனைத்துச் செலவுகளின் கூடுதல் மொத்த மாறாச் செலவாகும்.

(ii) உற்பத்தி அதிகரித்தாலும் அல்லது குறைந்தாலும் அல்லது உற்பத்தி பூஜ்ஜியமாக இருந்தாலும் கூட இச்செலவுகள் மாறாமல் நிலையாக இருக்கும்.


**மொத்த மாறும் செலவு (TVC) :**




(i) மாறும் உற்பத்திக் காரணிகளுக்கு செய்யப்படும் அனைத்துச் செலவுகளின் கூடுதல் மாறும் செலவாகும்.

(ii) உற்பத்தி அதிகரித்தால், செலவுகள் அதிகரிக்கும் மாறாக உற்பத்தி குறைந்தால் செலவுகள் குறையும்.

**மொத்தச் செலவு (TC) :**





(i) ஓர் உற்பத்தியில் ஏற்படுகின்ற பல்வேறு செலவுகளின் மொத்த கூடுதல் அந்நிறுவனத்தின் மொத்தச் செலவு எனப்படுகிறது.

(ii) மொத்தச் செலவு என்பது மொத்த மாறாச் செலவையும் TFC மொத்த மாறும் செலவையும் TVC உள்ளடக்கியதாகும்.

(ii) மொத்தச் செலவு = மொத்த மாறாச் செலவு + மொத்த மாறும் செலவு

$$TC = TFC + TVC$$

**சராசரி மாறாச் செலவு (AFC) :**




(i) சராசரி மாறாச் செலவு என்பது உற்பத்தியின் ஒரு அலகிற்கான மாறாச் செலவு என்பதாகும்.

(ii) சராசரி மாறாச் செலவு என்பது, மொத்த மாறாச் செலவு, உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கையால் வகுக்க கிடைக்கும் ஈவுத் தொகையாகும்.

(iii) $$AFC = \frac{TFC}{Q}$$

(iv) இதில் AFC = சராசரி மாறாச் செலவு

TFC = மொத்த மாறாச் செலவு Q = உற்பத்தி அலகுகள்

www.Padasalai.Net
www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

அத்தியாயம் 8

# இந்தியப் பொருளாதாரம் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும்

## பொருளடக்கம்


**8.1** அறிமுகம்

**8.2** ஆங்கிலேயர் காலத்தில் இந்திய பொருளாதாரம்

- **8.2.1** வணிக மூலதனக் காலம்
- **8.2.2** தொழில் மூலதனக் காலம்
- **8.2.3** நிதி மூலதனக் காலம்
- **8.2.4** இந்தியக் கைவினைப் பொருட்கள் நசிவுக் காலம்

**8.3** இந்திய நில உடைமை முறைகள்

- **8.3.1** ஜமீன்தாரி முறை அல்லது நிலச்சுவான்தாரா முறை
- **8.3.2** மஹல்வாரி முறை அல்லது இனவாரி முறை
- **8.3.3** இரயத்துவாரி முறை அல்லது சொந்த சாகுபடி முறை

**8.4** தொழில் மற்றும் காலனித்துவ முதலாளித்துவம்

**8.5** ஆங்கிலேயர் ஆதிக்கத்தால் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள்

**8.6** 1991க்கு முந்தைய முக்கிய தொழிற்கொள்கைகள்

- **8.6.1** 1948ன் தொழிற் கொள்கை தீர்மானம்
- **8.6.2** 1956ன் தொழிற் கொள்கை தீர்மானம்

**8.7** பசுமைப் புரட்சி

**8.8** பெரிய அளவிலான தொழிற்சாலைகள்

**8.9** சிறிய அளவிலான தொழிற்சாலைகள்

**8.10** குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்

**8.11** பொதுத்துறை மற்றும் தனியார் துறை வங்கிகள்

**8.12** வங்கிகள் தேசியமயமாக்கப்படல்

**8.13** இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள்

**8.14** மேம்பாட்டுக் குறியீடு

- **8.14.1** மனித மேம்பாட்டுக் குறியீடு
- **8.14.2** செயல்திறன் குறியீட்டெண்

**8.15** தொகுப்புரை




orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



# கருத்து வரைபடம்

## 8. இந்தியப் பொருளாதாரம் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும்

- **ஆங்கிலேயர் காலத்தில் இந்தியப் பொருளாதாரம்**
  - வணிக மூலதனக் காலம்
  - தொழில் மூலதனக் காலம்
  - நிதி மூலதனக் காலம்
  - இந்தியக் கைவினைப் பொருட்கள் நசிவுக் காலம்
- **இந்திய நில உடைமை முறைகள்**
  - ஜமீன்தாரி முறை (அல்லது) நிலச்சுவான்தாரா முறை
  - மஹல்வாரி முறை
  - இரயத்துவாரி முறை (அ) சொந்த சாகுபடி முறை
- **1991க்கு முந்தைய முக்கிய தொழிற் கொள்கைகள்**
  - 1948ன் தொழிற் கொள்கை தீர்மானம்
  - 1956 தொழிற் கொள்கை தீர்மானம்
- **பசுமைப் புரட்சி**
  - சாதனைகள்
  - பலவீனங்கள்
- **தொழிற்சாலைகள்**
  - பெரிய அளவிலான தொழிற்சாலைகள்
  - சிறிய அளவிலான தொழிற்சாலைகள்
  - குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்
- **மேம்பாட்டுக் குறியீடு**
  - மனித மேம்பாட்டு குறியீடு (HDI)
  - வாழ்க்கைத் தரக் குறியீட்டெண் (PQLI)

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



# முக்கியக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **ஜமீன்தாரி முறை** | : | நிலவருவாயை அரசுக்கு செலுத்தக்கூடிய நில உரிமையாளர். |
| **மஹல்வாரி முறை** | : | நில வருவாயை நிர்வகிக்ககூடிய கிராம மக்களாலான குழு. |
| **இரயத்துவாரி முறை** | : | நிலத்தை பயன்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்தும் உரிமைகளை நிலத்தை உழுபவரே பெற்றிருத்தல். |
| **பசுமைப்புரட்சி முறை** | : | விவசாய முறைகளை நவீன தொழில்நுட்ப முறையில் புதுப்பித்தல். |
| **பொதுத்துறை வங்கி** | : | பெருவாரியான பங்குகளை அரசாங்கமே வைத்திருக்கக்கூடிய வங்கி. |
| **தனியார்துறை வங்கி** | : | பெருவாரியான பங்குகள் தனியார் கழகங்கள் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் வசம் இருப்பது. |
| **தேசியமயமாதல்** | : | தனியார் சொத்துக்கள் மற்றும் உரிமைகளை அரசாங்கத்தின் உரிமைக்கு மாற்றுதல். |
| **மனித மேம்பாட்டுக் குறியீட்டெண்** | : | மனித மேம்பாட்டை தரமிடக் காரணமாகவுள்ள வாழ்வியல் எதிர்பார்ப்பு, கல்வி தனிநபர் வருமானம் போன்ற புள்ளியியல் விவரங்களின் மூலம் கணக்கிடப்படும் குறியீட்டெண். |
| **வாழ்க்கை தர குறியீட்டெண்** | : | வாழ்க்கையின் தரத்தினை (ஒரு நாட்டின் நல்ல நிலைமையை) அளவிட உதவும் ஓர் அளவுகோல். |
| **பெரிய அளவிலான தொழிற்சாலைகள்** | : | பெரிய அளவிலான தொழிற்சாலை என்பது பெரிய உள் கட்டமைப்பு அதிக மனிதசக்தி, அதிக மூலதன சொத்துக்களை உள்ளடக்குவதாகும். |
| **சணல் தொழில்** | : | இந்தியா போன்ற நாட்டிற்கு சணல் தொழில் மிக முக்கியமானதாகும். காரணம் இத்தொழில் மூலம் வெளிநாட்டு செலவாணி ஈட்டப்படுகிறது. |
| **பருத்தியும் நெசவுத்தொழிலும்** | : | இந்தியாவில் நெசவுத்தொழில் மிகப் பழையானதாகும். அதிக தொழிலாளர்களையும் கொண்ட துறையாகும். |
| **சர்க்கரை தொழில்** | : | இந்தியாவில் வேளாண் சார்புத் தொழில்களின் பருத்தி தொழிலுக்கு அடுத்தபடியாக சர்க்கரைத் தொழில் உள்ளது. |
| **உரத்தொழில்** | : | இந்தியாவில் நைட்ரஜனை பயன்படுத்தி தயாரிக்கும் தொழில் உரத்தொழில் ஆகும். |
| **பட்டுத்தொழில்** | : | இயற்கையான பட்டுத் தயாரிக்கும் தொழிலுக்கு பட்டுத்தொழில் என்று பெயர். |
| **சிறிய அளவிலான தொழிற்சாலைகள்** | : | இந்தியா பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. |
| **குறு உற்பத்தி நிறுவனங்கள்** | : | தொழிற்சாலை மற்றும் உபகரணங்களுக்கான முதலீடு ரூபாய் 25 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். |
| **சிறு உற்பத்தி நிறுவனங்கள்** | : | தொழிற்சாலை மற்றும் உபகரணங்களுக்கான முதலீடு ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கு அதிகமாகவும் ஐந்து கோடிக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| **நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள்** | : | தொழிற்சாலை மற்றும் உபகரணங்களுக்கான முதலீடு ரூபாய் ஐந்து கோடிக்கு அதிகமாகவும் ரூபாய் பத்து கோடிக்கும் மிகாமலும் இருக்க வேண்டும். |
| **தேசியமாக்கப்பட்ட வங்கிகள்** | : | தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் நிறுவனச் செயல்பாடுகளை அரசாங்கம் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துகிறது. |
| **இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள்** | : | பொருளாதார திட்டமிடலின் நோக்கம் வரையறுக்கப்பட்ட அளவிலான வளங்களைத் திறம்படப் பயன்படுத்தி விரும்பிய இலக்குகளை அடைதலாகும். |
| **நிதி ஆயோக்** | : | திட்டக்குழு என்பதற்கு மாற்றாக நிதி ஆயோக் என்னும் அமைப்பு 2015 ஆம் ஆண்டு ஜனவரி 1ம்தேதி ஏற்படுத்தப்பட்டது. |

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



# இலக்கணம்

| | | |
|---|---|---|
| **சுதந்திரத்தின் இலக்கணம்** | : | சுதந்திரம் எந்த விலைக்கும் ஈடாகாது சுதந்திரம் வாழ்வின் சுவாசம். |
| **சிறிய அளவிலான தொழிற்சாலைகள்** | : | இந்திய சிறு தொழில் நிறுவனம் என்பது, நிலையான முதலீட்டுடன், இயந்திர தளவாடங்களுடன் உரிமை அல்லது குத்தகை, தவணை முறையில் 1 கோடிக்கு மிகாமல் தொடங்கப்படும் தொழில் சிறு தொழிலாகும். |
| **இந்தியப் பொருளாதாரம்** | : | உலக அளவில், இந்தியா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பத்தாவது இடத்தில் உள்ளது. உலக அளவில் நுகர்வோரின் வாங்கும் சக்தியில் மூன்றாவது இடத்தில் உள்ளது. |
| **"நிதி ஆயோக்" வரையறு** | : | நிதி ஆயோக் என்பது இந்திய அரசின் திட்டங்களையும், கொள்கைகளையும் கண்காணிக்கும் அறிவு மையமாகும். |
| **மஹல்வாரி முறை** | : | மஹல்வாரி முறை என்பது, சுதந்திரத்திற்கு முன் உள்ள மூன்று விதமான நில உடைமை முறைகளில் ஒன்றாகும். மஹல்வாரி என்னும் வார்த்தை ஹிந்தி 'மஹால்' என்ற வார்த்தையில் இருந்து பெறப்பட்டது. இதன் பொருள் வீடு, விரிவாக்கம், ஓர் மாவட்டம் என்பதாகும். |
| **நில உடைமை முறை** | : | நில உடைமை முறை என்பது நிலங்களுக்கான உரிமை மற்றும் நிர்வகித்தல் பற்றியதாகும். |
| **மனித மேம்பாட்டுக் குறியீடு** | : | 1990 முதல் ஐக்கிய நாடுகள் முன்னேற்றக் கூட்டமைப்பு ஒவ்வொரு ஆண்டும் மனித மேம்பாட்டு அறிக்கையைப் பிரசுரம் செய்கிறது. இக்குறியீடு கீழ்க்கண்ட மூன்று குறியீடுகளை அடிப்படையாக கொண்டது. இக்குறியீடு நாடு, மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் தற்போது தயாரிக்கப்படுகிறது. |

# புத்தக வினாக்கள்

www.Padasalai.Net www.Surabooks.com

## மாதிரி வினாக்கள்

### பகுதி - அ

**சரியான (அல்லது) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. இந்தியாவின் கள்ளிக்கோட்டைக்கு (CALICUT) வாஸ்கோடாகாமா வருகை புரிந்த வருடம்** *[Aug-'22]*
(அ) 1498 (ஆ) 1948 (இ) 1489 (ஈ) 1849
**[விடை. (அ) 1498]**

**2. 1614- இல் தாமஸ் ரோ யாரிடம் அனுமதி பெறுவதில் வெற்றி பெற்றார்?**
(அ) அக்பர் (ஆ) ஷாஜகான்
(இ) ஜஹாங்கீர் (ஈ) நூர்ஜஹான்
**[விடை. (இ) ஜஹாங்கீர்]**

**3. இந்தியாவை ஆளும் உரிமை கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து ஆங்கிலேய அரசுக்கு மாற்றப்பட்ட ஆண்டு**
(அ) 1885 (ஆ) 1858 (இ) 1868 (ஈ) 1878
**[விடை. (ஆ) 1858]**

**4. இரயத்வாரி முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம்** *[BEQ; May-'22]*
(அ) கேரளா (ஆ) வங்காளம்
(இ) தமிழ்நாடு (ஈ) மகாராஸ்டிரா
**[விடை. (இ) தமிழ்நாடு]**

**5. முதலாம் உலகப்போர் தொடங்கப்பட்ட ஆண்டு** *[BEQ; HY-2018;HY-'19]*
(அ) 1914 (ஆ) 1814 (இ) 1941 (ஈ) 1841
**[விடை. (அ) 1914]**

**6. இந்திய அரசாங்கம் தனது முதல் தொழிற்கொள்கையை வெளியிட்ட ஆண்டு**
(அ) 1456 (ஆ) 1991 (இ) 1948 (ஈ) 2000
**[விடை. (இ) 1948]**

**7. 1956ன் தொழிற்கொள்கையின் நோக்கம்** *[BEQ;Govt. MQP-2018]*
(அ) பெரிய நிறுவனங்களை முன்னேற்றுவது
(ஆ) வேளாண்துறையை மட்டும் முன்னேற்றுவது
(இ) தனியார் துறையை மட்டும் முன்னேற்றுவது
(ஈ) குடிசைத் தொழில்களை மட்டும் முன்னேற்றுவது
**[விடை. (அ) பெரிய நிறுவனங்களை முன்னேற்றுவது]**

**8. 1993ல் முன் பதிவு நீக்கப்பட்ட தொழில்துறை**
(அ) இரயில்வே துறை
(ஆ) செம்பு மற்றும் சிங்க் சுரங்கத் தொழில்
(இ) அணு ஆற்றல்
(ஈ) அணு கனிமங்கள்
**[விடை. (ஆ) செம்பு மற்றும் சிங்க் சுரங்கத் தொழில்]**

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**9. இந்தியாவின் பசுமைப்புரட்சியின் தந்தை என்றழைக்கப்படுபவர்**

(அ) M.S. சுவாமிநாதன் (ஆ) காந்தி
(இ) விஸ்வேஸ்வரையா (ஈ) N.R. விஸ்வநாதன்

**[விடை. (அ) M.S. சுவாமிநாதன்]**

**10. 1969-ல் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை** *[Sep-2020]*

(அ) 10 (ஆ) 12 (இ) 14 (ஈ) 16

**[விடை. (இ) 14]**

**11. வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதன் முக்கிய நோக்கம்** *[BEQ; Aug-'22]*

(அ) தனியார் சமூக நலம் (ஆ) சமூக நலம்
(இ) வருவாய் ஈட்ட (ஈ) தொழில் முற்றுரிமை

**[விடை. (ஆ) சமூக நலம்]**

**12. திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு**

(அ) 1950 (ஆ) 1955 (இ) 1960 (ஈ) 1952

**[விடை. (அ) 1950]**

**13. முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மையான நோக்கம்**

(அ) சேவை (ஆ) தொழில்
(இ) வேளாண்மை (ஈ) வங்கி

**[விடை. (இ) வேளாண்மை]**

**14. பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலம்** *[BEQ]*

(அ) 1992–1997 (ஆ) 2002–2007
(இ) 2007–2012 (ஈ) 1997–2002

**[விடை. (ஆ) 2002-2007]**

**15. 2016-ஆம் ஆண்டுக்காக்கான மனித வளர்ச்சி அறிக்கையின் படி188 நாடுகளில் இந்தியாவின் தரம்**

(அ) 130 (ஆ) 131 (இ) 135 (ஈ) 145

**[விடை. (ஆ) 131]**

**16. வருடாந்திரத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட ஆண்டு** *[May-'22]*

(அ) 1989–1991 (ஆ) 1990–1992
(இ) 2000–2001 (ஈ) 1981–1983

**[விடை. (ஆ) 1990-1992]**

**17. இந்தியாவின் மிகப்பழமையான பெரிய அளவிலான தொழில்** *[BEQ; Mar-'19; Sep-2021]*

(அ) பருத்தி (ஆ) சணல் (இ) இரும்பு (ஈ) சிமெண்ட்

**[விடை. (அ) பருத்தி]**

**18. மனித மேம்பாட்டுக் குறியீட்டெண்ணை உருவாக்கியவர்**

(அ) ஜவகர்லால் நேரு (ஆ) M.K. காந்தி
(இ) அமர்த்தியா குமார் சென் (ஈ) தாகூர்

**[விடை. (இ) அமர்த்தியா குமார் சென்]**

**19. பனிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம்**

(அ) விரைவான மற்றும் அதிகமான ஒருங்கிணைந்த வளர்ச்சி
(ஆ) சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சி
(இ) சோசலிச முறையிலான சமூகம்
(ஈ) விரைவான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சி

**[விடை. (ஈ) விரைவான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சி]**

**20. வாழ்க்கைதரக் குறியீட்டெண்ணை உருவாக்கியவர்** *[BEQ; Sep-2021]*

(அ) திட்டக்குழு (ஆ) நேரு
(இ) D. மோரிஸ் (ஈ) பிஸ்வாஜித்

**[விடை. (இ) D. மோரிஸ்]**

## பகுதி – ஆ

### பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி.

**21. இந்தியாவின் காலனித்துவ சுரண்டலின் நிலைகள் யாவை?**

**விடை.** காலனி ஆதிக்க சிதைப்பின் அடிப்படையில் முழு காலத்தையும் வரலாற்றுப் பொருளியல் வல்லுநர்கள் மூன்று கட்டங்களாகப் பிரித்தனர். அவை, வணிக மூலதனக் காலம், தொழில் மூலதனக் காலம், நிதி மூலதனக் காலம்.

**22. சுதந்திரம் அடைவதற்கு முன் இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வகையான நில உடைமை முறைகள் யாவை?** *[BEQ;Govt. MQP-2018]*

**விடை.** சுதந்திரம் அடைவதற்கு முன் இந்தியாவில் காணப்பட்ட மூன்று வகையான நில உடைமை முறைகளாவன :

(1) ஜமீன்தாரி முறை (அ) நிலச்சுவான்தாரா முறை
(2) மஹல்வாரி முறை (அ) இனவாரி முறை
(3) இரயத்துவாரி முறை (அ) சொந்த சாகுபடி முறை

**23. மற்ற முறைகளிலிருந்து நில உடைமை முறையை வேறுபடுத்துவதற்கான அம்சங்களைக் கூறு.**

**விடை.** (i) நிலம் யாருக்கு சொந்தமானது?
(ii) நிலத்தில் யார் அறுவடை செய்வது?
(iii) நில வருவாயை அரசுக்கு செலுத்துவதற்குப் பொறுப்பானவர் யார்?

**24. பசுமைப்புரட்சியின் பலவீனங்களைப் பட்டியலிடுக.**

**விடை. பசுமைப்புரட்சியின் பலவீனங்களாவன :** *[BEQ;HY-2018 & '19; Sep-2020]*

(i) பருவ மழையை நம்பியிருப்பது.
(ii) விதைகள், பூச்சிக்கொல்லிகள், தண்ணீர் போன்ற உள்ளீடுகளுக்காக பேரளவு மூலதனம் தேவைப்படுவது.
(iii) பெரு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கிடையே வருமான இடைவெளி அதிகரித்திருப்பது.
(iv) பண்ணைகள் இயந்திரமயமாக்கப்படுதல் ஆகிய இவை அனைத்தும் பசுமைப்புரட்சியின் பலவீனங்களாகும்.

**25. பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள் யாவை?** *[Aug-'22]*

**விடை.** (i) இத்திட்டம் அடுத்த பத்தாண்டுகளில் தலா வருவாயை இரு மடங்காக உயர்த்த இலக்கு நிர்ணயித்தது.
(ii) 2012 ஆம் ஆண்டில் வறுமை விகிதத்தை 15% ஆக குறைக்கும் குறிக்கோள்களை கொண்டிருந்தது.
(iii) இத்திட்டத்தின் வளர்ச்சி இலக்கு 8.0% ஆனால் 7.2% மட்டுமே எட்டப்பட்டது.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

அத்தியாயம் 9

# இந்தியாவின் மேம்பாடு அனுபவங்கள்

## பொருளடக்கம்


**9.1** அறிமுகம்

**9.2** தாராளமயம், தனியார்மயம் மற்றும் உலகமயமாதல் என்பதன் பொருள் (LPG)

**9.3** LPG க்கு ஆதரவான கருத்துகள்

**9.4** LPG க்கு எதிரான கருத்துகள்

**9.5** இந்திய பொருளாதாரத்தின் நிலைமை

**9.6** தொழில் துறைச் சீர்திருத்தங்கள்

**9.7** வேளாண் துறையில் சீர்திருத்தங்களின் தாக்கம்

**9.7.1** பயிர் காப்பீடு

**9.7.2** குளிர்பதன சேமிப்புக் கிடங்கு

**9.7.3** அறுவடைக்குப் பின் எடுக்கப்படும் நடவடிக்கைகள்

**9.7.4** விவசாய பொருட்களுக்கான அங்காடி குழு

**9.7.5** சீர்திருத்தங்களுக்குப் பிந்தைய விவசாய நெருக்கடிகள்

**9.8** வர்த்தகக் கொள்கைச் சீர்திருத்தங்கள்

**9.8.1** ஏற்றுமதி – இறக்குமதிக் கொள்கை

**9.8.2** சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்

**9.9** நிதி சீர்திருத்தங்கள்

**9.9.1** பண்டங்கள் மற்றும் பணிகள் வரி

**9.10** பணம் மற்றும் நிதித்துறைச் சீர்திருத்தங்கள்


**9.11** தொகுப்புரை




orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores






www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



# முக்கியக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **தனியார் மயமாதல்** | : | பொதுத்துறையின் நிர்வாகம் மற்றும் உரிமையை தனியார்துறைக்கு மாற்றுவதாகும். |
| **உலக மயமாதல்** | : | உள்நாட்டு பொருளாதாரத்தையும், ஏனைய உலக பொருளாதாரத்தையும் இணைப்பதாகும். |
| **முதலீட்டு விலக்கல்** | : | பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை பிற தனியார் நிறுவனங்கள் அல்லது வங்கிகளுக்கு விற்பதாகும். |
| **உழவர் கடன் அட்டைத்திட்டம்** [KCC] | : | உழவர் கடன் அட்டை, கிஷான் கிரெடிட் கார்ட் (KCC) என்பது கடன் தேவைப்படுகின்ற ஒரு விவசாயியின் தகுதிக்கேற்ப கடன் மிக எளிதாக மற்றும் சரியான நேரத்தில் வழங்குவதற்கான ஒரு ஏற்பாடாகும். |
| **விவசாயப் பொருட்களுக்கான அங்காடி குழு** (APMC) | : | விவசாயப் பொருட்களுக்கான அங்காடிக் குழு என்பது வேளாண்மை அல்லது தோட்டக்கலை அல்லது கால்நடைப் பொருட்களை வர்த்தகம் செய்வதற்கு மாநில அரசால் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வமான அமைப்பாகும். |
| **குளிர்பதன சேமிப்பு கிடங்கு** | : | அறுவடைக்குப் பின்னால் ஏற்படும் இழப்பினைத் தடுக்கவும், நுகர்வோரை அடையும் நேரத்தில் பண்டத்தின் தரம் குறையாமல் இருக்கவும், விரைவில் அழுகாமல் இருக்கவும், சந்தைகளில் தேக்கம் மற்றும் விலையில் ஏற்றத்தாழ்வு ஏற்படாமலிருக்கவும் இந்திய அரசு மற்றும் வேளாண் அமைச்சகம் 1955ல் "குளிர்பதன கிடங்கு ஆணை 1964" ஐ உருவாக்கியது. |
| **சிறப்பு பொருளாதார மண்டலங்கள்** | : | அனுமதி வழங்குவதில் உள்ள கட்டுப்பாடுகள், வசதியின்மை, குறைவான நிதி போன்ற குறைபாடுகளைச் சமாளிக்கவும், நேரடி முதலீட்டை ஈர்க்கவும் சிறப்பு பொருளாதார மண்டலக் கொள்கை உருவாக்கப்பட்டது. |
| **ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை** | : | ஏற்றுமதி சூழலை மேம்படுத்தவும், உற்பத்தி அதிகரிக்கவும் "இந்தியாவில் தயாரிப்பு" மற்றும் "மின்னணு இந்தியா" போன்ற திட்டங்களுக்காவும் உருவாக்கப்பட்டதே ஏற்றுமதி இறக்குமதி கொள்கையாகும். |
| **சுங்க கட்டண அமைப்பு மற்றும் அளவுக்கட்டுப்பாடுகளை நீக்குதல்** | : | சுங்க வரியை படிப்படியாக குறைப்பதற்கான முயற்சி மேற்கொள்ள அமைக்கப்பட்ட அமைப்பே சுங்ககட்டமைப்பு ஆகும். |
| **பயிர் காப்பீடு** | : | ஒரே சீரான சந்தாத்தொகை கட்ட உருவாக்கப்பட்டதே பயிர் காப்பீடாகும். |
| **பண்டங்கள் மற்றும் பணிகளின் வரி** (GST) | : | நுகர்வோர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படும் வரியாகும். |
| **பணம் மற்றும் நிதிக் துறைச் சீர்திருத்தங்கள்** | : | இச்சீர்திருத்தங்கள், வங்கியமைப்பை மிகுந்த திறனுடையதாய் மாற்ற, வட்டி வீதங்களின் வேறுபாடுகளை களைய ஏற்படுத்தப்பட்டது. |
| SLR **சட்டப்பூர்வ இருப்பு வீதம்** | : | வாடிக்கையாளருக்கு கடன் வழங்குவதற்கு முன் வணிக வங்கிகள் ரொக்கமாக/தங்கமாக அரசு பத்திரங்களாக வைத்திருக்க வேண்டிய இருப்பாகும். |
| **தாராளமயமாதல்** | : | சமூக மற்றும் அரசியல் கொள்கைகளின் அரசின் கட்டுப்பாடுகளைத் தகர்த்தல். |
| **தொழில்உரிமம் விலக்கு** | : | அரசின் கட்டுப்பாடுகள் மற்றும் உரிமம் பெறுதலை நீக்குதல். |
| **வெளிநாட்டு நேரடி முதலீடு** | : | வெளிநாட்டார்கள் செய்யும் முதலீடு. |
| **வெளிநாட்டு தனியார் முதலீடு** | : | வெளிநாட்டுத் தொகுப்பு முதலீடு. |

www.Padasalai.Net
www.surabooks.com

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



# இலக்கணம்

| | | |
|---|---|---|
| **சுங்க கட்டணம் அமைப்பு** | : | செல்லையா குழு அறிக்கையானது, இறக்குமதிக்கான தீர்வைகளை பெருமளவு குறைக்கப் பரிந்துரை செய்துள்ளது. |
| **ரொக்க இருப்பு வீதம்** | : | 1991 ஆம் ஆண்டு நரசிம்மம் குழு பரிந்துரைப்படி, சட்ட ரீதியான நீர்மை விகிதம் மற்றும் ரொக்க இருப்பு வீதம் குறைக்கப்பட்டது. |
| **வராக்கடன்** | : | நரசிம்மம் குழு அறிக்கையின் படி வராக்கடன் மற்றும் சொத்து மதிப்பினைக் கணக்கிட புதிய விதிமுறைகள் வகுக்கப்பட்டன. |
| **ஏற்றுமதி – இறக்குமதிக் கொள்கை** | : | இந்திய அரசின் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று 2015 – 2020 வரையிலான காலத்திற்கான புதிய அயல்நாட்டு வாணிபக் கொள்கையை அறிவித்தது. |
| **"குளிர்பதனக் கிடங்கு ஆணை 1964"** | : | இந்திய அரசு மற்றும் வேளாண் அமைச்சகம் 1955 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் மூன்றாவது பிரிவின் படி ஏற்படுத்தப்பட்டது. |
| **புதிய தொழிற்கொள்கை** | : | புதிய தொழிற்கொள்கையின் கட்டுப்பாடுகளை தளர்த்த, ஜூலை 24, 1991ல் பாரத பிரதமர் அறிவித்தார். |
| **பயிர் காப்பீடு** | : | 18 பிப்ரவரி 2016ல் பிரதம மந்திரியால் பயிர் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. |

# புத்தக வினாக்கள்

## மாதிரி வினாக்கள்

## பகுதி - அ

**சரியான (அல்லது) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. கீழ்க்கண்டவற்றுள் எது தனியார் மயமாதலைக் குறிக்கும்.**
(அ) முதலீட்டை திரும்பப் பெறுதல்
(ஆ) தேசியமயம் நீக்கல்
(இ) தொடர் நிறுவனமாக்கல்
(ஈ) இவை அனைத்தும்.
[விடை. (ஈ) இவை அனைத்தும்.]

**2. இன்றைய நாட்களில் வளர்ச்சிக்காக ஒவ்வொரு நாடும் _______ இருக்க வேண்டும்.**
(அ) சார்ந்து
(ஆ) ஒன்றையொன்று சார்ந்து
(இ) தடையில்லா வாணிபம்
(ஈ) முதலாளித்துவ அமைப்பு
[விடை. (ஆ) ஒன்றையொன்று சார்ந்து]

**3. LPG க்கு எதிரான வாதம் _______.** *[BEQ] [Mar-2020]*
(அ) பொருளாதார வளர்ச்சி
(ஆ) அதிக முதலீடு
(இ) மக்கள் மற்றும் மண்டலங்களிடையே ஏற்றத்தாழ்வு
(ஈ) நவீன மயமாக்கல்
[விடை. (இ) மக்கள் மற்றும் மண்டலங்களிடையே ஏற்றத்தாழ்வு]

**4. FDI என்பதன் விரிவாக்கம்** *[Sep-2021]*
(அ) வெளிநாட்டு தனியார் முதலீடு
(ஆ) வெளிநாட்டு தொகுப்பு முதலீடு
(இ) வெளிநாட்டு நேரடி முதலீடு
(ஈ) வெளிநாட்டு செலாவணி தனியார் முதலீடு
[விடை. (இ) வெளிநாட்டு நேரடி முதலீடு]

**5. உலக அளவில் இந்தியா _______ உற்பத்தியில் மிகப் பெரிய உற்பத்தியாளராக விளங்குகின்றது.** *[Mar-'19]*
(அ) பழங்கள் (ஆ) மதுப்பொருட்கள்
(இ) காப்பி (ஈ) தேயிலை
[விடை. (அ) பழங்கள்]

**6. வெளிநாட்டு முதலீடு _______ உள்ளடக்கியது.**
(அ) FDI மட்டும் (ஆ) FPI மற்றும் FFI
(இ) FDI மற்றும் FPI (ஈ) FDI மற்றும் FFI
[விடை. (இ) FDI மற்றும் FPI]

**7. சிறப்பு பொருளாதார மண்டலக் கொள்கை _______ வெளியிடப்பட்டது.** *[May-'22]*
(அ) ஏப்ரல் 2000ல் (ஆ) ஜூலை 2000ல்
(இ) ஏப்ரல் 2001ல் (ஈ) ஜூலை 2001ல்
[விடை. (அ) ஏப்ரல் 2000ல்]

**8. விவசாய உற்பத்தி அங்காடிக் குழு _______ ஆகும்.** *[Aug-'22]*
(அ) ஆலோசனைக் குழு (ஆ) சட்டபூர்வமான குழு
(இ) (அ) மற்றும் (ஆ) (ஈ) எதுவுமில்லை
[விடை. (ஆ) சட்டபூர்வமான குழு]

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**9. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது** *[May-'22]*
(அ) ஒரு முனை வரி
(ஆ) அடுக்கடுக்கு விளைவுகளைக் கொண்டது
(இ) மதிப்பு கூட்டப்பட்ட வரி போன்றது
(ஈ) ஒரு முனை வரி மற்றும் அடுக்கு விளைவுகளற்றது.
**[விடை. (ஈ) ஒரு முனை வரி மற்றும் அடுக்கு விளைவுகளற்றது.]**

**10. புதிய வெளிநாட்டு வர்த்தக கொள்கை _______ ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.** *[Aug-'22]*
(அ) 2000 (ஆ) 2002 (இ) 2010 (ஈ) 2015
**[விடை. (ஈ) 2015]**

**11. நிதித்துறை சீர்திருத்தங்கள் முக்கியமாக _______ துறைக்கானது.** *[BEQ]*
(அ) காப்பீட்டுத் துறை (ஆ) வங்கித்துறை
(இ) (அ) மற்றும் (ஆ) (ஈ) போக்குவரத்துத் துறை
**[விடை. (இ) (அ) மற்றும் (ஆ)]**

**12. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி சட்டம் _______ அமல்படுத்தப்பட்டது.** *[HY - '19]*
(அ) 2017 ஜூலை 1ந்தேதி (ஆ) 2016 ஜூலை 1ந்தேதி
(இ) 2017 ஜனவரி 1ந்தேதி (ஈ) 2016 ஜனவரி 1ந்தேதி
**[விடை. (அ) 2017 ஜூலை 1ந்தேதி]**

**13. புதிய பொருளாதாரக் கொள்கை கீழ்கண்டவற்றுள் எதனை உள்ளடக்கியது ?**
(அ) வெளிநாட்டு முதலீடு
(ஆ) வெளிநாட்டு தொழில்நுட்பம்
(இ) வெளிநாட்டு வர்த்தகம் (ஈ) இவை அனைத்தும்.
**[விடை. (ஈ) இவை அனைத்தும்.]**

**14. _______ ம் ஆண்டு நிதி தொடர்பான நரசிம்மம் குழுவின் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.**
(அ) 1990 (ஆ) 1991 (இ) 1995 (ஈ) 2000
**[விடை. (ஆ) 1991]**

**15. உழவர் கடன் அட்டையைப் பயன்படுத்தி விவசாயிகள் எந்த வங்கியில் கடன் பெற முடியும் ?**
(அ) கூட்டுறவு வங்கிகளில்
(ஆ) பிராந்திய கிராமப்புற வங்கிகளில்
(இ) பொதுத்துறை வங்கிகளில்
(ஈ) இவை அனைத்தும்.
**[விடை. (ஈ) இவை அனைத்தும்.]**

**16. வர்த்தக கொள்கை சீர்திருத்தங்கள் தொடர்பாக அமைக்கப்பட்ட ராஜா செல்லையா குழுவின் பரிந்துரைப்படி அதிகபட்ச இறக்குமதி சுங்கத் தீர்வை _______ ஆகும்.**
(அ) 25% (ஆ) 50% (இ) 60% (ஈ) 100%
**[விடை. (ஆ) 50%]**

**17. இந்தியாவில் முதல் சிறப்புப் பொருளாதார மண்டலம் _______ ஏற்படுத்தப்பட்டது.** *[BEQ]*
(அ) மும்பை (ஆ) சென்னை
(இ) காண்ட்லா (ஈ) கொச்சி
**[விடை. (இ) காண்ட்லா]**

**18. ராஜ் கிருஷ்ணாவால் வார்க்கப்பட்ட "இந்து வளர்ச்சி வீதம்" என்பது _______ குறிக்கும்.**
(அ) குறைவான பொருளாதார வளர்ச்சியை
(ஆ) இந்து மக்கள் தொகையின் அதிகமான விகிதத்தை
(இ) நிலையான GDP யை (ஈ) எதுவுமில்லை
**[விடை. (அ) குறைவான பொருளாதார வளர்ச்சியை]**

**19. GST யில் அதிகபட்ச வரிவிதிப்பு _______ ஆகும். [ஜீலை 1, 2017 -நாளின்படி]** *[BEQ] [Govt. MQP-2018]*
(அ) 18% (ஆ) 24% (இ) 28% (ஈ) 32%
**[விடை. (இ) 28%]**

**20. தொழில் உடைமையை பொதுத்துறையிலிருந்து தனியார் துறைக்கு மாற்றுவது _______ எனப்படும்.** *[Sep-2020]*
(அ) உலகமயமாக்கல் (ஆ) தாராளமயமாக்கல்
(இ) தனியார் மயமாக்கல் (ஈ) தேசியமயமாக்கல்
**[விடை. (இ) தனியார் மயமாக்கல்]**

## பகுதி - ஆ

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி.**

**21. இந்தியப் பொருளாதாரத்தில் கட்டமைப்பு சீர்திருத்தத்தை செயல்படுத்த காரணம் என்ன?** *[HY - '19]*

**விடை.** (i) வறுமையும், வேலையின்மையும் நாட்டின் இரண்டு மிகப்பெரிய பிரச்சனைகளாக இருந்தது.
(ii) இதன் காரணமாக மக்களின் வாழ்க்கைத்தரம் பின் தங்கிய நிலையில் இருந்தது.
(iii) தொழிற்சாலை, வணிகம், நிதி மற்றும் வேளாண்மை போன்ற பொருளாதாரத்தில் உள்ள பல தடைகளை மாற்றுவதை முக்கிய நோக்கமாக கொண்டிருந்தன.

**22. LPG கொள்கையை செயல்படுத்த காரணம் என்ன?** *[BEQ]*

**விடை.** (i) இந்தியாவில் பொருளாதார நடவடிக்கை துவங்க கட்டுப்பாடுகள் இருந்தன.
(ii) அரசு உரிமைக்கொள்கைகளை சற்றே தளர்த்துவது அவசியமாக இருந்தது.
(iii) பொருளாதார வள்ரச்சியில் தனியார்துறைக்குப் போதுமான வாய்ப்புகளை வழங்கப்படவில்லை என்று கருதப்பட்டதால் தனியார் மயமாக்கல் அவசியமானது.
(iv) வளர்ச்சி குன்றிய நாடுகளின் உதவியின்றி வளர்ந்த நாடுகள் மேலும் வளர முடியாது. இதற்கு உலகமயமாக்கல் அவசியமானது.

**23. தனியார் மயமாக்கல் என்றால் என்ன?** *[Sep-2021]*

**விடை.** தனியார்மயமாக்கல் என்பது **பொதுத்துறையின் நிர்வாகம்** மற்றும் **உரிமையை தனியாருக்கு மாற்றுவதைக்** குறிக்கும்.

**24. முதலீட்டை திரும்பப் பெறுதல்-(Disinvestment) வரையறு.** *[Mar-'19]*

**விடை.** முதலீட்டு விலக்கல் என்பது பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை பிற தனியார் நிறுவனங்கள் அல்லது வங்கிகளுக்கு விற்பது ஆகும்.

**25. நிதிச் சமநிலையின்மையைக் கட்டுப்படுத்த 1991-92ல் ஏற்படுத்தப்பட்ட கொள்கை முயற்சிகள் மூன்றினைக் கூறுக.** *[BEQ] [HY-2018]*

**விடை.** (i) செலவைக் குறைக்கும் முகத்தான் உர மானியம் மற்றும் சர்க்கரை மானியங்கள் குறைக்கப்பட்டன.
(ii) வருவாயை அதிகப்படுத்த பொதுத்துறைச் சொத்துகள் விற்கப்பட்டன.
(iii) அரசு நலத்திட்டங்களுக்கான நிதியை படிப்படியாக குறைத்தது.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



(vi) இதில் அமையப்பெற்ற நிறுவனங்களுக்கு அதிக அளவு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அரசின் சட்டதிட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் கடைப்பிடிக்கத் தேவையில்லை. இதனால் சமூக மற்றும் சுற்றுப்புறச் சூழல்கள் பாதிக்கப்படுகின்றன.

**37. 2015-2020ம் ஆண்டிற்கான ஏற்றுமதி-இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.** *[BEQ] [Govt. MQP-2018; HY-2018 & '19; May-'22]*

**விடை. ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை (2015 – 2020) :**

ஏற்றுமதி சூழல்களை மேம்படுத்துதல், உற்பத்தி அதிகரிப்பு மற்றும் "இந்தியாவில் தயாரிப்பு" மற்றும் "மின்னனு இந்தியா" போன்ற திட்டங்களுக்கு ஆதரவளித்தலே இக்கொள்கையின் முதன்மையான நோக்கமாகும்.

**சிறப்பியல்புகள் :**

(i) ஏற்றுமதி உதவிகளை 25% அளவு குறைக்கவும் இந்தியப் பொருட்களை ஊக்குவிக்கவும் "இந்தியத் தயாரிப்பு" என்ற கருத்து உருவாக்கப்பட்டது.

(ii) ஏற்றுமதியாளர் / இறக்குமதியாளர் சுயவிவர ஆவணங்களின் அசல் நகல்களை மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

(iii) டிஜிட்டல் இந்தியா முறைப்படி, வரிதாக்கல், முத்திரைத் தாள் கட்டணம் செலுத்துதல் போன்றவற்றிற்கான கைபேசி செயலி மற்றும் பட்டயக் கணக்காளர், கணக்குக் காசாளர் போன்றோரால் மின்னனு முறையில் கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றது.

(iv) பாதுகாப்பு இராணுவக்கிடங்கு விண்வெளி மற்றும் அணுசக்தி போன்றவை தொடர்பான ஏற்றுமதிக் கோரிக்கைகளுக்கு கால அளவு 24 மாதங்களாகும்.

(v) தற்போது உலக வர்த்தகத்தில் 3% ஆக இருக்கின்ற இந்தியாவின் பங்கை 2020 க்குள், ஏற்றுமதி இறக்குமதி கொள்கை இருமடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அரசு தேர்வு வினாக்கள்

## 1 மதிப்பெண்

**(i) கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. FPI என்பதன் விரிவாக்கம்** *[BEQ] [HY-2018]*

(அ) வெளிநாட்டு தனியார் முதலீடு
(ஆ) வெளிநாட்டு தொகுப்பு முதலீடு
(இ) வெளிநாட்டு நேரடி முதலீடு
(ஈ) வெளிநாட்டு செலவாணி தனியார் முதலீடு

**[விடை. (ஈ) வெளிநாட்டு செலவாணி தனியார் முதலீடு]**

**2. சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில் ______ ஆண்டு இந்திய பொருளாதாரத்தில் ஒரு திருப்புமுனையாகும்.** *[HY - '19]*

(அ) 1991 (ஆ) 1998 (இ) 2016 (ஈ) 1992

**[விடை. (அ) 1991]**

**3. புதிய பொருளாதாரக் கொள்கையின் மூன்று முக்கிய தூண்கள் :** *[Mar-2020]*

(அ) GST (ஆ) LPG (இ) PSU (ஈ) SEZ

**[விடை. (ஆ) LPG]**

**4. புதிய தொழிற்கொள்கையை ............... ல் பாரத பிரதமர் அறிவித்தார்.**

(அ) ஜுலை 24, 1991 (ஆ) ஜுலை 22, 1992
(இ) ஜுன் 24, 1991 (ஈ) ஜுன் 20, 1991

**[விடை. (அ) ஜுலை 24, 1991]**

**(ii) கீழ்க்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க.**

**1. கூற்று (A) : தொழிற்கொள்கை 1991யானது இந்தியப் பொருளாதாரத்தில் தாராள மயமாக்கலுக்கு வழிகோலியது.**

**காரணம் (R) : 1991 ஆம் ஆண்டிற்கு முன்பு வைர தொழில் வளர்ச்சி மெதுவாக காணப்பட்டது.** *[BEQ] [Govt. MQP-2018]*

(அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A க்கான சரியான விளக்கம் R
(ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A க்கான சரியான விளக்கம் R இல்லை
(இ) A சரி ஆனால் R தவறு (ஈ) A தவறு ஆனால் R சரி

**[விடை. (அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A க்கான சரியான விளக்கம் R]**

## 2 மதிப்பெண்கள்

**1. பயிர் காப்பீடு என்றால் என்ன?** *[Mar-'19]*

**விடை.** (i) இந்தியாவில் வேளாண்துறை வெள்ளத்தாலும், வறட்சியாலும் அதிகம் பாதிக்கப்படுகின்றது.

(ii) இயற்கைச் சீற்றங்களிலிருந்து விவசாயிகளைப் பாதுகாத்து அடுத்து பருவத்திற்கு தயார் செய்வதற்காக மத்திய அரசு பல்வேறு விவசாய திட்டங்களைக் கொண்டு வந்துள்ளது.

## 3 மதிப்பெண்கள்

**1. உலகமயமாதல் என்றால் என்ன?** *[May-'22]*

**விடை.** உள்நாட்டுப் (இந்தியா) பொருளாதாரத்தையும் ஏனைய உலக பொருளாதாரத்தையும் இணைப்பது உலகமயமாதல் எனப்படும். சுங்க வரிக் குறைப்பு மற்றும் சுங்க வரி தவிர்ப்பு போன்ற

www.Padasalai.Net
www.surabooks.com



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



செயல்பாடுகளின் மூலம் இறக்குமதியை எளிமைப்படுத்துதல், வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) மற்றும் வெளிநாட்டு தொகுப்பு முதலீடுகளுக்கான (FPI) கதவுகளைத் திறந்து வைப்பது போன்ற ஒரு சில நடவடிக்கைகள் உலகமயமாக்குதலின் அளவீடுகள் ஆகும்.

# கூடுதல் வினாக்கள்

## பகுதி - அ

**சரியான விடையைத் தேர்வு செய்யவும் : 1 மதிப்பெண்**

**(i) கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வெளிநாட்டு முதலீடு ஊக்குவிப்பு வாரியம்**

(அ) TPMFB (ஆ) MRTP
(இ) FIPB (ஈ) மேற்கூறிய அனைத்தும்.

[விடை. (இ) FIPB]

**(ii) பட்டியல் I–ல் உள்ளவற்றை பட்டியல் II–உடன் பொருத்திப் பார்த்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையை தெரிவு செய்க.**

**1.**

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| அ. | LPG | i | ஜூலை 24, 1991 பாரத பிரதமர் அறிவித்தார் |
| ஆ. | பிரதம மந்திரி பயிர் காப்பீடு | ii | வெளிநாட்டு முதலீடு ஊக்குவிப்பு வாரியம் |
| இ. | புதிய தொழிற்கொள்கை | iii | 18 பிப்ரவரி, 2016 |
| ஈ | FIPB | iv | தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| (1) | ii | i | iii | iv |
| (2) | iv | iii | i | ii |
| (3) | iv | iii | ii | i |
| (4) | ii | iii | i | iv |

[விடை. (2) அ - iv, ஆ - iii, இ - i, ஈ - ii]

**2.**

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| அ. | இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் | i | 1998 |
| ஆ. | விவசாய மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கி | ii | குளிர்பதன கிடங்கு ஆணை |
| இ. | 1964 | iii | ICAR |
| ஈ | உழவர் கடன் அட்டை | iv | விவசாய கடன் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| (1) | iii | iv | ii | i |
| (2) | ii | i | iv | iii |
| (3) | iv | ii | i | iii |
| (4) | iii | ii | iv | i |

[விடை. (1) அ - iii, ஆ - iv, இ - ii, ஈ - i]

**3.**

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| அ. | சிறப்பு பொருளாதார மண்டலம் | i | நுகர்வோர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படும் வரியாகும் |
| ஆ. | ஏற்றுமதி இறக்குமதி கொள்கை | ii | பலமுனை வரி |
| இ. | பண்டங்கள் மற்றும் பணிகளின் வரி | iii | ஏப்ரல் 2000 |
| ஈ | மதிப்புக் கூட்டப்பட்ட வரி | iv | 1 ஏப்ரல் 2015 |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| (1) | ii | iii | iv | i |
| (2) | iv | iii | i | ii |
| (3) | iii | iv | i | ii |
| (4) | ii | iv | i | iii |

[விடை. (3) அ - iii, ஆ - iv, இ - i, ஈ - ii]

**4. தற்போதைய வரி விகிதங்கள்**

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| அ. | பழங்கள் | i | 18% |
| ஆ. | குளிர்பானங்கள் | ii | 0% |
| இ. | ஐஸ்கீரிம் | iii | 28% |
| ஈ | கைபேசி | iv | 12% |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| (1) | iii | iv | ii | i |
| (2) | ii | iv | i | iii |
| (3) | iv | ii | i | iii |
| (4) | iii | ii | iv | i |

[விடை. (2) அ - ii, ஆ - iv, இ - i, ஈ - iii]

**(iii) கீழ்க்கண்ட கோடிட்ட இடத்திற்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் _______ சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது.**

(அ) 8% (ஆ) 5% (இ) 10% (ஈ) 3%

[விடை. (ஈ) 3%]

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



## பகுதி – ஆ

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி.** **2 மதிப்பெண்கள்**

**1. நிதிப்பற்றாக்குறையின் நிர்ணயம் யாது?** *[BEQ]*

**விடை.** நிதிப்–பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்று சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்று பன்னாட்டு பணநிதி நிர்ணயம் அறிவித்தது.

**2. பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி எப்பொழுது நடைமுறைக்கு வந்தது?**

**விடை.** பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரி 29–3–2017 அன்று பாராளுமன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாளன்று நடைமுறைக்கு வந்தது.

**3. ஏற்றுமதி செயலாக்க மண்டல மாதிரிகளின் பயன்பாட்டை உணர்த்திய நாடு எது? எப்பொழுது?**

**விடை.** (i) ஏற்றுமதி செயலாக்க மண்டல மாதிரிகளின் பயன்பாட்டை உணர்த்திய நாடுகளில் முதன்மையானது இந்தியாவாகும்.

(ii) 1965 ஆம் ஆண்டில் கண்டலாவில் முதல் ஏற்றுமதி செயலாக்க மண்டலம் அமைக்கப்பட்டது.

**4. சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் உள்ளடக்கியுள்ள மண்டலங்கள் யாது?**

**விடை.** சுதந்திர வர்த்தக மண்டலங்கள், தொழில் பூங்காக்கள், பொருளாதார மற்றும் தொழில் நுட்ப முன்னேற்ற மண்டலங்கள், உயர் தொழில் நுட்ப மண்டலங்கள், அறிவியல் மற்றும் புதுமைப் பூங்காக்கள், இலவசத் துறைமுகங்கள், நிறுவன மண்டலங்கள் போல இன்னும் பல.

**5. தொழில் உரிம விலக்களித்தல் பற்றி எழுது.**

**விடை.** 1991–ன் புதிய தொழிற் கொள்கையின் கீழ் தொழிலுக்கு உரிமம் பெறுவதிலிருந்து விலக்களித்தல் மற்றும் சிவப்பு நாடா முறையை முடிவுக்கு கொண்டு வருதலாகும்.

**6. எந்த நோக்கத்திற்காக பணம் மற்றும் நிதித்துறைச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன?** *[BEQ]*

**விடை.** (i) இச்சீர்திருத்தங்கள் வங்கியமைப்பை மிகுந்த திறனுடையதாய் மாற்ற முயற்சித்தன.

(ii) வட்டி வீதங்களில் காணப்பட்ட வேறுபாடுகளைக் களைய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

## பகுதி – இ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடையளி.** **3 மதிப்பெண்கள்**

**1. 1991-க்குப் பின்னர் இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?**

**விடை.** (i) வெளிநாட்டுச் செலாவணியின் கையிருப்பு அதிகரிக்கத் துவங்கியது.

(ii) தொழில்மயமாதல் விரைவாக நடைபெற்றது.

(iii) நுகர்வு முறை மேம்படத் துவங்கியுள்ளது.

(iv) விரைவு நெடுஞ்சாலைகள், மெட்ரோ ரயில், மேம்பாலங்கள், விமான நிலையங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் பெருகி வருகின்றன.

(v) ஆனால் இந்த வசதிகள் ஏழைகளுக்கு எட்டப்படவில்லை.

**2. LPG க்கு எதிரான கருத்துக்கள் யாவை?** *[BEQ]*

**விடை.** (i) தாராளமயமாக்கும் கொள்கை வெளிநாட்டில் உள்ள பெரிய நிறுவனங்களுக்கு வசதியாகிவிட்டது.

(ii) தனியார் மயமாக்குதல், பெரிய நிறுவனங்களின் முற்றுரிமை சக்தியினை ஏற்படுத்தும் இதில் சமூக நீதியை எதிர்பார்க்க முடியாது.

(iii) ஏற்கனவே வளர்ந்த நாடுகள் மேலும் வளர சாதகமாகவும், வளர்ச்சி குறைந்த நாடுகளின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டன.

**3. "தர உத்திரவாதத் திட்டம்" குறிப்பு வரைக.**

**விடை.** (i) தரக் குறியீடு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் பிற முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்திய அரசால் உருவாக்கப்பட்டது.

(ii) இதன்படி 2008 – 09 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(iii) மேலும், தோட்டக்கலை மற்றும் தோட்டக் கலை அல்லாத பொருட்களின் அறுவடைக்குப் பின் நேரிடும் இழப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

(iv) விளை நிலங்களிலிருந்து நுகர்வோரை அல்லது உற்பத்தி பகுதியிலிருந்து அங்காடி வரையிலான ஒருங்கிணைந்த குளிர்பதன மற்றும் பதப்படுத்தும் கட்டமைப்பு வசதிகளை, இத்திட்டத்தின் கீழ் இந்திய அரசு உருவாக்கியது.

## பகுதி – ஈ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.** **5 மதிப்பெண்கள்**

**1. சீர்திருத்தங்களுக்குப் பின் உள்ள விவசாய நெருக்கடிகள் யாவை?**

**விடை. (அ) இடுபொருள்களின் செலவு உயர்வு :**

(i) விதைகளே விவசாயிகளுக்கான மிகப்பெரிய உள்ளீடு ஆகும்.

(ii) தாராளமயமாக்குவதற்கு முன் மாநில அரசாங்கத்திடமிருந்தே விவசாயிகள் விதைகளை வாங்கின.

(iii) தாராளமயமாக்கல் மூலம் இந்தியாவின் விதைகள் சந்தை உலகளாவிய வேளாண் தொழிலுக்கு திறந்துவிடப்பட்டன.

(iv) கட்டுப்பாடுகள் தளர்க்கப்பட்டு, மாநில அரசு நிறுவனங்கள் மூடப்பட்டன.

(v) இதன் விளைவாக, விலைகள் உயர்வு மற்றும் போலி விதைகள் உருவாக்கம் போன்ற பிரச்சனைகள் உருவாகின.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net www.Surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**(ஆ) வேளாண்மை மானியக் குறைப்பு :**
தாராளமயமாக்கல் கொள்கைகள், பூச்சிக்கொல்லி மற்றும் உரமானியத்தைக் குறைத்து விட்டதால் உரங்களின் விலைகள் 300% அதிகரித்தன. மின் கட்டணங்களும் அதிகரித்தன ஆனால் விவசாயப் பொருட்களின் விலை உயரவில்லை.

**(இ) இறக்குமதிச் சுங்க வரி குறைப்பு :**
(i) உலகமயமாக்குதலின் விளைவாக இறக்குமதி மேல் விதிக்கப்பட்ட வரிகள் குறைக்கப்பட்டன.
(ii) மேலும் 1500 க்கும் மேற்பட்ட பொருட்களுக்கான இறக்குமதி வரியும் நீக்கப்பட்டன.
(iii) இதன் விளைவாக, சந்தையில் பொருட்கள் குவிந்து, பருத்தி மற்றும் மிளகு போன்ற பயிர்களின் விலை சரிந்தது.

**(ஈ) கடன் வசதிகளை நிறுத்தி வைத்தல் :**
(i) 1991 க்கு பின்னர் தேசியமயமாக்கப்பட்ட வங்கி உட்பட வணிக வங்கிகளின் கடனளிப்பு முறையில் ஏற்பட்ட பெரும் மாற்றத்தால் விவசாயத்திற்குப் போதுமான கடனுதவி அளிக்க இயலவில்லை.
(ii) விவசாயிகள் வட்டிக்காரரைச் சார்ந்திருக்க வேண்டியதாயிற்று.

**2. பணவியல் மற்றும் நிதித்துறைச் சீர்திருத்தங்களின் விளைவுகளை விரிவாக விளக்கவும்.** *[BEQ]*

**விடை.** (i) இச்சீர்திருத்தங்கள் வங்கியமைப்பை மிகுந்த திறனுடையதாய் மாற்ற முயற்சித்தன.
(ii) வட்டி வீதங்களில் காணப்பட்ட வேறுபாடுகளைக் களைய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவைகளாவன,

**ரொக்க இருப்பு வீதம் :**
(i) 1991ஆம் ஆண்டு நரசிம்மம் குழு பரிந்துரைப்படி, சட்டரீதியான நீர்மை விகிதம் மற்றும் ரொக்க இருப்பு வீதம் குறைக்கப்பட்டது.
(ii) SLR விகிதத்தை **38.5% லிருந்து 25% ஆக குறைக்க** முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
(iii) CRR விகிதத்தையும் **4 ஆண்டுகளில் 3 முதல் 5% ஆக குறைக்க** முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

**வட்டி விகிதத் தளர்வு :**
(i) வைப்புகளுக்கான வட்டி வீதம்.
(ii) வங்கிக் கடன்களுக்கான வட்டி போன்றவற்றை கட்டுப்படுத்தி வந்த இந்திய ரிசர்வ் வங்கி தற்போது தளர்த்தப்பட்டது.
(iii) பொதுத்துறை, தனியார்துறை மற்றும் அயல்நாட்டு வங்கிகளுக்கிடையேயான அதிகப்படியான போட்டியை சமாளிக்க நிர்வாகத்தில் இருந்த தடைகள் நீக்கப்பட்டன.
(iv) செயல்பாட்டிலிருக்கும் வங்கிகளின் வலையமைப்பை பரவலாக்க வங்கிக் கிளைகளுக்கான உரிமம் தளர்த்தப்பட்டது.
(v) புதிய கிளைகள் கண்டறிய மற்றும் சிறப்புகிளைகளைத் திறக்க வங்கிகளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டன.
(vi) புதிய தனியார் துறை வங்கிகள் தொடங்குவதற்கு வழிமுறைகள் வழங்கப்பட்டன.
(vii) வராக்கடன் மற்றும் சொத்து மதிப்பினை கணக்கிட புதிய விதிமுறைகள் வகுக்கப்பட்டன.

❖ ❖ ❖

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

**11** ஆம் வகுப்பு

# உடனடித் தேர்வு ஆகஸ்ட் - 2022

## பொருளியல் (விடைகளுடன்)

பதிவு எண்

| | | | | | |
|---|---|---|---|---|---|

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20 × 1 = 20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** "நாடுகளின் செல்வம் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை" என்ற நூலின் ஆசிரியர் :
(அ) ஆல்ஃபிரட் மார்ஷல் (ஆ) ஆடம் ஸ்மித்
(இ) இலயனல் ராபின்ஸ்
(ஈ) பால் அ சாமுவேல்சன்

**2.** விற்பனை செய்யும் பொருட்களை எதனால் பெருக்கினால் மொத்த வருவாய் கிடைக்கும்?
(அ) விலை (ஆ) மொத்தச் செலவு
(இ) இறுதி சமநிலை வருவாய்
(ஈ) இறுதி சமநிலைச் செலவு

**3.** நுகர்வோர் சமநிலையில் இருக்கும்போது இறுதிநிலை பயன்பாடானது ________ இருக்கும்.
(அ) குறைவாக (ஆ) எதிர்மறையாக
(இ) சமமாக (ஈ) கூடுதலாக

**4.** சாதாரண தரவரிசைப் பயன்பாட்டை எவ்வாறு அளவிடலாம்?
(அ) தரப்படுத்துதல்
(ஆ) எண்ணிக்கைப்படுத்துதல்
(இ) வார்த்தைப்படுத்துதல்
(ஈ) இவற்றுள் எதுவுமில்லை

**5.** கீழ்க்கண்டவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல?
(அ) குறை அளிப்பு
(ஆ) இயங்கும் தன்மையுடையது
(இ) பலவகைப்படும்
(ஈ) இயற்கையின் கொடை

**6.** நீண்ட கால உற்பத்தி சார்பு எதன் மூலம் அறியப்படுகிறது?
(அ) தேவை விதி (ஆ) அளிப்பு விதி
(இ) விகித அளவு விளைவு விதி
(ஈ) மாறும் விகித விளைவு விதி

**7.** தனக்குச் சொந்தமான வளங்களை நிறுவனத்திற்கு செய்யும் செலவு ________ .
(அ) உண்மைச் செலவு (ஆ) வெளியுறு செலவு
(இ) பணச் செலவு (ஈ) உள்ளுறு செலவு

**8.** இறுதிநிலை வருவாய் என்பது ஏற்கனவே உள்ள ________ உடன் கூடுதலாகப் பெறுவது.
(அ) மொத்த விற்பனை
(ஆ) மொத்த வருவாய்
(இ) மொத்த உற்பத்தி
(ஈ) மொத்த செலவு

**9.** முற்றுரிமை போட்டியின் முக்கிய பண்பு ________.
(அ) ஒரே விதமான உற்பத்தி
(ஆ) விற்பனைச் செலவு
(இ) ஒரு விற்பனையாளர்
(ஈ) ஒரு வாங்குபவர்

**10.** முதலீட்டை பயன்படுத்துவதற்கான வெகுமதி :
(அ) வாரம் (ஆ) கூலி
(இ) வட்டி (ஈ) இலாபம்

**11.** மக்கள் தொகையின் இயல்புகளைப் பற்றிய அறிவியல் ரீதியான ஆய்வு :
(அ) இட அமைப்பியல் (ஆ) மக்கள் தொகையில்
(இ) புவியியல் (ஈ) தத்துவவியல்

**12.** வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் வரிசையில் இந்தியாவின் இடம் :
(அ) நான்கு (ஆ) ஏழு
(இ) ஐந்து (ஈ) பத்து



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**13.** இந்தியாவின் கள்ளிக்கோட்டைகு வாஸ்கோடாகாமா வருகை புரிந்த வருடம் :

(அ) 1498 (ஆ) 1848 (இ) 1489 (ஈ) 1849

**14.** வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் :

(அ) தனியார் சமூக நலம் (ஆ) சமூக நலம்

(இ) வருவாய் ஈட்டுதல் (ஈ) தொழில் முற்றுரிமை

**15.** புதிய வெளிநாட்டு வர்த்தக கொள்கை ________ ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

(அ) 2000 (ஆ) 2002 (இ) 2010 (ஈ) 2015

**16.** விவசாய உற்பத்தி அங்காடிக் குழு ஒரு ________ ஆகும்

(அ) ஆலோசனைக் குழு (ஆ) சட்டப்பூர்வமான குழு

(இ) (அ) மற்றும் (ஆ) (ஈ) இவற்றுள் எதுவுமில்லை

**17.** ஊரகப் பொருளாதாரத்தில் வேளாண்மை பிரச்சனைக்குத் தொடர்புடையதாக கருதப்படுவது :

(அ) மோசமான தகவல் தொடர்பு

(ஆ) சிறிய அளவு நில உடைமை

(இ) ஊரக ஏழ்மை (ஈ) மோசமான வங்கிகள் செயல்பாடுகள்

**18.** தமிழ்நாட்டின் எம்மாவட்டத்தில் பாலின விகிதம் அதிகமாக உள்ளது?

(அ) நாகப்பட்டினம் (ஆ) நீலகிரி

(இ) திருச்சி (ஈ) தஞ்சாவூர்

**19.** சிமெண்ட் உற்பத்தியில் தமிழ்நாடு, இந்தியாவில் எந்த நிலையில் உள்ளது?

(அ) மூன்றாம் (ஆ) நான்காம்

(இ) முதல் (ஈ) இரண்டாம்

**20.** ஒரு சாராத மாறியுடன் கூடிய சார்பு ________ எனப்படுகிறது.

(அ) பல மாறிச் சார்பு (ஆ) இரு மாறிச் சார்பு

(இ) ஒரு மாறிச் சார்பு (ஈ) பல்லுறுப்புச் சார்பு

## பகுதி - II

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 **-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **[7 × 2 = 14]**

**21.** பொருளியல் என்றால் என்ன?

**22.** சமநோக்கு வளைகோடுகள் என்பதன் பொருள் கூறுக.

**23.** உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்துக.

**24.** மூழ்கும் செலவுகள் என்றால் என்ன?

**25.** பகிர்வின் வகைகள் யாவை?

**26.** தொழில்நுட்பத் தெரிவு பற்றி சென் கூறுவது என்ன?

**27.** பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள் யாவை?

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**28.** இந்தியாவில், ஊரக மின்மயமாக்கலை தடுக்கும் பாதக காரணிகள் இரண்டை குறிப்பிடுக.

**29.** தமிழ்நாட்டின் அணுமின் நிலையங்கள் எவை?

**30.** அளிப்பு கோடு மேல்நோக்கி செல்வதன் காரணம் என்ன?

## பகுதி - III

**குறிப்பு : எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40-**க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **[7 × 3 = 21]**

**31.** பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?

**32.** சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?

**33.** இறுதிநிலை வருவாய் பற்றி குறிப்பு வரைக.

**34.** பொருளாதார முன்னேற்றம் – வரையறுக்கவும்.

**35.** மனித வளர்ச்சிக் குறியீட்டெண்ணைக் கணக்கிட உதவும் குறியீடுகளைக் கூறுக.

**36.** GST என்றால் என்ன? அதன் நன்மைகளை எழுதுக.

**37.** MUDRA வங்கியின் நோக்கங்களைப் பட்டியலிடுக.

**38.** சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான செயல்பாடுகளை விவரிக்கவும்.

**39.** மூலதனத்தின் சிறப்பியல்புகள் யாவை?

**40.** தமிழ்நாட்டில் உள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் யாவை?

www.Padasalai.Net

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **[7 × 5 = 35]**

**41.** (அ) பொருளியலின் தன்மை மற்றும் எல்லையை விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) ஊரகப் பொருளாதாரத்தின் பிரச்சனைகளை ஆராய்க.

**42.** (அ) தேவை விதியினை வரைபடம் கொண்டு விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) முற்றுரிமை போட்டியில் விலை மற்றும் உற்பத்தி அளவைத் தீர்மானிப்பதை வரைபடத்துடன் விவரிக்கவும்.

**43.** (அ) சம அளவு உற்பத்தி கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரிக்கவும்..

**44.** (அ) குறுகிய கால செலவுக் கோடுகளை தகுந்த வரைபடத்துடன் விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரிக்கவும்.

**45.** (அ) நிறைவுப் போட்டியின் இயல்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?

www.surabooks.com